தமிழாயிரம்

இரா. இளங்குமரனார்

தமிழாயிரம்

இரா. இளங்குமரனார்

திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101
தொலைப் பேசி : 0431-2685328

நூற்குறிப்பு

நூற்பெயர்	**தமிழாயிரம்**
ஆசிரியர்	இரா. இளங்குமரனார்
மொழி	தமிழ்
பொருள்	வாழ்வியல்
பதிப்பு	2013 சனவரி
பக்கம்	ix + 219
எழுத்து	13 புள்ளி
தாள்	13.7 வெள்ளை மேப்லித்தோ
அளவு	1/8
படிகள்	1200
விலை	உருபா. 120/-
உரிமை	ஆசிரியர்க்கு
வெளியீடு	திருவள்ளுவர் தவச்சாலை
நூலாக்கம்	"தி பிரிண்டிங்கு அவுசு" திருச்சி - 23

நூல் கிடைக்குமிடம்:

♦ **திருவள்ளுவர் தவச்சாலை**
அல்லூர் 620 101, திருச்சி மாவட்டம்,
தொலைப்பேசி எண் : 0431 - 2685328

திரு. இராமசாமி பல்கலைக்கழக (SRM)
வேந்தர் - தமிழ்ப்பேராய நிறுவுநர் -
மேதகு **பச்சமுத்து** அவர்கள்

திரு. இராமசாமி பல்கலைக்கழகத் (SRM)
துணை வேந்தர் - தமிழ்ப்பேராயத் தலைவர் -

மேதகு **மூ. பொன்னவைக்கோ** அவர்கள்

பாரிவேந்தர் பைந்தமிழ் விருது வழங்குதலும் பெறுதலும்

நூல்வரவு

'தமிழ்' பற்றிய ஆயிரம் குறள்களையுடைய இந்நூல் 'தமிழாயிரம்' எனப் பட்டது.

தமிழ் என்பது பல பொருள் ஒருசொல். அது தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு, தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், தமிழர் கலைகள், தமிழர் போர் முறை, தமிழர் அரசு, தமிழர் அகம் புறமாம் வாழ்வியல் ஆகிய அனைத்தும் சுட்டும் அமிழ்தச் சொல்.

'தமிழ்' என்னும் பெயரிய என் நூலில் இப்பொருள்கள் உண்மை, சான்றுகளுடன் காட்டப்பட்டுள!

தமிழாயிரத்தில் முதல் ஐந்நூறு குறள்கள், அடிமுடி (அந்தாதி) அமைவின. பின் ஐந்நூறு குறள்கள், தனித்தனி நிற்பன.

"ஆயிரம்" என்னும் இலக்கிய வகைமையைத் தமிழுலகுக்கு வழங்கிய பெருமையர் வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளார்! ஆயிரப் பெயரில் பல நூல்கள் இயற்றியவரும் அவர்.

தமிழில் முதற்பா வெண்பா; வெண்பாவில் முதற்பா குறுவெண்பாட்டு எனப்படும் குறட்பா. அப்பாடலில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர் வள்ளுவ வான் சுடர்! அதனால், அவர் பெயர்களுள் ஒன்று முதற்பாவலர் என்பது ஆயிற்று

திருக்குறள் தோய்வு உந்திய வகையினால் யான், குறள் யாப்புக் கொண்டதன்றி வேறன்றாம்! அதன் செறிவும் செம்மையும் நோக்க, செங்கதிர் ஒளியை வாங்கிய கோளாம் வெண்மதிப் பொழுதில் மின்மினி ஒளி செய்வது போல்வதாம் இத்தமிழாயிர வரவு! அப்படி யாயின், நூலென இயற்றுவானேன் எனின், (அடக்கமாக) அக்குறளுக்குப்

பெருமை சேர்க்கும் வகையால் **இவ்வெள்ளியநூல்** இயற்றப்பட்ட தெனலாம்! அன்றியும், முப்பாலார் காலத்தில் காணாதவை எத்தனை எத்தனை கிளர்ந்துள?

மாறாப் பொருளையே மாண்புறக் கூறியவர் மாப்பேராசிரியர் வள்ளுவர்! மாறும் பொருளும் உண்டுதானே! அவர் படைப்புக் கால நிலைக்கும் இற்றை நிலைக்கும் உள்ள வாழ்வியல் அரசியல் அறிவியல் கலையியல் மாற்றங்கள் எத்தனை எத்தனை! அவற்றைப் பற்றிக் கருதுதல் வேண்டுவது தானே! அதனால் இயற்றப்பட்ட தென்க!

பலகாலங்களில் பல சூழல்களில் எழுதப்பட்ட குறட்பாக்கள் மூவாயிரத்திற்கு மேற்பட்டவை. அவற்றுள் முதற்கண் தொகை செய்யப்பட்டவை 'தமிழாயிரம்', பன்மணியாயிரம் என்னும் பெயர் கொண்டவை. ஒன்றன்பின் ஒன்றாக வெளிவருவன.

இந்நூல், தவச்சாலை வெளியீடாக வருவது. அதற்குரிய பொருட்கொடை தேடிவந்த திருவாக வாய்த்தது, **திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக் கழகம்** நிறுவியுள்ள தனிப்பெரும் **தமிழ்ப்பேராய விருதுக்** கொடையாகும். சாகித்திய அகாதமி விருதொப்பவும் மேம்படவும் வழங்குவனவற்றுள் தலைப்பட்டது, அப்பல்கலைக்கழக **வேந்தர் மேதகு பச்சமுத்து** அவர்கள் பெயரால் வழங்கப்படும் **பாரிவேந்தர் பைந்தமிழ்** விருதாகும். அது, **'வாழ்நாள் வீறு** (சாதனை) பெற்றோர்க்கு வழங்குவது'. முதலாண்டின் முதல் விருதாக எளியேனுக்கு அது வழங்கப்பட்டது. தமிழால் வந்தது தமிழுக்கே என்னும் திட்டத்தில், அவ்விருது வரிசை நூல்கள் தொடரும்! **அவ்வரிசையில் முதல்நூல் இத் 'தமிழாயிரம்'** என்பதை நன்றியொடு கூறிக்கொள்கிறேன்.

குறள் மட்டும் எழுதியிருந்த யான், அதனைச் சிலர் படிக்கும் போது 'ஐயம்' கிளத்துதல் அறிந்தேன். அதனால் சுருங்கிய தெளிவுரையும் வேண்டும் எனக்கருதினேன். அச்சிடும் போது, ஈரடிக் குறளுக்கு ஈரடி உரையே சாலும்; அச்சிட்டுப் பொருள் நேருக்கு நேர் காண வாய்ப்பின் பொலிவாம் என உட்கொண்டு அவ்வாறே சுருக்குவ சுருக்கினேன். அச்சகப் பெருமகனாருக்கும் கணினிப்படுத்தினார்க்கும் கூடுதல் பணி எனினும் இனிதேற்றுச் செய்தமை, பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவாகும்!

பெரிதும் மெய்ப்புப் பார்ப்பதில் பெருந்துணையாக வாய்த்த பெருமையர் முனைவர் திருமிகு பி. தமிழகனார்! அவர் மெய்ப்புப் பார்க்கும் அளவில் அமையாமல், அதிகார நிரல், பாடல் அகர நிரல் ஆயவற்றையும் தாமே செய்வதாக ஏற்றுக் கொண்டு, அவ்வாறே செய்தமை நெஞ்சார்ந்த நேயத்திற்கு உரியதாம்!

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்
இரா. இளங்குமரன்
தி.பி 1. தை - 2044
(14.01.2013)

தமிழாயிரம்

அதிகாரங்கள்

		பக்கம்
1.	தமிழ்ப் பழமை	1
2.	தமிழ்த் தோற்றம்	3
3.	எழுத்துவரைவு	5
4.	தமிழழிப்பு	7
5.	மொழிக் காவல்	9
6.	தொல்காப்பியம்	11
7.	அழி செயல்	13
8.	இன அழிப்பு	15
9.	தமிழ்ப் பிறப்புணர்வு	17
10.	தமிழனாய் நில்	19
11.	தமிழ் எழுத்து	21
12.	கணக்காயன்	23
13.	உயிரியக்கம்	25
14.	மெய்யியல்	27
15.	சொல்நிலை	29
16.	எழுச்சியுறல்	31
17.	நிலப் பறிப்பு	33
18.	களப்பணி	35
19.	இனக் காப்பு	37
20.	ஆள்வோர் துணையால் அழிப்பு	39
21.	அடிமைப்படல்	41
22.	எல்லாம் அழிவு	43
23.	அகத்தியப் புரட்டு	45
24.	பின்னூற் பிழை	47

பக்கம்

25. உரை நிலை 49
26. உரைப் பெருமை 51
27. உரையால் நலம் 53
28. தமிழ் வளர்த்தார் 55
29. காப்பும் அழிப்பும் 57
30. மொழி வளர்த்தல் 59
31. காக்கும் வகை 61
32. மொழிக் கேடர் 63
33. இனத்தரின் இனக்கேடு 65
34. கயமைத் தமிழர் 67
35. ஆள்பவர் கேடு 69
36. உழைப்பை ஒழித்தல் 71
37. பகை யொழிக்க 73
38. தனியாட்சி 75
39. விழிப்புறல் வேண்டும் 77
40. தனிநாடு தேடு 79
41. மீட்டெடுக்கும் மீட்பர் 81
42. நம் கேடு 83
43. தமிழ்வாழ வழி 85
44. எழுச்சிகொள் 87
45. வெல்லும் வழி 89
46. தமிழ் முகவரி 91
47. மொழிக் கலப்பு 93
48. ஓயா உழைப்பு 95
49. அயலாற் கிடம் கொடேல் 97
50. இரங்குவ செய்யற்க 99

	பக்கம்
51. தாய்மொழி வழிக் கல்வி	101
52. கலைச் சொல்	103
53. கலைவளம் - 1	105
54. கலைவளம் - 2	107
55. கலைவளம் - 3	109
56. கலைவளம் - 4	111
57. சொல்வளம் - 1	113
58. சொல்வளம் - 2	115
59. சொல்வளம் - 3	117
60. சொல்வளம் - 4	119
61. முகம்	121
62. மெய்	123
63. வாய்	125
64. மூக்கு	127
65. கண்	129
66. செவி	131
67. மூளை	133
68. கொள்கை	135
69. தன்னம்பிக்கை	137
70. மேன்மை	139
71. அன்பு	141
72. இன்சொல்	143
73. சொல்லுதவி	145
74. சொல் வகை	147
75. புரிதல்	149

	பக்கம்
76. நட்பு	151
77. கெடு நட்பு	153
78. நல்லோர் நலம்	155
79. கூட்டுறவு	157
80. கூட்டுக்குறை	159
81. தாய்மை - 1	161
82. தாய்மை - 2	163
83. காதல் வாழ்வு	165
84. வாழ்க்கைத் துணை	167
85. வளர்ச்சி	169
86. குடும்பம்	171
87. தற்கேடு - 1	173
88. தற்கேடு - 2	175
89. தற்கொலை	177
90. தற்கொடை	179
91. குடியரசு	181
92. ஒருமைப்பாடு	183
93. நாட்டு நலம்	185
94. தன்னலம்	187
95. குடி	189
96. வசை வாய் - 1	191
97. வசை வாய் - 2	193
98. தொலைக் காட்சி - 1	195
99. தொலைக்காட்சி - 2	197
100. தொலைக் காட்சி - 3	199

******

முதல் நூறு

1. தமிழ்ப் பழமை

1. கதிர்ப்பிறப்புக் காட்டும் கலைத்தமிழைக் கண்போல்
மதிக்கும் மதியே மதி.

2. மதியோடு தென்றல் மகிழ்ந்து குலவக்
குதித்ததே தண்டமிழ் கூறு.

3. கூறும் மலைதோன்றிக் கூடாரக் காடுதவழ்
பேறுடையாள் பேணு தமிழ்.

4. தமிழென்ன எண்ணேல்; தனிவான் பொழிந்த
அமிழ்தென்ன நன்றாய் அறி!

5. அறிந்தால்தான் "கற்றோன்றி மண்தோன்றாக் காலக்
குறிப்பறிவோம்" கொண்டிடுவோம் கோள்.

6. கோளழிக்கு முன்னர்க் குமரித்தாய் பெற்றதமிழ்
நாளென்றே நல்லுலகை நாடு.

7. நாடெல்லாம் கல்லாகக் காடாகக் காட்சிதந்த
பீடு நாள் அன்னை பிறப்பு.

8. பிறப்பவள் உற்றநாள் எத்தாய் பிறந்தாள்
சிறப்பால் முதற்றாயாள் சீர்.

9. சீர்த்த மொழிகள் செழிக்கப் பிறந்தவளே
சேர்த்த கொடையாம் தெளி.

10. தெளிந்தால் தமிழ்ப்பழமை தேர்வாய்! களிப்பாய்!
நெளியாய் புழுவாக நீ!

1. தமிழின் பழமை

1. கதிர்ப்பிறப்பு - கதிரோன் தோன்றிய நாளில் தோன்றிய பிறப்பு. கலைத்தமிழ் - கலைமலி தமிழ்; மதி - அறிவுடைமை.

2. குலவ - விளங்க; குதித்தது - தண்மையும் இனிமையும் தவழத் தோன்றியது.

3. கூடாரக்காடு - செறிவான முல்லைக் காடு. பேணுதமிழ் - இயற்கையொடு பிணைந்து பேணத்தக்க தமிழ்.

4. தமிழைப் பிற மொழிகளைப் போல் நினையாதே; இயற்கை சுரக்கும் வானமிழ்தாம் மழையை ஒப்பது.

5. கல்தோன்றி - குறிஞ்சி (மலை) தோன்றி; மண் தோன்றா - முல்லை நிலம் தோன்றாத நாள். கோள் - குறிக்கோள்.

6. கோள் அழிக்கு முன்னர் - கடல் கோள் அழிப்பதற்கு முன்பு. குமரித்தாய் பெற்ற தமிழ் - குமரிக் கண்டத்துத் தோன்றிய தமிழ்.

7. மக்களினமோ, மொழியோ தோற்றமுறாக் காலத்து உலகின் முன்னைத் தோன்றிய மொழி தமிழ். பீடு - பெருமை.

8. தமிழ் பிறந்த நாளில் எம்மொழியும் பிறந்த தில்லை. ஆதலால், உலக முதல்மொழி அதுவே.

9. பின்னைத் தோன்றிய மொழிகள் செழிக்க முன்னைப் பிறந்தது தமிழ். அவள் கொடையே பிற மொழிகள்.

10. தமிழ்ப் பழமை அறிந்தால் மகிழ்வாய்! உன்வீறு உணர்ந்து புழுவாய் நெளியாமல் புறாவாக வானில் பறப்பாய்!

2. தமிழ்த் தோற்றம்

1. நீயென்ன நானுந்தான்! நீள்தமிழ் போற்றாமல்
சீயென்று தள்வோமோ சேர்ந்து?

2. சேர்ந்த தமிழன் செறிந்த குறிப்புகளால்
நேர்ந்து மொழிந்தான் நினைத்து.

3. நினைத்த முகக்குறி கைக்குறி நேர்ந்த
வினைக்குறி என்றறி வித்து.

4. வித்து முளைத்து விளைவாகும் நீர்மைபோல்
கொத்தாய் முளைத்த குறி.

5. குறியே ஒலியாய் ஒலியின் பொருளாய்
நெறியாய் அமைந்தது நேர்.

6. நேரில் அறிந்ததை நேரில் இலாதாரும்
நேரறிய நீண்டது நா.

7. நாவால் ஒலித்தான்; மிழற்றினான்; பின்னதுதான்
பூவாய் மலர்ந்த பொழில்!

8. பொழில்தான் பொதுமப் பொழிமொழியாய்ப் பல்லோர்
வழியே வளர்ந்தாள் தமிழ்.

9. தமிழென்ப தென்ன 'அமிழ்தமிழ்' தென்ன
இமிழ்த்த இசையே இது.

10. இதுநாள் வரையும் இயனிலை மாறா
ததுதான் இருத்தல் அறி.

2. தமிழின் பெருமை

1. தமிழ்ப் பெருமை உணர்ந்தால் நாம் அதனைப் பேணிக் காவாமல் ஒதுக்கித் தள்ள மாட்டோம்.

2. தமிழன் பிறந்து ஒன்று கூடித் தன் குறிப்புகளால் (- முகக்குறி - கைக்குறி - ஒசைக்குறி -) மொழியைத் தொடங்கினான்.

3. வினைக்குறி - செய்கைக் குறி; சைகைக் குறி; இவற்றால் உளக் கருத்தை வெளிப்படுத்தினான்.

4. விதை தக்க வகையில் முளைத்து விளைவு தருவதுபோல் அக்குறிகள் முத்தமிழாய்க் கிளர்ந்தன. நீர்மை - தன்மை.

5. குறி, வாயொலி யாயது; அவ்வொலி பொருள் குறிப்பதாகியது; மொழிக்குரிய முறைமையோடு செம்மையாய்த் தோன்றியது.

6. நேரில் அறிந்த காட்சியால் உண்டாகிய மொழியும் பொருளும் நேரில் அறியாரும் அறியச் செய்தது நாவு. (சொல்).

7. நாவால் சொல்லைக் கூறினான்; இசையாய் எழுப்பினான்; பூ மலர்ந்த பொழில் போல் மொழி தோற்ற முற்றது.

8. பொழில் - சோலை, பொதுமல் - செறிதல். ஒருவர் ஒருவர் கூறிப் பலரும் வழங்கும் மொழியாயது.

9. தமிழ் என்பது, அமிழ்து எனப்பல்கால் கூறியதனால் அமைந்ததோர் பெயருடையது. தமிழே அமிழ்து; அமிழ்தே தமிழ்.

10. பேச்சுவழக்கு நூல் வழக்கு என்னும் இருவகை வழக்குகளிலும் தன்னியல் மாறாமல் வழங்குவதை அறிக.

3. எழுத்துவரைவு

1. அறிந்தான் ஒலியால்; அதன்பெயர் சொன்னான்;
அறியானும் கேட்டான் அதை.

2. அதையே பலரும் அறிந்து பலுக்க
விதையாய் விளைந்த விரிந்து.

3. விரிந்து பரவி வினைபெயர் என்னத்
தெரிந்து மொழிந்தான் தெரி.

4. தெரிந்தவன் சொன்னான்; தெரியானும் தேர்ந்தான்;
வரிந்தான் வரிகளாய் வாய்த்து!

5. வாய்த்த மலையே வனையோடே ஏடென்னக்
காய்த்துக் கனிந்ததாம் காண்.

6. காணவும் காட்டவும் கற்கவும் காலமெலாம்
பேணவும் செய்தான் பெரிது.

7. பெரிது சிறிதாய் வளைவொடு கீற்று
வரைந்து படித்தான் வளர்ந்து.

8. வளர்ந்த நிலையில் வரைந்தவை கட்டக்
கிளர்ந்த சுவடியாம் கீற்று.

9. கீற்றோலைக் கட்டால் கிடைத்த கொடையேதான்
போற்றுதமிழ்ச் செம்மொழிப் பொற்பு.

10. பொற்புக் குறையாமல் போற்றி உரைகண்டார்
அற்புத்தான் காவல் அரண்.

3. எழுத்தின் வளர்ச்சி

1. ஒலியால் உரைத்தான்; பெயர் வினை என அவன் சுட்டியதை அறியாதவனும் கேட்டு அப்படியே உரைத்தான்.

2. அதனைப் பலரும் விடாமல் - மாற்றமில்லாமல் - கூறிய அடிப்படை மாறாமல் மொழியாம் விளைவு விரிவுற்றது.

3. சொல்லைக் கேட்டுக் கேட்டுப் பொருளறிந்து, இது பெயர்ச் சொல், இது வினைச் சொல் என்னத் தெரிந்து கொண்டான்.

4. தெரிந்தவனால் தெரியானும் அறிந்தான்; சொல்லை ஒலி வடிவில் கண்டதுடன் வரிவடிவிலும் வாய்ப்பாக அமைத்தான்.

5. மலைப் பாறைகளிலும் வனைந்த பானை ஓட்டிலும் எழுதியவன் பனை, தாழை ஓலையாம் ஏடுகளிலும் எழுதினான்

6. எழுதியதைக் கண்டான்; பிறர்க்கும் காட்டினான்; கற்பித்தான்; இடையீடு இல்லாமல் இம்முறையைப் போற்றினான்.

7. வளைவு சுழி கீற்று (நேராக அமைந்தது) என வடிவுகள் அமைத்துப்படித்து அறிவில் வளர்ச்சி யுற்றான்.

8. அறிவால் வளர்ந்த நிலையில் ஓலையில் வரைந்ததைச் சுவடியாய் அமைத்துப் பிதிராமல் கட்டிப் போற்றினான்.

9. இன்று செவ்வியல் மொழியாகத் தமிழ் விளங்குவதற்குக் காரணம் அக்கீற்றால் அமைந்த சுவடிக் கட்டுகளேயாம்.

10. மூலவடிவில் (செய்யுளில்) இருந்தவற்றுக்கு உரை கண்டதே அவற்றை அழியாமல் காத்த காவல் சிறப்பாயிற்று. அற்பு - அன்பு.

4. தமிழழிப்பு

1. அரணாக நின்ற அறிவறிந்த சான்றோர்
பரணை நினைத்துப் படி.

2. படித்தும் படியெடுத்தும் பாராட்டிக் கற்றும்
படிப்பித்தும் காத்தார் பலர்.

3. பலர்காத்தும் காவாமல் பாழாய் விடுத்தார்
சிலரால் சிதைந்தன மிக்கு.

4. மிக்க கலைநூல்கள் மேதக்க வாழ்வியல்கள்
ஒக்க அழிந்த ஒருங்கு.

5. ஒருங்கழித்த கேட்டில் ஒருபாதி நீரில்
நெருப்பில் விடுத்த நிலை.

6. நிலைத்தவை தாமும் நெடிதழிய வைத்தார்
புலைத்தன ஆரிய ரே.

7. ஆரியரால் போயதமிழ் ஆரறிய வல்லாரால்
பேரழிவே இன்றுவரை பேசு.

8. பேச்சிழந்த ஆரியத்தால் பேசுதமிழ்ப் பேரழிப்பு
மூச்சிழந்து போகும் முறை.

9. முறைகேடாய்க் கோயிற்குள் மூண்டெரிக்கும் கேடு
முறையிட்டும் தீரா முடிவு.

10. முடியும் தமிழென்ன மூதாய்வு சொல்லத்
துடியாத் தமிழர் துரும்பு.

4. தமிழுக்கு ஆய அழிசெயல்

1. ஏடு எழுதியும் ஏட்டைப் படியெடுத்தும் குடிசைவீட்டுக் கூரைப் பரண்களில் வைத்துக் காத்ததை எண்ணிப் படிக்க.

2. படியெடுத்துப் பாதுகாத்தும் படித்தும் படிப்பித்தும் காத்த பலரையும் நினைக்க.

3. பலர் காத்தாலும் சிலர் ஏடுகளைக் காக்காமல் சிதையவிட்டார். அதனால் அழிந்த நூல் பல.

4. பல்வேறு கலைநூல்களும் வாழும் நெறிகாட்டும் அறநூல்களும் காவாமையால் சிதைத்து அழிந்தன.

5. இயல்பாகச் சிதைத்த நூல்களைப் போல் வெள்ளப் பெருக்கிலும் எரிநெருப்புக் கேட்டிலும் அழிந்தன மிக.

6. அழியாமல் நின்ற நூல்களுள் பலவும் வேதிய வேள்வியர் ஆகுதி செய்தல் என்னும் பாவச் செயலால் பாழாக்கியவை பல.

7. ஆரியத்தால் அழிபட்ட நூல்களைக் கணக்கிட இயலாது. இன்று வரை அது தொடர் கதையாகவே உளது.

8. பேச்சு வழக்கு அற்ற தங்கள் மொழிபோல் தமிழர் பேச்சு வழக்கும், மூச்சு இழந்து போகச் செயல்பட்டனர்.

9. கோயிற்குள் வேதியம் புகுந்து வாரப்பாடல் வரிப்பாடல் அழித்த கேட்டை எவரிடம் முறையிடுவது?

10. செத்த மொழியுள் தமிழும் ஒன்றாகிவிடும் என உலகம் உணரக் காட்டியும், அதைக் கேட்டுத் துடியாத் தமிழர் துரும்பர்.

5. மொழிக் காவல்

1. துரும்பும் இரும்பாகக் கண்டும், துருவாம்
இரும்பானார் என்னே இவர்.

2. இவர்பாட்டன் பாட்டன் இலக்கணப் பாட்டன்
அவன்சொன்னான் ஆயிரம் நூல்.

3. நூலழிந்த கேட்டை நுவலடி யார்க்குநலார்
பாலறிய லாகும் படித்து.

4. படித்தவர் யாப்புக் கருங்கலமாம் நூலைப்
படித்தாலும் காண்பார் உணர்ந்து.

5. உணர்ந்தாயேல் ஓயா தொழியாது மீட்க
இணைந்துழைக்க இன்றேனும் எண்.

6. எண்ணுவார் எண்ணுக; திண்ணிதாய் எண்ணினால்
திண்ணமாம் வெற்றித் திரு.

7. திருத்தமிழைத் தீந்தமிழைத் தீராமல் காத்தல்
திருத்தொண்டாய்த் தேர்ந்து தெளி.

8. தெளிந்து துறைதோறும் தேர்ந்து நூலாக்கி
அளிப்பார் அருள்வார் அவர்.

9. அவரேதாம் சாவாத வாழ்வினர் ஆவார்;
அவரேதாம் தெய்வம்ஆ வார்.

10. அன்னவர் தொண்டுதான் அன்னை உயிர்காக்கும்
நன்னர் அமிழ்தாம் நயன்.

5. தமிழ்மொழியைக் காக்கும் வகை

1. துரும்பு போலும் மொழியும் இரும்புபோல் வலிமையுற இரும்பு மொழியில் துருவேற விட்டவர் எத்தகையர்?

2. தமிழரின் முந்தையர் நூல்களையெல்லாம் தொல்காப்பியன் சுட்டியதை அறிந்து இழப்பை எண்ணக் கூடாதா?

3. அத் தொல்காப்பிய வழியே அறியாவிடினும், சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் சுட்டிக் கூறியதால் அறியலாமே!

4. மேலும் யாப்பருங்கல விருத்தியுரையால் நாம் இழந்த நூல் பெருக்கை எளிதில் அறிய முடியுமே.

5. இழப்பு நூல்களையும் கலைகளையும் மெய்யாக உணர்ந்தால் இன்றேனும் அயராது பாடுபட்டு மீட்க வேண்டும் அல்லவோ!

6. எவர் எண்ணவேண்டும்? கலைவல்லார் நூல்வல்லார் உறுதியாக எண்ணினால் திண்ணமாக மீட்டெடுக்க முடியும்.

7. வளமையும் இனிமையும், மேலும் இழக்காமல் காத்தலும் பெருக்கலும் ஓயா ஒழியாத் தொண்டாகக் கொள்க.

8. தாம் தேர்ச்சி கொண்ட துறைகளிலெல்லாம் துறை நூலாக்கம் புரிவார் எவரோ, அவரே மொழிகாக்கும் அருளாளர்.

9. அவ்வாறு அழியா நூல்களை ஆக்குவார் தாமும் அழியார்; நூல் போல் அழியாத தெய்வ வாழ்வினர் அவர்.

10. நூலாக்கம் செய்து தமிழைக் காத்து வளமோங்கச் செய்வாரே அன்னைத் தமிழை அமிழ்தால் வளர்க்கும் அமிழ்தர்.

6. தொல்காப்பியம்

1. நயன்மிக்க காப்பியனின் நற்காப்பாம் நூலே
பயன்செய்யும் பல்படை பார்.

2. பார்க்கும் அகர முதலாம் எழுத்துகள்
தேர்ந்தமுப் பஃதுடன் மூன்று.

3. மூன்றதி காரம் முறையாக ஓதினால்
ஏன்றநிலை நிற்பார் இனிது.

4. இனிதுறும் வாழ்க்கை இலக்கணம் ஏற்றுக்
கனிந்த மொழிதான் எது?

5. எதுவும் எழுத்துடன் சொல்லே உரைக்க
இதுவே பொருளுரைத்த தாம்.

6. தாம்கொண்ட காதலறம் கற்பறம் ஆதலே
நாம்கொண்ட நல்லறம் நாடு.

7. நாடும் இனமன்றி நாணில்லாச் சாதிமை
நாடாத நாடுதமிழ் நாடு.

8. நாடின்று சாதியால் நாறுதல் கேட்டினும்
கேடென்று தள்ளக் கிளர்.

9. கிளர்ச்சியே யன்றுகாண்! கீழ்மை ஒழிக்கும்
வளர்ச்சியே யாய வழி.

10. வழியறிவான் வாழ்வின் மொழியறிவான் முட்டும்
அழிவறிந்து காப்பான் அதை.

6. நம் பழமரபு காக்கும் காப்பரண நூல்

1. நலப்பாடு மிக்க தொல்காப்பியன் இயற்றிய நூலே, நாடுகாவல் படைகளைப் போல, மொழியியலும் வழியியலும் காக்கும்.

2. தமிழ் எழுத்துகள் உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும் சார்பு மூன்றுமாக முப்பத்து மூன்றாம்.

3. எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களையும் கற்றால் தமிழர் நெறியில் நிற்பவராவர்.

4. தொல்காப்பியம் போல வாழ்வியல் இலக்கணம் கொண்டு விளங்கும் மொழி உலகில் ஏதாவது உண்டேயோ? இல்லையே!

5. மற்றை மொழி எழுத்தும் சொல்லுமே உரைத்தன. தொல்காப்பியமே பொருளும் உரைத்தது.

6. ஒவ்வொருவரும் இயற்கை எழுச்சிக் காதலைப் போற்றி அக்காதல் கற்பறமாகச் சிறந்த இல்லறம் நடத்திய தாய்க.

7. தமிழினம் என்னும் ஒன்றையன்றிச் சாதிமைப் பிரிவு கண்டு, வாழும் வாழ்வை எண்ணாதது தமிழ்நாடு.

8. சாதிச் சிறுமையால் நாற்றமெடுக்கும் சாய்கடையாய் ஆகிய கேட்டைக், கெடுநோய் என ஒழித்து வாழ எழுச்சி கொள்க.

9. கிளர்ச்சி புரட்சி சீர்திருத்தம் என்பவை அன்று இது. சிறுமையை நீக்கி வளர்க்கும் செய்தக்க செயலேயாம்.

10. வாழும் வழி அறிந்தவன், மொழியும் அறிந்தவனாம்; கேடுகளை முன்னறிந்து காப்பவனு மாவன்.

7. அழி செயல்

1. அதைஅறிவான் நாடறிவான் நாட்டதன் எல்லை
யதைஅறிவான் காப்பான் அவன்.

2. அவனிழந்த எல்லை அதனால் நாம்இந்நாள்
எவர்காப்பும் காவா இயல்.

3. இயலும் இசையும் இசைகூத்தும் எல்லாம்
அயலாய் அழிகின்றான் பார்.

4. பாரெல்லாம் சென்றான்; பரவையெலாம் நாவாயால்
சீராண்டான்; சீரழிவான் இன்று.

5. இன்றவன் நாடோடி; எல்லாம் இழந்தானாய்ச்
சென்றவனை ஏற்பார் எவர்?

6. எவர்நாடும் வாணிகத்தால் ஏற்ற பரதர்
பெயர்தானும் பெற்றதா பேர்?

7. பேர்தானும் துச்சந்தன் பெற்ற மகன்பேராம்
யார் தாம் அறிந்தெதிர்த்தார் தாம்.

8. தாமறிய ஈழத் தமிழர்கள் பூண்டோடு
தாமழியச் செய்தனர் ஏன்?

9. ஏனழித்தார் என்றால் தமிழர் தலைதூக்கல்
ஆனதனைக் கண்டறிந்து தான்.

10. தானாடா விட்டாலும் தன்தசை ஆடுமெனல்
ஏனறிந்தும் ஒன்றார் இவண்?

7. நம்மை நாமே அழிக்கும் செயல்கள்

1. நம் அழிவை அறிவான். நாடு, நாட்டின் எல்லை அறிவான்; அதை மேலும் அழியாமல் காப்பான்; அழிந்ததும் மீட்பான்.

2. நம் முன்னவன் காவாமல் இழந்த எல்லை; அவ்விழப்பால் இன்று எவர் காத்தாலும் காக்க இயலா நிலையை அறிவான்.

3. முத்தமிழாம் இயலிசை கூத்துகளையும் அயன் மொழியில் இருந்து கொண்டவை என்னும் அடாவழியில் அழிப்பாரை அறி.

4. உலகமெல்லாம் நாவாய் கொண்டு ஆட்சி செய்த சீர்மைத் தமிழன், இந்நாளில் சீரழிதலைக் கண் கூடாகப் பார்.

5. இன்று அவன் நாடோடி போல் ஆய்விட்டான்; அவனை எவரும் ஏற்பார் இலனும் ஆய்விட்டான்.

6. எல்லா நாடுகளிலும் வாணிகம் செய்து பரவை ஆண்ட தமிழ்ப் பரதவர் பெயரால் நாடு சொல்லப்படுகிறதா? இல்லையே!

7. துச்சந்தன் சகுந்தலை பெற்ற மகன் பரதன் பேராம் நாவலம் தேயத்திற்கு. இதனை அறிந்து எதிர்த்தவர் எவர்?

8. உலகத்தாரெலாம் கண்காண ஈழத்தமிழர் அடியோடு அழிய வந்தேறிச் சிங்களர் செய்தமை ஏன்?

9. ஈழத் தமிழரை அழித்தது ஏன்? தமிழர் எவ்விடத்தும் தலை யெடுக்க விடக் கூடாது என்பதற்காகத் தானே!

10. தானாடா விட்டாலும், தம் உறவால் ஒன்றுவர் என்பதைக் கண்ணேரில் அறிந்தும் நாம் ஒன்றுபட்டு நில்லாமை ஏன்?

8. இன அழிப்பு

1. இவணுள்ளார், சான்றோர்கள் அன்றே உரைத்தும்
சுவராக நின்றார் தனித்து.

2. தனித்தனிக் கட்சியுடன் தாழ்வுறுத்து சாதி
இனிப்பானார் நில்லார் இணைந்து.

3. இணையா நிலைமை எளிதாய் அறிந்தார்
இணைந்தே கெடுக்கிறார் இன்று.

4. இன்றை நிலைமை இதுவென்றால் அன்றும் தாம்
ஒன்றாக நின்றறியார் ஓர்.

5. ஓர்ந்தால் தமிழர் தமிழராய் நின்றிருப்பார்
நேர்ந்தார்பால் நேராமல் நின்று.

6. நின்றழித்த ஆரியத்திற் காட்பட்ட ஆள்வோரால்
இன்றுவரை நேர்தல் நினை.

7. நினைத்தால் தமிழர் அழியத் தமிழர்
எனைத்தும் கொடுத்த தறி.

8. அறிவான் இனக்காப் பறிவான் பகையை
அறிந்தழிப்பான் வாழ்வான் அணைந்து.

9. அணைந்தான் அயலார் தலைப்போய் அழைத்தான்
துணிந்தழித்தான் தன்னினம் தான்.

10. தன்னினம் தானழிக்கத் தந்தனவே அன்னியர்
முன்னிய ஆட்சிகள் மூன்று. 80

8. தமிழினத்தை அழித்தல்

1. சங்க நாளிலேயே 'இன்றே போல்க நும்புணர்ச்சி' என அறிவுறுத்தியும் கேளாமல் தனித்தனி நின்றார்; கெட்டார்.

2. அவரவர் கட்சி ஒன்றுபட விடாத இழிசாதி இவற்றை இனிதாகக் கொண்டவர் இணைந்து ஒன்றாக நிற்பரோ?

3. தமிழர் இணைந்து நிற்கமாட்டார் என்பதை அறிந்த பகைவர் இணைந்து இந்நாளில் கேடு செய்கிறார்.

4. இன்றைக்குள்ள நிலைமை ஈதென்றால் அன்றைக்கும் ஒன்றாக நில்லாத தொடர்ச்சியாம் என எண்!

5. எண்ணினால் தமிழர் தமிழராகப் பகைவரோடு சேராமல் ஒன்றாக நின்றிருப்பார்; வென்றிருப்பார்.

6. தமிழகம் வந்த ஆரியத்திற்கு ஆள்வோர் அன்றே அடிமைப் பட்டதால் இன்றுவரை தொடர்தல் அறிக.

7. மெய்யாக நினைத்தால் தமிழரை அழிக்கத் தமிழரே எல்லாவற்றையும் கொடுத்துதவினார் என்பதை அறிக.

8. இதனை அறிபவன் இன்றேனும் தன் இனம் காப்பதை அறிவான். இனப்பகை அழித்து ஒன்றுபட்டிருப்பான்.

9. ஆனால் தமிழன் அயலானைத் தானே போய் அழைத்து வந்து தன்னினத்தை அழித்தான் என்ற வரலாறுகளை எண்ணிப்பார்.

10. தமிழன் தன்னினத்தைத் தானே அழித்த சான்றுகளே அயலராய் இவண் வந்து ஆட்சி புரிந்த மூன்றரசுகள்.

9. தமிழ்ப் பிறப்புணர்வு

1. மூன்றென்ற தாந்திரர் மூண்ட மராத்தியர்
ஏன்றவோர் ஆங்கிலர் எண்.

2. எண்ணினால் இன்னும் இசலாம் பிரெஞ்சினர்
நண்ணிய போர்த்து நலிப்பு.

3. நலித்த களப்பிரர் பல்லவர் என்னக்
கலித்தவர் தம்மையும் காண்.

4. கண்டதால்நாம் கண்டபயன் உண்டாயின் இன்றேனும்
ஒன்றாதல் வேண்டாமோ ஓர்ந்து.

5. ஓர்ந்து கடைப்பிடித் தொன்றானால் அண்டையார்
சேர்ந்தாக்கும் இன்னல் எது?

6. எதுவும் இழப்போம் இழிப்பும் உறுவோம்
இதுவும் பிறப்பா இழிவு.

7. இழிந்த உடையை இறுக்கி உடுப்போம்;
இழிந்த மயிரதை என்?

8. எனவென்ன ஏங்காமல் ஏறுபோல் பீடு
நினைவோம் நிமிர்வோம் உடன்.

9. உடன்கூடி நிற்க ஒருவழி உண்டாம்
மடற்றேன் றமிழை மதித்து.

10. மதிப்பாய் தமிழப் பிறப்பை மதிப்பாய்க்
குதிப்பாய் குளிர்வாய் குறித்து. 90

9. தமிழ்ப் பிறவி நான் என உணர்தல்

1. அம் மூன்றென்ற அரசுகள் தெலுங்கர் மராத்தியர் வணிகராக வந்து ஆட்சி கொண்ட ஆங்கிலர் என்பார்.

2. மேலும் எண்ணினால் இசுலாமியர் பிரஞ்சுக்காரர் போர்த்துக் கேசியர் என்பார் மூவரும் வந்த தொல்லை!

3. இதன் மேலும் தொல்லையாய்க் களப்பிரர் பல்லவர் எனப் பெருகினாரையும் காண்பாயாக.

4. இவ் வின்னல்களைக் கண்டபயன் உண்டானால் இன்றேனும் நாம் அனைவரும் தமிழர் என ஒன்றாதல் வேண்டும் அல்லவா!

5. நாம் அனைவரும் ஒன்றாகி நேர்நின்றால் அண்டையில் உள்ள வேற்றவர் அனைவரும் கூடிக் கெடுக்கும் துயரம் எதுவாம்?

6. நாம் இழக்கக் கூடாத எல்லாமும் இழப்போம்; இழிவும் அடைவோம். நம் பிறப்பும் பிறப்பா? இழிபிறப்பே நம் பிறப்பு?

7. கட்டிய இடத்தில் இருந்து கழன்ற உடையை இறுக்கிக் கட்டுவோம்? ஆனால் உதிர்ந்த மயிரை ஒட்டலுண்டா?

8. இதைப் பற்றி எண்ணாமல் மேலும் வருந்தாமல் ஏறுபோல் பெருமிதத்தை நினைப்போம். ஒன்றாக நிற்போம் உடனே!

9. நாம் எல்லாரும் ஒன்றாகக் கூடி நிற்க ஒரே ஒரு வழியுண்டு அது தேன்பாகு போன்ற தமிழை மதித்தலே.

10. தமிழ்ப்பிறப்புப் பிறந்ததை மதிக்க வேண்டும்; மகிழ்ந்தாட வேண்டும்; உள்ளங்குளிர்ந்து குறிக்கோளாளியாதல் வேண்டும்.

10. தமிழனாய் நில்

1. குறிக்கோளால் ஒன்றிய கொள்கைதான் ஒன்றே
நெறியாம் தமிழினக் கோள்.

2. கோளாகக் கொண்டுள்ள கொள்ளைநோய் ஆரியத்தைச்
சூழாமல் சுட்டே புதை.

3. புதைக்கவே உள்ளஓர் ஆங்கிலனாய் வாழ்தல்
அதைநீ விடுத்துத் தொலை.

4. தொலைக்கவே நிற்கின்ற தொல்லையில் தொல்லைத்
திரவிடத்தைச் சுட்டுப் பொசுக்கு.

5. பொசுக்கும் வெயிற்குப் பொசிகின்ற நீராம்
பசுமைத் தமிழனாகப் பார்.

6. பார்ப்பாய் தமிழனாய்! பாய்வாய் தமிழனாய்;
நீர்வாய்ப் பயிராக நில்!

7. நிற்பாய் தமிழனாய்! நீள்வாய் தமிழனாய்!
பொற்பார்ந்த வீறுடன் போ!

8. போனால் வடக்கென்ன, பொக்காகப் போயொழியும்!
'பேன்தான் பெருமாளோ? பேசு.

9. பேசினால் போதும் பெருக்கெடுக்கும் வெள்ளமாய்
வீசினால் போதும் துணி!

10. துணிவுனக்குச் சொத்தாகும் தூக்கத்தை விட்டுத்
துணிந்தால் எழும்புமுன் வீறு. 100

10. யான் தமிழன் என்று நிமிர்ந்து நிற்க!

1. ஒருப்பட்ட குறிக்கோளை மேற்கொண்டு கடமையை முறையாகச் செய்தலே இந்நாள் தமிழினத்தார் கொள்கையாம்.

2. தமிழரை அழிப்பதே உட்கோளாகக் கொண்ட கொள்ளை நோய் ஆகிய ஆரியத்தை நெருங்கவிடாமல் எரித்துப் புதைக்க.

3. நம்மை அழிப்பதே கடனாகக் கொண்டுள்ள ஆங்கிலக் கொள்ளையனாய் வாழும் வாழ்வை தொலைக்க!

4. நம்மை அழித்துத் தொலைக்கவே நிற்கும் கொடும் பெருந் தொல்லையாம் திரவிடத்தையும் சுட்டெரிப்பாயாக!

5. வெதுப்பு மிக்க வெயிலுக்கு ஊற்றடித்து வருகின்ற நீர் போன்ற வளமான தமிழனாக வாழ்வதைப் பார்க்க.

6. உன்னை வேறுவகைகளால் பாராமல் தமிழனாகப்பார்; செயலில் புகுவாய் தமிழனாய்! நீர் வளப்பயிராக நிற்பாயாக!

7. எதனையும் தமிழனாகப் பார்த்தால், தமிழனாக நீ உயர்வாய்! பொலிவு மிக்க எழுச்சியுடன் செயலாற்றச் செல்க.

8. அவ்வாறு எழுச்சியுடன் சென்றால் வடவாடை நெற்பதர் போல் போய்த் தொலையும். பேன் பெருமாளாவது உண்டா?

9. நீ தமிழ எழுச்சியோடு பேசினால் போதும்; தமிழர் வெள்ளம் போல் கூடுவார்; கைவீசி நடந்தால் போதும்; துணிவாகச் செய்.

10. உன்பழஞ் சொத்தாக இருப்பது துணிவே! நெட்டுறக்கம் விட்டுத் துணிவாக எழு! எழுச்சியால் வெல்வாய்!

இரண்டாம் நூறு

11. தமிழ் எழுத்து

1. வீறெய்து மாந்தன் விரிவாய் அகலத்தான்
கூறகரம் கொண்டான் குளிர்ந்து.

2. குளிர்ந்தான் அதுநீளக் கூடுதலும் கேட்டான்
தளிர்த்தான் குறில்நெடில் தாம்.

3. தாமே ஒலிக்கும் இகரமோ ஈகாரம்
ஆமா றறிந்தான் அவன்.

4. அவனே உகரமோ ஊகாரம் கேட்டான்
உவந்தான் உ...ஊ என.

5. என்னே எழுந்த எகரமோ ஏகாரம்
துன்னிய ஐயோடௌ வை.

6. அவைஒகர ஓகாரம் அஃகென் றொலிக்கச்
செவிக்கொண்டான் சேர்த்தான் செறித்து.

7. செறிந்த இறுதி ஒலிநுண்மை ஆய்ந்து
குறித்தான் தனிநிலை யாய்.

8. ஆய்தம் தனிநிலை முப்புள்ளி ஒற்றென்ன
வேய்ந்தான் பெயர்கள் பல.

9. பலுக்கும் ஒலிகேட்டு வன்மை இடைமை
மெலிமெய்யாய்ப் பேர்வைத்தான் மூன்று.

10. மூன்று வகையும்மூ வாறாய் முடிந்திட
ஏன்றமைத் தான்பதி னெட்டு. 110

11. தமிழ் எழுத்தமைவு

1. கருத்தை வெளிப்படுத்தும் திறம் வாய்ந்த மாந்தன் விரித்து அகலப்படுத்த அகரம் ஒலிக்கக் களிப்புற்றான்.

2. மேலும் அகலப்படுத்த ஒலிநீளல் கேட்டு, குறுகிய ஒலியைக் ‘குறில்’ என்றும், நெடிய ஒலியை ‘நெடில்’ என்றும் கண்டான்.

3. அதன் பின் அகன்ற வாயை ஒடுக்கி நாவை உள்ளிழுக்க இகரமும் ஈகாரமும் ஆகும் முறையறிந்து மனங்கொண்டான்.

4. மேல்வாய் கீழ்வாய் உதடுகளைக் குவித்து ஒலியெழுப்ப உகரத்தையும் ஊகாரத்தையும் உற்றறிந்தான்.

5. அதன் மேலெழுச்சியாக எகர ஏகாரம் இணைப் பொலியாக உள்ள ஐ, ஔ என்பவை கண்டான்.

6. குவித்த வாய்முதல் ஓங்கி எழுதலால் ஒகர ஓகாரம் கண்டான். நுண்ணொலி ஆய்தமும் கண்டான்.

7. இறுதியில் கண்ட ஆய்தத்தின் நுண்மையை அறிந்து பிறவற்றின் நிலையில் வைக்காமல் தனிநிலை என்றான்.

8. ஆய்தம் என்னும் எழுத்துக்குத் தனிநிலை என்றதுடன் முப்புள்ளி ஒற்று அஃகேனம் எனப் பேரிட்டான்.

9. மெய்யெழுத்துப்பிறக்கும் இடம் ஒலிநிலை கொண்டு வல்லினம் மெல்லினம் இடையினம் எனப் பகுத்தான்.

10. ஒவ்வோர் இனத்திலும் ஆறு ஆறு எழுத்துகளாய், மூவினத்திற்கும் பதினெட்டு எழுத்துகளைக் கண்டான்.

12. கணக்காயன்

1. எட்டாக் கனிகொய்த ஏற்றம் அவன்கொண்டான்
கட்டாக வைத்தான் கணக்கு.

2. கணக்கை இரண்டாய்க் கணித்தான் குறிய
கணக்கும் நெடுங்கணக்கு மென்று.

3. என்றான் உயிரோடு, மெய்யைக் குறுங்கணக்காய்
ஒன்றுயிர்மெய் சேர்த்தல் நெடும்.

4. நெடிலுக் கிரண்டு குறிலதற் கொன்று
வடிமாத் திரையாய் வகுத்து.

5. வகுத்த அரையேதான் மெய்யின் அளவாய்த்
தொடுத்தான் அடங்கல் தொடர்ந்து.

6. தொடர்ந்த கணக்கால் தொகையாய நூலைச்
சுடர்கணக்காய்ச் சொன்னது நூல்.

7. நூலை நுவல்வோன் பெயரைக் கணக்காயன்
மேலாக்கிக் கொண்டான் மிக.

8. மிக்க கணக்காயன் இல்லாத ஊரைத்தான்
தக்கதாய்க் கொள்ளார் தவிர்த்து.

9. தவிராமல் கேட்ட தகவொலியால் கேட்ட
செவிவடிவம் எண்ணினான் சேர்த்து.

10. சேர்த்த வரியைச் சிறப்பாய் அமைத்ததைக்
காத்தனன் ஆய்வில் கதிர்த்து. 120

12. ஆசிரியத் தகவோன்

1. பறிக்க இயலாக் கனிகளைப் பறித்தான்; உயர்வுற்றான்; கணக்கு என்னும் பெயரில் அவற்றை ஒழுங்குபடுத்தினான்.

2. கணக்கை இரண்டாகத் தீர்மானித்தான். அவை குறுங்கணக்கு, நெடுங்கணக்கு என்பனவாம்.

3. உயிரெழுத்தையும் மெய்யெழுத்தையும் குறுங்கணக் கென்றான். உயிர்மெய்யைச் சேர்த்து நெடுங்கணக்கு என்றான்.

4. நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரையும் குற்றெழுத்துக்கு ஒரு மாத்திரையும் எனக் கணக்கிட்டான்.

5. மெய்யெழுத்தின் அளவு அரைமாத்திரை எனக் கொண்டான். அவற்றை அடங்கல் எனப்பெயரிட்டுப் போற்றினான்.

6. எழுத்தமைவைக் கணக்கென்ற வழக்கத்தால் அவ்வெழுத்தால் ஆய நூலையும் கணக்கு என்றான்.

7. நூலைக் கணக்கு என்றவன் நூலாய்வும், நூல் கற்பிப்பும் கொண்டவனைக் கணக்காயன் எனக் கொண்டான்.

8. கணக்காயன் என இருந்து கற்பித்தல் இல்லாத ஊரை ஊராக மதித்தலை விடுத்தான்.

9. கணக்காயன் சொல்லிய தகவான ஒலியைச் செவியால் செவ்விதில் கேட்டவன், ஒலிவடிவு கொண்டான்.

10. அதன்பின் அவ்வொலிக் குறியாம் வரிவடிவை அமைத்ததை யும் காத்தான்: ஆய்விலும் மேம்பட்டான்.

13. உயிரியக்கம்

1. கதிரியக்கம் கண்ட தமிழன் வலமே
அதுவியங்கல் தேர்ந்தான் வியந்து.

2. வியந்தான் இயக்கமெலாம் வீசு வளியும்
நயந்தான் வலஞ்சுழலல் நன்கு.

3. நன்றாய்ச் சுழலை நலிநீருள் கண்டறிந்தான்
அன்றும் வியந்தான் அறிந்து.

4. அறிந்த சுழற்சி அனலிடையும் கண்டான்
செறிந்தான் தெளிவு மிக.

5. மிக்குயர்ந்த விண்மீனும் திங்களும் மேலெல்லாம்
தக்காங்கு சுற்றும் தகவு.

6. தகவாய் இயக்கும் தனியாற்றற் கிட்டான்
அகலா இயவுள் அது.

7. அதுதான் இயக்க இயங்கும் புதுமை
அதுதான் அனைத்தியக்க மாம்.

8. ஆமதனால் ஆக்கும் தமிழின் வரிவடிவம்
நாமமைத்தல் நன்றாம் என.

9. என்ற படியே இயங்கும் உயிரெழுத்தை
ஒன்றித்தான் வட்டம் உற.

10. உறவான மூச்சியக்கும் ஓடும் குருதித்
திறவியக்கும் எல்லாமும் தேர்ந்து. 130

13. உயிரெழுத்து இயங்கும் முறை

1. கதிரோன் இயக்கத்தைக் கண்டான் தமிழன்; வலமாகச் சுழலும் இயக்கத்தை வியப்பாக உணர்ந்தான்.

2. கதிரோனே யன்றிக் காற்றுக் கிளர்தலும் வலமாகவே அமைதலை உணர்ந்தான்! எ-டு: சுழல் காற்று, சூறை.

3. காற்றினை அன்றி நீரிலும் சுழலுண்டாதல் அறிந்தான். அதனையும் வியந்து தெளிந்தான்.

4. கதிர் கால் நீர் இவற்றில் கண்ட சுழல் வட்டமே, கனலில் ஆவதும் தெளிவாக அறிந்தான்.

5. விண்ணில் விளங்கும் விண்மீன்களும் கோள்களும் ஆகிய எல்லாமும் வலஞ்சுழலும் வகையைத் தெளிந்தான்.

6. இவ்வாறு பூதங்கள் இயங்கும் வலச் சுழற்சி இயக்கம் கண்டு அவ்வியக் காற்றலை இயவுள் எனப் பெயரிட்டான்.

7. அவ்வியவுள் இயக்கமே அனைத்தியக்க மூலமும் அனைத் தியக்கமும் ஆமென முடிவெடுத்தான்.

8. அவ்வலஞ் சுழல் இயக்கமே மொழியின் உயிரியக்கம் ஆதல் வேண்டும் என்று வலச் சுழற்சியில் உயிர்களை அமைத்தான்.

9. அகர முதலாக ஒளகாரம் ஈறாகவும் வலஞ் சுழல் வட்டத்தில் அமைத்து ஆய்தமும் முழுவட்டம் ஆக்கினான்.

10. தன்மூச்சின் இயக்கமும் இயங்கும் குருதி இயக்கமும் கண்டு மேலும் தெளிவுற்றான்.

14. மெய்யியல்

1. தேர்ந்த உயிரியக்கம் செய்யும் உயிர்மெய்யும்
ஓர்ந்து படைத்தான் உணர்ந்து.

2. உணர்ச்சிக் குயிரே முதலாகும் மெய்யின்
புணர்ச்சி உயிர்மெய்யாம் என்று.

3. என்றவிவை மெய்யியலாம் என்னக் கணித்தான்பின்
நன்றாக ஊன்றினான் நாற்று.

4. நாற்றே பலநூறு நாற்றாகிப் பண்ணையாய்
ஊற்றாய்ப் பரவிய தோர்ந்து.

5. ஓர்ந்த உலகம் உயிர்தளை என்பவை
தேர்ந்தான் தெளிமெய் யியல்.

6. மெய்யியல் கற்பிக்க மேலாய ஓர்காலம்
ஐயகவை என்ன அறிந்து.

7. அறிந்தோ திளமைப் பருவத் ததனை
அறிந்திட வைத்தான் எழுத்து.

8. எழுத்தில் அகரம் இயக்கும் இயவுள்
வழுத்தாய் வகுத்தான் வகை.

9. வகையாய் எழுத்தை வகுத்த வகையே
தொகையாய மெய்யியல் ஓர்.

10. ஓர்ந்த அறிவியல் ஒன்ற அமைத்ததைத்
தேர்ந்துணர்ந்தால் ஆகும் தெளிவு.

14. மெய்ப் பொருள் விளக்கம்

1. இயற்கை இயங்கியல் தேர்ச்சியால் இயங்கா மெய்யை உயிரைக் கொண்டு இயக்கி உயிர்மெய் என்றான்.

2. உயிரொலியே உணர்ச்சிக்கு மூல வொலியாம்; அதன் சேர்க்கையால் உயிர் மெய்யும் உணர்வாக்கல் கொண்டான்.

3. உடல் உயிர் உடலோடு உயிர் வன்மை மென்மை இடைமை தனிநிலை முதல் சார்பு ஆயவை எல்லாம் மெய்யியல் நாற்றாம்.

4. நட்டிய மெய்யியல் நாற்று, பண்ணை திரண்டு, ஊற்றடிக்கும் நீர்வளத்தொடு தக்கவாறு பரவியது.

5. அதன்மேலாய்வாக உலகம் - உயிர் - தளை என்பவற்றை நன்கு உணர்ந்து மெய்யியல் கொள்கை படைத்தான்.

6. அந்த மெய்யியலை எக்காலம் கற்றால் நலமாம் எனஎண்ணிப் பள்ளிபுகுந்த நாள் தொட்டே கற்பித்தலை மேற்கொண்டான்.

7. இளமைக் கல்வியின் வளத்தை உணர்ந்து எழுத்துவழியாகவே உயிர், மெய், உயிர்மெய் என அறிவித்தான்.

8. எழுத்துகளில் தலைப்பட்ட அகரஎழுத்தை இயக்கும் இயவுள் வாழ்த்துப் போல் வகுத்துத் தொடங்கித் தொடர்ந்தான்.

9. இவ்வாறு எழுதப் படிக்கத் தொடங்கும் காலத்தேயே மெய்யியல் மேம்பாடு ஆழப்பதிய வழிவகை கண்டான்.

10. எழுத்தொலியை அறிவியல் நுணுக்கம் அமைய அமைத்தான் என்பதை உணர்ந்தால் நல்ல தெளிவாம்.

15. சொல்நிலை

1. தெளிவாகச் சொன்னால் திரட்டுநூல் செய்த
ஒளியாளர் தொல்காப் பியர்.

2. காப்பியர் தேர்ச்சியால் எல்லாச்சொல் லும்பொருள்
பூப்ப தெனல்முழு மெய்.

3. மெய்யதைக் காண விழித்ததும் தோன்றாதாம்
உய்த்தாய்ந்து கொள்ள உறும்.

4. உறுபொருள் காணற் கொருப்பட்ட ஆய்வன்
பெறலரிய பெற்றுவக்கும் பேறு.

5. பேறாகப் பெற்றானும் பேணித் தெரியானேல்
வேறாக எண்ணுதல் வீண்.

6. வீண்படுதல் செந்தமிழ்ச் சொல்லதில் இல்லெனப்
பூண்டாய்தல் தக்கதெனப் போற்று.

7. போற்றினால் முற்றாய்ப் பொலிவுறக் காண்பரால்
ஏற்றவை எல்லாமும் ஏற்று.

8. ஏற்றம் தமிழர்க் கினிய மொழிக்காப்பே
மாற்றும் அயற்சொல்லை நீக்கு.

9. நீக்கா தயற்சொல்லை நேரும் கடப்பாடேல்
ஆக்கத் தமிழ்நெறியில் ஆக்கு.

10. ஆக்காது விட்டால் அடுகளப் போரைநீ
காக்காது விட்டாய் கணி. 150

15. சொற்களாக அமையும் இயல்பு

1. தெளிவாகச் சொன்னால் முந்தையர் இலக்கிய இலக்கண வழக்குத் திரட்டுப்பாகு தொல்காப்பியமாம்.

2. தொல்காப்பியர் இயற்கை இயங்கியல் வகையால் தமிழ்ச் சொற்கள் அனைத்தும் பொருளமைந்தவையே என்றார்.

3. சில சொற்களின் பொருள் பார்த்த அளவில் தோன்றா தெனினும், பொருளமைந்ததே என ஆய்ந்தால் விளங்கும்.

4. ஒருப்பட்ட ஆய்வாளன் ஒவ்வொரு சொல்லும் பொருளொடும் பொருந்து வகை கண்டு உவகையுறுதல் உறுதியாம்.

5. ஆய்வைத்தன் பிறவிப்பேறாகக் கொண்டானும், அச்சொல்லைப் பொருளற்றதாகக் கொள்ளல் வீண்பட்ட கருத்தாம்.

6. வீணாகத் தோன்றும் பயனிலாச் சொல் தமிழில் இல்லை என்னும் உறுதியுடன், ஆய்ந்தால் அறியலாம்.

7. அவ்வாறு எண்ணி ஆய்ந்தார், எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பதை முற்றாக அறிந்து ஏற்பார்.

8. தமிழர்க்கு உயர்வுதரும் தமிழைக் காக்கும் கடப்பாடே தலையாயது. அதனால், வேற்றுச் சொல் சேர்த்தலை விலக்குக.

9. நீக்கவே இயலாது என உன்னளவில் எண்ணினால் அச்சொல்லைத் தமிழ் நெறிக்குத் தக ஆக்கிப் பயன்படுத்துக.

10. அவ்வாறு ஆக்காது விட்டால் அழிபடைதாக்கும் போரில் அப்பகையை அழித்துக் காக்காமல் விட்டது போலாம்.

16. எழுச்சியுறல்

1. கணித்தான் மொழிக்கடன் காத்தான் தமிழால்
பிணைத்தான் நிலஎல்லைப் பேறு.

2. பேறெல்லாம் வாய்த்திருந்தும் பேணாமல் விட்டதனால்
கூறெல்லைக் கூறு முறை.

3. முறையை விலக்கும் குறிக்கோள் இலாமல்
நிறைய இழந்தோம் இழப்பு.

4. இழந்ததை மீட்கும் திறமோ இருப்ப
திழவாமல் காத்தலோ இல்.

5. இல்லா ஒருமை இழப்பதற் கல்லாமல்
காக்க உதவுமோ காண்.

6. கண்டாலும் காணாமல் போகும் கயமையை
விண்டாலும் ஆகா விடிவு.

7. விடிநாள் வருமென்ன வீழ்வின்றிக் காத்தால்
முடியாமல் போகாது முன்.

8. முன்னிற்கும் நேர்பகை மூண்டெரிக்கும் ஆரியம்
பின்னிற்கும் ஆங்கிலமும் ஆம்.

9. ஆமாம் திருவிடமோ தீரா விடமாகும்
போமா றறிந்து புதை.

10. புதைக்குள் விழுந்தோம் புதைமூடி மேலே
உதைத்தெழுந் தோங்குவோம் ஓர்ந்து. 160

16. மொழியால் எழுச்சி கொள்ளல்

1. மொழிக்குச் செய்ய வேண்டும் கடமைக்கு, நில எல்லையை இழக்காமல் காத்தலே பேறாகும் எனத்தேர்ந்தான்.

2. இவ்வாறு மொழிந்தும் தமிழன் மொழிவாரி எல்லைக் காப்பும் மொழிவாரி எல்லைப் பகுப்பில் அதனைப் பேணாமல் விட்டான்.

3. அயலார் பறிக்கும் நிலத்தை மீட்டலில் துணிந்த கொள்கை இல்லாமல், நாம் இழந்துபோன நில இழப்புப் பெரிதாகும்.

4. இழந்து போன நிலத்தை மீட்கும் திறம் இல்லாமையோடு, உரிமையாய் இருந்த நிலப்பரப்பையும் காவாமல் விட்டோம்.

5. ஒன்றுபட்ட தமிழின உணர்வு இல்லாமை, இழந்துபோக உதவுமே அல்லாமல் மீட்டெடுக்க உதவாது.

6. கண்காணக் களவாடலையும் கண்டு கொள்ளாத இழிமைகளை, இனி என்ன சொன்னாலும் தீர்வாகப் போவது இல்லை.

7. ஆயினும் உரிமை எழுச்சியால் கொள்ளலாம் இழந்தவற்றை என இன்று முனைந்தாலும் ஆகாமல் போய்விடாது.

8. நம் முன்னே முட்டும் பகை தீயாக எரிக்கின்ற வேதியம்; அதனினும் விரைந்தழிக்கும் ஆங்கிலம் ஆம்.

9. இவ்விரண்டோடும் கூடுமாறு கூடி அழிக்கும் திரவிடமோ தீரா நஞ்சாகும்; இவற்றைப்போக்கும் வகையறிந்து போக்கு!

10. நாம், ஆழ் சேற்றுக்குழியுள் விழுந்து விட்டோம்; அக்குழிகளை மூடி மேலே எழுந்து ஒன்றுபட்ட செயலால் ஓங்குவோம்.

17. நிலப் பறிப்பு

1. ஓர்ந்தால் தமிழும் உருவாகும் அன்னதில்
சோர்ந்தால் அடையோம் சுடர்.

2. சுடர்எழும்பும் நேரம் சுறுசுறுப்பு வேண்டும்
அடர்ந்தெழுந் தோன்றல் அரண்.

3. அரணில்லை ஆராரும் வந்து பரணேறி
நின்றார் பறித்தார் நிலம்.

4. நிலமெல்லாம் தம்மதாய் நீளக் குறித்தார்
குலமெல்லாம் கூட்டினார் கொண்டு.

5. கொண்டழித்த ஆழிக் கொடுமைக்கும் மேலாகக்
கண்டழித்தும் காத்தல் இலம்.

6. இல்லாதோம் இல்லை; இருந்தவை எல்லாமும்
பொல்லார்வாய்ப் போட்டோம் புகுந்து.

7. புகுந்த பகையைப் பொருந்தும் உறவாய்
மிகுந்தார் தமிழர் மிக.

8. மிகமுற்று புற்றுநோய் மேற்பூச்சால் போமோ,
அகத்தறுத் தாற்றலே தீர்வு.

9. தீர்வும் எளிதன்றாம் தீராத உட்பகையைத்
தீர்த்தலே தீர்க்கும் திறம்.

10. திறமான ஈகத் திருக்கொடையர் கொண்ட
மறமானக் காப்பேயாம் காப்பு.

17. தமிழ்வழங்கும் நிலத்தைப் பறித்தல்

1. ஒன்றுபட்டால் தமிழமாக வாழ்ந்த பழநிலைமை உண்டாகும். அதில் சோர்ந்தால் ஒளிவாழ்வுறோம்.

2. தமிழ எழுச்சிச் சுடர் எழுகின்ற இந்நாளில் தமிழரெல்லாம் ஒன்றாய்த் திரண்டு நிற்றல் காப்பரணமாம்.

3. அக்காப்பரணம் நமக்கு இல்லாமையால், நம் தலையுச்சி ஏறி நின்றுகொண்டு அயலார் நம் நிலத்தைப் பறித்தார்.

4. நம்முரிமைப் பகுதிகளை யெல்லாம் தம் நிலமாக வளைத்து அதில் தம்மினத்தைச் சேரக்குடியிருக்கக் கூட்டியும் வைத்தார்.

5. ஆழிப் பேரலையால் அழிக்கப்பட்ட அழிவுக் கொடுமையினும் அயலார் அழித்ததைத் தடுத்த லின்றி விட்டோம்.

6. நாம் நிலப்பரப்பு இல்லாதவர் இல்லை; இருந்த நிலத்தைப் பொல்லா அயலார் வாய்க்குள் போக நாமே போட்டோம்.

7. நமக்குப் பகையாக வந்தவரைப் பொருந்தும் உறவாகத் தமிழர் மிகப்பலர் கொண்டமையால், விளைந்த கேடு இது.

8. மிக முற்ற விட்டு விட்ட புற்று நோயை வெளிப்பூச்சு மருந்தால் போக்க முடியாது; உள்ளே அறுவை செய்து தீர்த்தலே தீர்வாம்.

9. புற்றுநோயைத் தீர்த்தல்போல் தீர்த்தலும் அரிதாம். தீராத உட்பகையை முதற்கண் ஒழித்தலே ஒழிக்கும் முறை.

10. உறுதியும் உண்மையும் இனஈகமும் கொண்டோர் உயர் கொடைக் காவலாம் அரணே பகையழித்துக் காக்கும்.

18. களப்பணி

1. காக்கும் கடமைக் களப்பணி செய்வாரை
ஊக்குதல் வேண்டும் உரத்து.

2. உரம்போ டுழவன் களைவெட்டிப் பின்னர்
உரம் போட்டு நீர்விடுதல் காண்.

3. கண்டால், களப்பணி செய்முறை கண்டறிவாய்
செய்முறை தேர்வாய் சிறந்து.

4. சிறந்தநிலை ஒன்றுண்டாம் சீர்த்த ஒருமைத்
திறத்துடன் உன்னைக் கொடு.

5. கொடுத்தமைந்த தொண்டில் குறிநோக்கிச் செல்லல்
எடுத்தமைத்த வெற்றி அது.

6. அதுவுன் தனிப்பணி ஆகாமல் தக்க
பொதுப்பணி ஆகிடப் போற்று.

7. போற்றினால் ஊரெல்லாம் ஒன்றாகும்; ஒன்றாக
ஏற்று விளக்கே என!

8. எனற்குநீ ஈகன் எனத்திகழல் வேண்டும்;
மனத்துறையும் மாட்சி புக.

9. புகவேண்டும் போற்றுசீர்த் தொண்டில் புகழும்
கருதாப் புகழைக் கருது.

10. கருமமே கண்ணானார் கண்ட கடமைத்
திருச்செல்வம் நீயே திடம். 180

18. இடந்தொறும் பண்படுத்தும் தொண்டு

1. நம் பிறவிக்கடமை நம்மொழி இனம் பண்பாடு காத்தல் பணி யெனக் கொண்ட தொண்டரை ஊக்கப் படுத்துதல் வேண்டும்.

2. பயிருக்கு உரம்போடும் உழவன், முன்னே களைவெட்டுதலும் பின்னே நீர்விடுதலும் கண்டு கடனாற்றல் வேண்டும்.

3. உழவர் பணியைக் கண்டு கொண்டால் களப்பணி செய்யும் முறைமை எப்படி என்பது தெளிவாகும்; விளைவும் நன்றாம்.

4. இப்பணி சிறக்க ஒரே ஒரு வழி உண்டு; அது அப்பணிக்குத் தன்னை முழுதுற ஒப்படைத்துப் பாடுபடுதலாம்.

5. முழுதுற ஒப்படைத்துத் தொண்டையே குறியாகக் கொண்டு செயலாற்றல், கைம்மேல் தந்த வெற்றிக் கனியாகும்.

6. அப்பணியை 'யான் ஒருவனே செய்வேன்' என்று இல்லாமல், பலரையும் ஈடுபடுத்திப் பொதுப்பணி ஈதெனச் செய்க.

7. அவ்வாறு பொதுப் பணியாகச் செய்தால், ஊர்கள் அனைத்தும் ஒன்றாகும். அதற்குரிய செயலைச் சுடரெனச் செய்வாயாக.

8. அவ்வாறு ஆதற்கு நீ எதனையும் ஈகம் புரியக் கூடியவன் என்னும் மனமாட்சி, எவர்க்கும் புலப்படத் திகழ வேண்டும்.

9. பலரும் பாராட்டும் புகழ்மிக்க தொண்டில் புகழும் விரும்பாப் புகழாளனாக நீ விளங்குதல் கட்டாயமாம்.

10. கடமை புரிதலையே கண்ணாகக் கொண்ட பெருமக்கள் கண்ட வெற்றித் திருவாளன் உறுதியாக நீயேயாம்.

19. இனக் காப்பு

1. திடமிக்க பல்லோர் திருமிக்க பல்லோர்
கடமை புரிந்திலர் கண்டு.

2. கண்டிருந்தால் பண்டைக்கும் பண்டைத் தமிழினம்
கொண்டிருக்கும் சொந்தமாய் நாடு.

3. நாடாண்ட முன்னோர் நயத்தக்கோர் என்றாலும்
பீடாண்டார் அன்றே பிறர்.

4. பிறர்வயப் பட்டார்; பிறப்பினத் தாரைத்
துறந்தார்; துடிக்கவும்செய் தார்.

5. தார்கொண்டு போரால் தமரைத்தாம் கொன்றளித்தார்
நேரினக் கேடராய் நின்று.

6. நின்றார் பகைத்தார் நெருங்கும் இனத்தாரைக்
கொன்றார் குடையும் பறித்து.

7. பறித்தவெலாம், பொய்யும் புனைந்துரையும் கொண்டார்
பறியாமல் கொண்டார் பரிசு.

8. பரிசென்று மங்கலங்கள் தானங்கள் தந்தார்;
வரிசை தவறினார் வாழ்வு.

9. தவறினார் வாழ்வெலாம் தம்நலத்தார் முற்றாய்
அவர்க்காக்கிக் கொண்டார் அழித்து.

10. அழித்தார்; இனப்பகை ஆக்கினார்; மேலும்
ஒழித்தார் ஒழிப்பவை ஒத்து. 190

19. இனம் ஒன்றுபட்டுக் காப்பன காத்தல்

1. நாடு மொழி இனக் காவலில் வலிமைமிக்க பலரும் வளமிக்க பலரும் தம் கடமைகளைக் கண்டு செய்தா ரல்லர்.

2. அவ்வாறு இல்லாமல் செயலாற்றியிருந்தால் தமிழினம் தனக்கென ஒரு நாட்டைத் தனியே கொண்டிருக்கும்.

3. தமிழகத்தை ஆட்சிபுரிந்த சேர சோழ பாண்டியர் தக்கவராக இருந்தாலும், அவரிடம் அயலாரே பெருமை யெல்லாம் அடைந்தனர்.

4. மூவேந்தரும் அயலார் வழியில் ஆண்டதால், தம்மினத்தாரைக் கண்டு கொண்டிலர்; கவலைக்காக்கினர்.

5. தத்தம் படைவீறு கொண்டு தங்கள் இனத்தைத் தாங்களே அழித்தார் அயற்பகையே வந்து அழிப்பதைப் போல!

6. எதிரிடையாக நின்றார் பகைத்தார்; தம்மை நெருங்கிய தம் இனத்தாரையும் அழித்தார்; அவர் ஆட்சியையும் பறித்தார்.

7. தம்மவர் ஊரையும் நாட்டையும் பகைத்துப் பறித்ததைப் பொய்யும் புரட்டும் கொண்டவர் பறியாமலே பறித்தனர்.

8. அயலார்க்கு, மங்கலம், திருமங்கலம், தானம், மகா தானம், உத்தம தானம் என வழங்கி அரசமுறை தவறினார்.

9. ஆள்வோர் தவறியதால், அயலார் அறமழித்து முழுவதாக அவருடைமை ஆக்கிக் கொண்டார்.

10. அதனால் இனத்தைக் கெடுத்துப் பகை உண்டாகச் செய்து கல்வி பண்பாடு நாகரிகம் கலை ஆகியவற்றையும் அழித்தார்.

20. ஆள்வோர் துணையால் அழிப்பு

1. ஒத்த பிறப்பை ஒழித்தார்; ஒருநாளும்
ஒத்துவராச் சாதியைத் தந்து.

2. தந்திரமாய்த் தெய்வப் பிறப்பென்று தாமாகி
மந்திரியும் ஆனார் மதத்து.

3. மதத்தால் கொழுக்க மறைவேள்வி செய்யும்
விதத்தால் விழுங்கினார் வீறு.

4. வீறுற்ற வேந்தர்கள் வீழ்ந்தார்கள்; வேள்விக்குள்
பேறுற்றார், எல்லாமும் பெற்று.

5. பெற்றபின் கோயில் வழிபாட்டைக் கைக்கொண்டார்;
பெற்றார் அருச்சகப் பேறு.

6. அருச்சகப் பேற்றினால் ஆலயத்தை முற்றாய்ச்
சுருட்டினார் இன்று வரை.

7. வரைதந்த வண்டமிழ் வாசகம் வாரம்
திரைதந்து மூடினார் தீர்த்து.

8. தீர்த்தார் குடும்பத்துச் செய்யும் சடங்குகளைப்
போர்த்தார் வடமொழிக்குப் பெய்து.

9. பெய்யும் மழையைப் பெறுவிக்கும் வேள்வியும்
செய்தார் பெருகப் பறித்து.

10. பறித்தாலும் பாராள்வோர் பக்க இருப்பால்
வெறித்தார் தம்வேந்தர்க்கு மேல்! 200

20. தமிழக ஆட்சியர் துணையாலேயே தமிழினத்தை அழித்தல்

1. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் கோட்பாட்டை ஒழித்து, ஒன்றுபடாச் சாதியை உருவாக்கிப் பெருக்கினார்.

2. தம்பிறப்பு விண்பிறப்பு என்று வேதியம் வளர்க்க அரசரை ஆட்டிவைக்கும் அமைச்சுப் பதவியும் கொண்டார்.

3. வேதியம் கொழுக்கும் வகையில் வேத வேள்வி என்னும் பெயரால் கருவூலப் பொருளையெலாம் கவர்ந்து கரியாக்கினார்.

4. பெருமித முற்ற வேந்தர்களும் வேள்விக்குள் வீழ்ந்தார். அதனால், அவ்வேதியர் பெறுதற்கு அரிய பேறுகளைப் பெற்றார்.

5. பெற்ற பெரும் பேற்றால் கோயில் வழிபாட்டை அருச்சகர் என்னும் பெயரால் பெற்றார்.

6. அருச்சகர் என்னும் வாய்ப்புப் பெற்றதால், இன்று வரை முழுவதாகச் சுருட்டிக் கொள்ளும் கயமையையும் கொண்டார்.

7. மலைபோல் குவிந்து கிடந்த இறைமை வளமாம் திருவாசகம் தேவாரம் முதலியவற்றைக் கோயிலுள் வராமல் ஆக்கினார்.

8. தமிழில் வழிவழியாகச் செய்யப்பட்டு வந்த குடும்ப நிகழ்வு களாம் திருமணம் முதலிய வற்றையும் வேள்விமய மாக்கினார்.

9. பெய்யா மழையை வேள்வியால் பெய்விப்பதாகப் புளுகிப் பெருமிக்க செல்வங்களை வாரிக்கொண்டார்.

10. வேந்தர்கள் தம் சொற்படி ஆட்சி நடத்தலும் வாழ்தலும் ஆகியமையால், அவ்வேந்தர்க்கும் மேலோராக ஏறிக் கொண்டார்.

மூன்றாம் நூறு

21. அடிமைப்படல்

1. மேலோர் பிறப்பென்றார் மற்றோர் அனைவரும்
கீழென்றார் கீழ்க்கீழ்ப் பகுத்து.

2. பகுத்தார் வருணம், பசியாமல் வாழ
மிகுத்தார், இறங்கப் படி.

3. படிக்கட்டின் மேலே பளிச்சிட நின்றார்
அடிக்கீழ் வரிசை அமைத்து.

4. அமைத்தார் அடிக்கடியாய்ப் பஞ்சமரைத் தீண்டார்
தமக்குக்கீழ், காணாராய்த் தாம்.

5. தாம்வாழத் தாழாத வானிறையும் தங்களுக்குத்
தாம்,கண்முன் காட்சிதரும் என்று.

6. என்றும் அடிமையாய் எல்லாரும் தாம்கிடக்கக்
குன்றாக நின்றார், கொழுத்து.

7. கொழுத்தபெரு வீரரும், கோலொடுங்கி வீழ்ந்தார்,
பழுத்த சருகாய்ப் படிந்து.

8. படிப்பழித்தார், பண்பா டழித்தார்,கைப் புல்லால்
முடித்தார், நினைத்தவைஎல் லாம்.

9. ஆமென்னார் தம்மை அரக்கராய் ஆக்கினார்;
ஆமென்றால் தாசராய் ஏற்று.

10. ஏற்பளித்த கொத்தடிமை வாழ்விலே எல்லாரும்
தோற்றொழிந்தார் எல்லாம் தொலைத்து. 210

21. தமிழர் வேதிய அடிமையராதல்

1. வேதியர் தம்மைத் தெய்வப் பிறப்பு என்றார்; எல்லாரும் அவர்க்குக் கீழ்க் கீழாம் பிறப்பு என்றார்.

2. வருண ஒழுக்கம் என்னும் பகுப்பால் தாம் என்றும் பசி இல்லாமல் வாழ, இறங்குபடி போல் சாதி ஆக்கினார்.

3. பலநூறு படிகளாக்கி அப்படிகளின் மேற்படியில் நின்று கொண்டு, காலடியில் ஒருவர்க்குக்கீழ் ஒருவர் நிற்கவைத்தார்.

4. படிகளின் கீழ்ப்படிக்கும் கீழ்ப்படியாய் அகழ்ந்து தீண்டாதார் என்றும், அவர்க்குக் கீழ், காணற்கும் தகாதார் என்றும் வைத்தார்

5. எந்தத் தாழ்நிலையும் இல்லா முழுமுதல் இறையும், தங்களுக்கு மட்டுமே கண்முன் காட்சி தரும் என்று ஏமாற்றினார்.

6. என்றுமே தமிழர் கொத்தடிமையாய்க் கிடக்கும் வகையில் திட்டமிட்டு அழுத்தித் தாம் மலை போல் உயர்ந்து செழித்தார்.

7. வீராதி வீரர் எனப் பட்ட வீரம் தம் பெருமை கெட்டுப் பழுத்து முற்றிய சருகுபோல் அவர்கள் காலடியில் கிடந்தார்.

8. அரசே அடிமைப்பட்டதால், கல்வி பண்பாடு முதலியவற்றைப் புல்லைக் காட்டியே ஒழித்து, நினைத்ததை முடித்தார்.

9. அவர் கருத்தை ஒப்பாது எதிர்த்தவரை அரக்கர் ஆக்கினார்; ‘ஆம்’ என்றவரைத், தாசராகக் கொண்டார்.

10. கொத்தடிமை வாழ்வைத் தாமே ஏற்றுக் கொண்ட நிலையில் தமிழர் இழக்க இனி எதுவும் இல்லை என இழந்தார்.

22. எல்லாம் அழிவு

1. தொலைந்தது பண்பாடு; தொல்லோர்தா மாகத்
தொலைத்தார்நம் ஊர்ப்பேர் ஒழித்து.

2. ஒழித்தார் திருக்கோயில் தெய்வப்பேர் உண்மை
அழித்தார் வரலாறங் கங்கு.

3. அங்கங்கு மாற்றினார் ஆறுமலை எல்லாமும்,
தங்கள தென்னத் தடித்து.

4. தடியெடாத் தண்டலர் தாமாய் முடித்தார்
முடிவிலா வஞ்சம் முனைந்து.

5. முனைப்பால் கலைகள் முதுநூல் பெயர்த்தார்,
அனைத்தும் அழித்தார் அவை.

6. அவற்றைப் பெயர்த்ததாம் நூல்களை நம்மோர்
உவந்தார் உச்சிமேல் கொண்டு.

7. கொண்ட இசைக்கும் குறிப்புயர்ந்த கூத்துக்கும்,
பண்டைத்தம் நூலாய்ப் பதித்து.

8. பதித்தார்; பரப்பினார்; பாராளச் செய்தார்;
மிதித்தாரே நம்கலைக் கண்.

9. கண்மூடி ஆயினார்; கைகட்டிப் போலியரும்
மண்ணாகி விட்டார் மதித்து.

10. மதித்தவரும் மாய அரங்கேறி நின்றார்
கொதித்திலர் 'என்னெமக்' கென்று. 220

22. யாவும் அழிக்கப் பெறல்

1. பண்பாட்டை வேதியர் கெடுத்தார்; நாம் கொண்டிருந்த பழமையான ஊர்ப்பெயர்களை அழித்துவேறாக்கினார்.

2. திருக்கோயில் தெய்வங்களின் பெயர்களை மாற்றிக் கெடுத்தார். அக்கோயில் வரலாற்றையும் புனைவால் அழித்தார்.

3. தங்கள் உடைமையாய்க் காட்டுவதற்காக, ஆற்றுப் பெயர், மலைப்பெயர் முதலிய வற்றையும் மாற்றினார்.

4. அளவிட முடியாத வஞ்சமே வடிவாகத், தடியெடாமல் தம் எண்ணத்தைக் கரவாக முடித்துக் கொண்டார்.

5. தமிழ்க் கலைகள் பழநூல்கள் ஆகியவற்றை வடமொழியில் பெயர்த்தார்; மூலத் தமிழ்நூல்களை அழித்தார்.

6. பெயர்த்த நூல்களை மூலநூல்களாகக் காட்டத் தமிழர் தலைமேல் கொண்டு, பெறாதன பெற்றதாய் உவந்தார்.

7. கேட்பாரைக் கொள்ளை கொள்ளும் இசைக்கும், கூத்துக்கும் எம் பழநூலே மூல முதல்நூல் எனப் பதியச் செய்தார்.

8. அவை வடநூல் வழியது எனப்பாரகம் அறியச் செய்தார். நம் கலைகளாம் கண்களை ஒழித்தும் விட்டார்.

9. அடிமையரும் வேதியப் போலியராம் தமிழரும் கண்மூடியாய் ஏற்று மதித்து மண்ணாகிப் போனார்.

10. மதிக்கப்பட்டவரும் வேதிய அரங்கத்தில் நின்றார். அதனால் மற்றையரோ 'எமக்கு என்ன' என்று எதிர்த்தார் அல்லர்.

23. அகத்தியப் புரட்டு

1. என்றதால் செக்கிழுக்கும் மாடாய் இழிவுற்றார்;
நன்றென்றார் நம்பகையர் ஏற்று.

2. ஏற்றுவந்த கொத்தடியர் ஏதும் எழுத்தறியார்
போற்றிய பேர்களைப் போல்.

3. போல்பார்ப்பார் தம்நெறியைப் போற்றினார்; பார்ப்பார்தாம்
மேய்ப்பாராய் நிற்கப் புகுந்து.

4. புகுந்தார் புனைந்தார் புனைகதைகள்; பார்ப்பார்
மிகுந்த நிலைமை யுற.

5. நிலைபெற்ற பொய்ச்சடங்கால் நின்ற அறிவும்
குலைவுற்றுக் கெட்டது கூறு.

6. கூறினார் பொய்யாய்ப் பொதியத் தகத்தியன்
கூறினான் முத்தமிழ் என்று.

7. என்றுமே இல்லா ஒருநூலை நன்றாம்
'மகத்துவம்' என்றார் மதித்து.

8. மதித்ததொல் காப்பியன் மாணூலைத் தள்ளக்
கதித்த கதைதான் அது.

9. அதனை உருவாக்கி ஓர்நூல் உளதாய்
அகத்தியப்பேர் சூட்டினார் ஆய்ந்து.

10. ஆய்ந்தறிந்தால் முத்துவீரர் நூலுக்குப் பின்வந்து
சாய்ந்தநூல் என்னல் தெளிவு. 230

23. அகத்தியரேதமிழ் தந்தார் என்னும் புரட்டு

1. இத்தகைய நிலையில் செக்கிழுக்கும் மாடுபோல் வேதியத்தைச் சுற்றி இழிமை யுற்றார்; வேதியர் நல்லது என ஏற்றார்.

2. ஏற்றுக் கொண்ட வழிவழி அடிமைத் தமிழர், போலி வேதியர் போல், எழுத்தறிவு தானும் பெறாதவரானார்!

3. வேதியர் வழியில் தம் நெறியை இணைத்தார்; அதனால், வேதியப் பார்ப்பார் மேய்ப்பாராகப் புகுந்து நிற்க வழிதந்தார்.

4. தமிழப் பார்ப்பாரே போலிப் பார்ப்பாராய் ஆனார்; புராணங்கள் ஆக்கினார்; பார்ப்பனர் மேல்நிலை பெறுதற்கு!

5. பொய்ச் சடங்குகள் பெருகி வளரக் குறைந்து கிடந்த அறிவும் குலைந்து போகலாயது.

6. அந்நிலையில் பொதிய மலைக்கண் வாழ்ந்த அகத்தியனே முத்தமிழை உண்டாக்கினான் என்று கதைத்தார்.

7. அகத்தியப் பேர் கொண்ட பொய்ப் பெயர் நூலை, மகத்துவ மிக்க அகத்தியம் என்று அறியாமல் மயங்கிப் போற்றினர்.

8. மதிப்புமிக்கதாய் எழுத்து சொல் பொருள் என்னும் முப்பகுப் பாய் எழுந்த தொல்காப்பியத்தைப் பின்னுக்குத் தள்ளினார்.

9. பின்னவர் காட்டிய இலக்கண நூற்பாக்கள் சிலவற்றைத் தொகுத்துப் 'பேரகத்தியம்' என்னும் பெயரையும் சூட்டினர்.

10. அந்நூலை ஆய்ந்தால் முத்துவீரிய நூலை முன்வைத்து இயற்றப்பட்ட நூல் என்பது தெளிவாம்.

24. பின்னூற் பிழை

1. தெளிவாகப் பொய்யதைத் தேர்ந்துபலர் சொன்னால்
ஒளியாகிப் போமோ அது.

2. அதன்சான் றதனுள் இருத்தலறி சான்றாம்;
எதன்பால் அறிந்தனர் எண்.

3. எண்ணினால் பின்னூலாம் வெண்மாலை நம்பியகம்
நண்ணுதகு சான்றாமோ நாடு.

4. நாடின் மணிமே கலைக்குப்பின் நண்ணிய
சோடிப் பதுவென்னச் சொல்.

5. சொலப்படும் நூல்களோ பின்னா ளவையாம்
பலவாம் அவர்பேரால் பார்.

6. பார்க்கும் மருத்துவம் பன்னுதேவா ரத்திரட்டு
யார்க்கும் அறிய வரும்.

7. வரும்பின்னை நூல்கொண்டு முன்னைநூல் நாட்டல்
செருபகைச் செய்கையெனச் சொல்.

8. சொல்லவே நாலுறும் சோறக் கதைதிரித்து
நல்லவகை வைத்தனர் நச்சு.

9. நச்சினார்க்கு நல்லினியர்; ஆனால், நடுநடுவே
நச்சினைக் கக்கினார் நன்கு.

10. நன்னெறிகள் பல்லபல புன்னெறியாய் ஆக்கியவர்
சென்னெறியோ செந்நெறியோ செப்பு. 240

24. தொல்காப்பியத்திற்குப் பின்வந்த நூல்களின் பிழை

1. பலபேர் பலகாலம் சொன்னார்களானாலும் எந்நாளும், பொய் பொய்யாமே அன்றி மெய்யாகப் போவதில்லை.

2. எந்த ஒன்றும் சான்று கொண்டே மெய்யென்று கொள்ளப்படும். எவ்விடத்துச் சான்று கண்டார் என்பதறிக.

3. அகத்தியம் முன்னூல் என்பதைப் பின்னூலாம் வெண்பாமாலை, அகப் பொருள் என்பவை சொன்னால் சான்றாகுமா?

4. ஆராய்ந்தால் மணிமேகலைக்குப் பின்னேவந்த நூல்கள் இட்டுக்கட்டி இயம்பியதே அகத்தியன் என்னும் பொய்யுரை.

5. அகத்தியர் பேரால் சொல்லப்படும் நூல்கள் இருநூற்றுக்கு மேற் பட்டவை அவர்பெயரால் செய்தனவாம்.

6. அகத்தியர் பேரால் சொல்லப்படும் மருத்துவ நூல்கள், தேவாரத் திரட்டு பின்னூல்கள் என்பது எவர்க்கும் விளங்கும்.

7. காணுமாறுள்ள பின்னை நூல்களைக் கொண்டு, முன்னைநூல் இருந்ததென்று கூறுதல் அழிக்கும் பகை என்று கூறுக.

8. சொல்லுதற்கே நாணமுண்டாக்கும் கதைகளை, அவர் மேல் புனைந்து நஞ்சு போல் பழநூல்களின் உரையில் கூறினர்.

9. நச்சினார்க்கு இனியரே எனினும், பழநூல்களின் இடை இடையே வேதிய நஞ்சுகளை நயமாகக் கூறினார்.

10. நல்ல நெறிகள் பலவற்றைப் புல்லிய நெறிகளாக ஆக்கிய நச்சினார்க்கினியர், சென்ற நெறி செவ்விய நெறி ஆகுமா?

25. உரை நிலை

1. செப்பின் கலப்பாலில் நச்சுக் கலப்பென்ன
ஒப்புதல் வேண்டும் உணர்ந்து.

2. உணர்ச்சி மரத்தவர்க் கோதிய வேதப்
புணர்ச்சி விளக்கல் புரி.

3. புரிந்தால் தமிழ்நெறியைப் புன்னெறி வேத
புரியர் வழிப்படுத்தார் போய்.

4. போய வழிக்குப் புகுந்தவர் சான்றெல்லாம்
ஆய தமிழே அறி.

5. அறிந்தால் அரும்பெறல் ஆசானின் நோக்குச்
செறிவதற் கில்லை குறை.

6. குறைவற்ற பேரறிவு கொண்டும் குறுநோக்
குறைவினால் என்றறிவோம் கோள்.

7. கொள்ளரிய பேராற்றல் கொள்வோம்; குறைகளைத்
தள்ளி மதித்தல் தகவு.

8. தகவே பரிமே லழகர் தமையும்
மிகவே மதித்திடுவோம் மேல்.

9. மேலில்லா வண்ணமநு மேற்கொண்ட கொள்கையால்
கோலிய போலியுரை கூறு.

10. கூறுங்கால் நூல்காத்த கோக்கொடையைக் கூறுதல்
பேறாகும் என்றதைப் பேசு. 250

25. பழந்தமிழ் நூல்களின் உரைகளின் தன்மை

1. நன்றாக உணர்ந்து பார்த்துச்சொன்னால், ஒருகுடம் தூய பாலில் சில துளி நஞ்சுகளை விட்டனர் உரைகண்டோர் என்க.

2. உணர்ச்சி மரத்துப் போனவர்க்கும் புரியுமாறு ஓதிய வேத முறைத் திருமணங்கள் எட்டனைக் கூறுவதை எண்ணிப் பார்க்க.

3. எண்ணிப்பார்த்துப் புரிந்தால் தமிழ் நெறிகளை யெல்லாம் வேதிய வழியில் ஆக்கமாட்டார், தாமே தேடிப் போய்.

4. தமிழ் நெறியை வேதியப்படுத்துக் கூறினார்க்கும் வேதியச் சான்று கிட்டாமையால் தமிழ் நெறிச் சான்றே காட்டினார்.

5. அறிந்தால் தமிழ்நூல் செய்த தகவார்ந்த மேலோரின் நோக்கச் செறியும் செப்பமும் வேதியத்திற்கில்லாமை வெளிப்படும்.

6. குறைவிலா நிறைபேரறிவு பெற்றிருந்தும் குறுநோக்கொடு நோக்கிய குறையால் அக்குறை நேர்ந்ததாகக் கொள்க.

7. அவ்வாறு கொண்டால் அவர் பேராற்றலைக் கொள்வோம்; குறைகளைத் தள்ளி ஒதுக்கல் தகவெனக் கொள்வோம்.

8. தக்க பல சிறப்புடைய பரிமேலழகர் செய்த சில குறைகளைத் தள்ளி அவரையும் மிக மதித்து மேலாகக் கொள்வோம்.

9. மேன்மைக் கிடமில்லா மநுவை மேற்கொண்டு கண்ட போலி உரைகளை மட்டும் தவிர்த்து, மற்றைய சிறப்பைக் கூறுக.

10. அவ்வாறு கூறும் போது திருக்குறள் நூலைப் பரப்பிக் காத்த பெருங் கொடைஞர் அவர் என்பதைப் பேசுக.

26. உரைப் பெருமை

1. பேசினால் குற்றம் பெயரும் குணமோங்க
வீசிய தென்றலாம் வீறு.

2. 'வீறெய்தி மாண்டார் வினைத்திறம்' வல்லார்வாய்
ஊறெய்தி உள்ளப் படும்.

3. பட்டுறை போட்டுப் பளிச்சிடக் காட்டுவதாம்
கட்டமை நல்லார்க் கருது.

4. கருதினால் செஞ்சிலம்பு காட்டும் கலைச்சீர்
பெருக்கும் அடியார் அவர்.

5. அவரே இழந்தகலை ஆக்கம் அனைத்தும்
பகரும் பெரியரே பார்.

6. பார்த்தார்க்கு 'யா.வி' பகரும் அருமையுரை
யார்க்கும் அரிதாதல் ஆய்.

7. ஆயும் அறிவினர் அன்னதனைத் தோயும்
மதுகை யுறுதல் மதி.

8. மதித்தால்தான் பன்முக மாட்சியும் தோன்றும்
பதியும் பதியும் பல.

9. பலசொல்ல வேண்டா பகரும் இழப்புப்
பலவும் புலனாம் படி.

10. படிக்கும் உரைவிளக்கம் பாரிக்கும் உண்மை
பிடித்தால் பயனாம் பெரிது. 260

26. நூலுக்குப் பெருமை சேர்க்கும் உரைகள்

1. நூலுக்குப் பெருமை சேர்க்கும் உரைகளால் குற்றம் அகல நலம் ஓங்கித் தென்றலென்னும் பேறும் வீறும் தோன்றும்.

2. நூல்செய்தாரின் மேதக்க மாண்பு வல்லார் தமையெல்லாம் அடைந்து மேலும் மேலும் விளக்கமாம்.

3. பட்டுப் போர்த்துப் பளிச்சிடும் வகையில் சிலம்பாம் நூற் குழந்தையைக் காட்டிய அடியார்க்கு நல்லாரை எண்ணிப் பார்க்க.

4. அவ்வாறு எண்ணிப் பார்த்தால் சிலப்பதிகாரத்துக் கலைப் பெருமைகளைக் காட்டவே தோன்றிய நல்லார் எனத் தோன்றும்.

5. அடியார்க்கு நல்லாரே நாம் இழந்து போன கலைகள் அனைத்தையும் அறியச் செய்த பெரியராதலைப் பார்க்க.

6. ஆய்ந்து பார்ப்பவர்க்கு யாப்பருங்கல விருத்தியுரை கூறும் நூல்கள் எவர்க்கும் கிட்டாமை தெளிவுற விளங்கும்.

7. ஆராய வேண்டும் என்னும் ஆர்வமுடையார் யாப்பருங்கல விருத்தி உரையை ஆராய்ந்து கொள்ளுதலைக் கொள்க.

8. அவ்வுரையால் தமிழ்மொழியின் பன்முகச் சிறப்புகளும், பதியும்; பலப்பல ஆய்வு நெறிமுறைகளும் பதியும்.

9. அவ்வுரை பற்றிப் பலவாக விளக்க வேண்டுவதில்லை. நாம் இழந்து போய இழப்புகள் எவை எவையெனப் புலப்படும்.

10. அவ்வுரை விளக்கம் காட்டுதலை வியந்துநிற்கும் அளவில் நில்லாமல், கடைப்பிடித்தால் மொழி நலம் மிகுதியாம்.

27. உரையால் நலம்

1. பெரியதொல் காப்பியம் பேசுபத்துப் பாட்டுத்
தெரியஉரை கண்டார் தெளி.

2. தெளிந்தசிந் தாமணி தேர்ந்தீ ருரைகள்
பொழிந்தார் இனியர் புகல்.

3. புகன்றார் விரிபுலமை பூக்கப் புகழால்
இனியராய் நின்றார் இயைந்து.

4. இயைந்த கருதுகோள் எல்லாமும் ஏற்ற
முயன்றார் முனைந்தார் முடித்து.

5. முடித்தும் தமிழ்காத்தார் மூளுரைகள் தோன்ற
வடித்தார் வளமாய் வர.

6. வரவைத்த ஆய்வால் வளந்தந்த சீர்மை
வரவை வணங்கல் நலம்.

7. நலத்தொல் இளம்பூரர் நாம்போற்றத் தக்கார்
பலர்க்கும் முதன்மைப் பட.

8. படம்வரைந்தார் வண்ணம் பலர்தீட்ட வைத்தார்
இடரா உரையாசான் எண்.

9. எண்ணின் மணக்குடவர் ஏரார் குறளுரையே
கண்ணாம் குறட்கமைந்த காப்பு.

10. காப்புநாண் நூல்கட் குரையேதான் என்றுரைத்தல்
சீர்த்தாம் சிதையாமல் சேர்த்து. 270

27. உரைகளால் பெற்ற நூல் நலங்கள்

1. தமிழ்வளமெல்லாம் காட்டும் தொல் காப்பியம் பத்துப் பாட்டு ஆயவற்றுக்கு உரைகண்டவர் எவரெனத் தெளிக.

2. சமணக் காப்பிய மெனச் சிறந்த சிந்தாமணிக்கு முன்னும் பின்னுமாக ஈருரைகள் மொழிந்தவர் நச்சினார்க்கினியர் என்க.

3. இவ்வாறு பன்னிரு நூல்களுக்கு விரிவுரைகண்டு இணையில்லாப் புகழ் பெற்றவர் நச்சினார்க் கினியர்.

4. அவர் தமக்குப் பொருந்தியதாகக் கொண்ட கருதுகோள்கள் எல்லாமும் நூலில் ஏற்ற முயன்று முடித்தும் கொண்டார்.

5. இவ்வாறு முடித்தாலும், தமிழ்நூல்களை அழியாமல் காத்தார்; பின்னே பல உரைகள் ஆய்வுகள் வரவும் வழிகாட்டினார்.

6. ஏற்பெனவும் மறுப்பெனவும் விளக்கமெனவும் குறிப்பெனவும் நூல்கள் வரச் செய்த அவரை வணங்கல் நலமாம்.

7. அவருக்கும் முன்னே உரைவரைந்தவர் இளம்பூரணர் ஆதலால், எவர்க்கும் முற்படப் போற்றத்தக்க உரையாசிரியர் அவர்.

8. அவரே வரைபடம் வரைந்து வண்ணமும் தீட்டினார். பலர் வண்ணம் தீட்டவும் வைத்தார். இடரிலா உரைகண்டாரு மவர்.

9. எண்ணினால் எல்லா நலங்களும் அமைந்த திருக்குறளுக்கு ஒளியும் தெளிவு மமைந்த உரைகண்டு காத்தார் மணக்குடவர்.

10. நூல்களைக் காக்கும் காப்பாக இருந்தவை, அவற்றுக்கு வாய்ந்த உரைகளேயாம்; நூல்சிதையாமல் காத்தவை அவை.

28. தமிழ் வளர்த்தார்

1. சேர்ந்தமைந்த சீரெல்லாம் செப்பிய முப்பாலால்
நேர்ந்தமைந்த தென்னல் நெறி.

2. நெறிகாக்கும் நேர்மரபு நேர்ந்தால் இன்றும்
குறையா வழக்கிரண்டும் கொண்டு.

3. கொண்டனம் பத்தெட்டும் கூறைந்து காப்பியம்
கண்டகீழ்ப் பன்னெட்டுக் காண்.

4. காணரிய சேக்கிழார் கம்பர் வரிவாரம்
பேணு திருப்புகழ் பெற்று.

5. பெற்றபெரும் பேற்றுத் தாயுமானார் ஔவையார்
உற்ற குமரகுரு உன்னு.

6. உன்னிய வள்ளலார் ஓரிரு பாரதியர்
என்றுவர வாயினர் இங்கு.

7. இங்கிருந்த சித்தர்கள் எண்ணு திருமூலர்
தங்குசிவப் பேரொளி யார்.

8. யார்க்கும் அரும்பாடல் எண்மையாய் யாத்தசீர்
வண்ணச் சரபர் வரவு.

9. வரலரிய வீரராகர் மாம்பழம் காளர்
இரட்டையர் என்னப் பலர்.

10. பலர்மெச்சு மெய்கண்டார் பன்னுநெறி வந்தார்
சிலர்தொடராய் எண்ணிக் கொள. 280

28. காலந்தோறும் தமிழைக் காத்து வளர்த்தவர்கள்

1. தமிழருக்கு அமைந்த சிறப்புகள் அனைத்துக்கும் அடிப்படையாக இருப்பது, முப்பால் எனப்படும் திருக்குறளே ஆகும்.

2. நூல்நெறி வழக்கியல் நெறி என்னும் இருநெறிகளையும் போற்றும் வழக்கம் என்றும் உள்ளமையால் அமைந்தது அது.

3. இந்நெறிகளைக் கொண்டு அமைந்தவை பாட்டு தொகை பெருங்காப்பியம் கீழ்க்கணக்கு என்பவை.

4. மேலும் பெரியபுராணம் இராமாயணம் வரிப்பாடல் தேவாரப் பாடல் திருப்புகழ் முதலியவை வாய்த்தன.

5. பின்னர்ப் பெறுதற்கு அரிய பேறாகத் தாயுமானவர் ஔவையார் குமர குருபரர் படைப்புகள் கிளர்ந்தன.

6. நினைவில் மாறாது நிற்கத் தக்க திருவருட்பா, பாரதியார் பாரதி தாசனார் படைப்புகள் உண்டாயின.

7. இவற்றுக்கு மூலமாம் சித்தர் பாடல்கள் திருமூலர் திருமந்திரம் சிவப்பிரகாசர் கொடைகள் வாய்த்தன

8. பாடுதற்கு அரிய பாடல்களையும் எளிமையாகப் பாடிய வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளார் வளங்கள் எய்தின.

9. கவி வீரராகவர் மாம்பழக் கவிச்சிங்கநாவலர் காளமேகப் புலவர் இரட்டைப் புலவர் என்பார் தரவுகள் கிளர்ந்தன.

10. பலரும் பாராட்டும் சிவஞான போதம் சிவப்பிரகாசம் சிவஞான சித்தியார் முதலாக மெய்ந்நெறி நூல்கள் பெருகின.

29. காப்பும் அழிப்பும்

1. கொளத்தக்க வீரமுனி கோக்கொடைப் போப்பார்
வளக்கொடை வாய்த்தன வந்து.

2. வந்தவுயர் கால்டுவெலார் வார்த்தசீர் ஒப்பியல்
தந்தவளம் தந்தவளம் தாம்.

3. தாமே தமிழுலகத் தாதாவாய் நாட்டிய
மாமலை என்னல் மதி.

4. மதித்தால் மறைமலை ஞானர்பா வாணர்
குதித்தற்கு மூலக் கொடை.

5. கொடையிற் கொடையாம் கொழுந்தமிழ் மீட்புக்
கொடையெனத் தக்க குறிப்பு.

6. குறிக்கொண்டு கற்பார் குளிர்வர் குறிக்கோளாய்ச்
செந்தமிழ் என்றுரைத்த தேர்வு.

7. தேர்ந்த தெளிவரும் வேற்று மொழிவழியே
நேர்ந்தார் 'இடுகுறிப்பேர்' நின்று.

8. நின்றார் அயன்மொழிச் சொல்லோ டெழுத்தையும்
ஒன்றி யமைத்தார் உடன்.

9. உடனே 'மணிப்பவழம்' ஓர்ந்து குவித்தார்
கடனாகக் கட்டழிக்கக் காண்.

10. கண்டார் தமிழ்க்கேட்டை அம்மைத் தழும்பெனக்
கொண்டு திணித்தார் சிலர். 290

29. தமிழைக் காத்தாரும் அழித்தாரும்

1. விரும்பிக் கொள்ளத் தக்க வீரமாமுனிவர் போப்பையர் என்பார் கொடைகள் தமிழுக்குக் காலத்தால் வாய்த்தன.

2. தமிழர் பெருமையுற வந்த கால்டுவெலார் தந்த ஒப்பியல் நூல் வளமோ யானைத்தந்தத்தைத் தந்த வளமாகிய தாம்.

3. தம் கொடையே சங்கத் தமிழை மீட்டெடுத்துத் தந்த கொடை எனத் தனித்தமிழ் இயக்கம் கண்ட மறை மலையை மதிக்க.

4. அவ்வாறு மதிப்பதாயின் ஈழத்து ஞானப் பிரகாச அடிகளும் பாவாணரும் விஞ்சுபுகழுடன் தோன்ற மூலமாதல் புலப்படும்.

5. எக் கொடைகளிலும் உயர் கொடை செந்தமிழைச் செழுந் தமிழாய் மீட்டெடுத்த கொடை என்பது எண்ணத்தக்கதாம்.

6. தமிழ்மீட்புக் குறிப்பை அறிந்து கற்பவர் மகிழ்வர்; முந்தை நாளே செந்தமிழ் என்று வழங்கிய தொல்காப்பியர் தேர்ச்சி!

7. தொல்காப்பியம் தேர்ந்த தெளிவினரும், அயன்மொழிச் சார்பால் 'இடு குறி' என்பதொன்றை இணைத்தது மொழிக்கேடு.

8. அவர் அயல் மொழிச் சொல்லுடன் அயல் எழுத்தையும் சேர்த்தது பெருங்கேடாம்.

9. இக்கேடுகளின் பெருங்கேடாக 'மணிப்பிரவாள' நடையைத் தமிழ்க் கட்டமைவைக் கெடுக்க ஆக்கினார்.

10. இந்நடையைக் கண்டபின் அயன்மொழிச் சொற்களை யெல்லாம் இணைத்து அம்மைத் தழும்பு ஆக்கினார்.

30. மொழி வளர்த்தல்

1. சிலருள்முன் கால்டுவெலார் செப்பு பரிதி
நலமார் மறைமலை என்று.

2. என்றந்த மூவருடன் ஏரார்ந்த பாவாணர்
நன்றாய்ந்து வென்றார் நயம்.

3. நயமான வித்தும் முளையும் செடியும்
உயர்மரமும் ஆயினர் உற்று.

4. உற்றார் உழைப்பால் உயர்தனிச் செம்மொழி
நற்றமிழ் ஆமென்று நாடு.

5. நாடறிந்த நூல்களை நானிலம் நன்கறியப்
பீடு நடையிடற் பேறு.

6. பேற்றுக் குரியது பேசுமுயர் நூல்களைப்
போற்றுமொழி யாக்கம் செயல்.

7. செய்தற்குச் செம்மொழிக் கேற்பன வெல்லாமும்
செய்வாரைச் சேர்த்தமைக்கும் சீர்.

8. சீராம் பணிக்குச் செயத்தக்க நல்லவெலாம்
நேர்ந்துதவல் ஆள்வோர் நெறி.

9. நெறிவகுத்தல் நேரியர்க் கொப்படைப்பு நேய
உறுதிக் கடனாற்றல் மூன்று.

10. மூன்றும் தனித்தனி யாகா ஒருமிப்பாய்
ஏன்றலே வெற்றி வழி. 300

30. தமிழ்வளர்த்த தகவாளர்கள்

1. முற்பட மொழிவளர்ச்சி புரிந்தவருள் கால்டுவெலார், பரிதிமால் கலைஞர், மறைமலையார் என்பார் மூவர்.

2. இந்த மூவருடன் மொழிவள ஞாயிறே தோன்றி அயன்மொழிக் காரிருளை அகற்றிய தென்னத் தோன்றிய பாவாணர்.

3. இந்நால்வரும் பாவாணர் கூற்றுப்படி தனித்தமிழ் வித்தும், முளையும், செடியும், மரமும் என்ன விளங்கியவர்.

4. இவர்கள் உழைப்பால் "உயர்தனிச் செம்மொழி யாம் நல்ல தமிழ் மொழி" என்பது வாய்க்க நேர்ந்த தறிக.

5. தமிழ்நாடு கொண்ட உயர்ந்த நூல்களை உலகமும் அறிந்து பெருமித நடையிடச் செய்தலே அவற்றைப் பெற்ற பேறாம்.

6. பெறுதற்கு அரிய பேறாக வாய்ந்த நூல்களை உலகம் போற்றப் பன்மொழிகளிலும் மொழியாக்கம் செய்தல் முறையாம்.

7. இதனைச் செய்வதற்குச் செம்மொழித் துறைக்கு, வேண்டுவன எல்லாமும் செய்யத் தக்காரைச் சேர்த்தமைத் தலாம்.

8. சிறப்பான இப்பணியைச் செவ்விதில் செய்யத் தக்க அனைத்தையும், உள்ளார்ந்த உணர்வோடு செய்தல் ஆள்வோர் கடன்.

9. செயற்பாட்டு நெறியமைத்தல், தக்காரைத் தேர்தல் அவர்க்குச் செய்ய வேண்டுவ செய்தல் என்னும் மூன்றும் வேண்டும்.

10. மூன்று கடமைகளும் தனித்தனிக் கடன்கள் இல்லையாம்; மூன்றும் ஒன்றுபட்டுச் செய்யும் செயலே வெற்றிக்கு வழி.

நான்காம் நூறு

31.காக்கும் வகை

1. வழிநோக்கி முன்னேறி வாழ்வாரே வாழ்வார்
மொழிநோக்கி வாழ்வார்க்கும் ஆம்.

2. "ஆமாம் எனும்பேரே ஆகும்" எனத்தேர்ந்தால்
"ஆமாம் கெடுதல்" அதற்கு.

3. அதற்கென்றே சுற்றி அலைவாரைக் கொள்ளா
திதற்கென்றே வாழ்வாரைத் தேடு.

4. தேடி அமைத்தல் திறமாகும்; தேர்ந்தவெலாம்
கூடி அமையும் குவிந்து.

5. குவிந்துள்ள ஆக்கம் குறித்தாயின் கோடி
புவிக்காக்கம் போற்றல் புகழ்.

6. "புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்" என்ற
புகழ்மொழி போற்றல் புகழ்.

7. புகழ்க்காக ஒன்றைப் புரிவார், புரியார்;
புகழ்நோக்காத் தொண்டே புகழ்.

8. புகழ்தான், வினையினில் நீங்கி முனைவன்
தகவதைக் கொள்ளுதல் தாம்.

9. தாமாக நின்று தவப்பணியாய்ச் செய்வார்மேல்
காமாலை நோக்குக் கடிது.

10. கடிதாகத் தம்கடமை காலத்தால் செய்து
முடிப்பாரை முட்டல் முரண். 310

31. மொழியைக் காக்கும் வகை

1. செல்லும் வழியைத்தெளிந்து முன்னேறி வாழ்பவரே வாழ்பவர் அதுவே மொழி நோக்கி வாழ்பவர்க்கும் ஆம்.

2. எதைச் சொன்னாலும் 'ஆம் ஆம்' என்பவரே தமக்கு வேண்டியவர் எனக் கொண்டால், அத்துறைக்குக் கேடேயாம்!

3. பின்னே சுற்றித் திரிபவரைச் கொள்ளாமல் ஏற்கும் துறைக்குத் தக்காராக வாழ்வாரையே தேடிக் கொள்ளல் வேண்டும்.

4. தேர்ந்து தேடி அமைத்தலே திறமாகும். அவ்வாறாயின் முடிக்க வேண்டுவ கூடியமைந்து சிறக்கும்.

5. நம்மொழியில் குவிந்துள்ள ஆக்கப்பாடுகளை ஆராய்ந்தால் உலகுக்குக் கோடிக் கணக்கில் வழங்கிப் புகழ்பெறலாம்.

6. வள்ளுவர் புகன்றவாறு உயர்ந்தோரால் புகழ்ந்து கூறப்பட்டவற்றைக் கண்டு சிறப்பச் செயலாற்ற வேண்டும்.

7. போலிப் புகழுக்காக ஒருசெயலைச் செய்பவர், செய்பவர் ஆகார்; தொண்டாகச் செய்வதே அழியாப் புகழாம்.

8. எடுத்த வினையைக் குறைவின்றிச் சீராகச் செய்து முடித்து அதன்பயனை அடையக் கருதா அருமையே உயர்தகைமை.

9. தாமாகவே முன்வந்து தகவாகச் செய்யும் தகுதியரைக் காமாலைக் கண்ணன் பார்வைபோல் பார்த்தல் அடாத்தனமாம்.

10. எடுத்த செயலை முயன்று காலத் தளவில் செய்துமுடிப்பவரைத் தடைசெய்யும் வகையில் எதிரிடல் வினைக்கேடாம்.

32. மொழிக் கேடர்

1. முரண்டர் முழுப்பகைவர் உட்பகைவர் ஆகார்
அரணாம் பணிக்கவர் கேடு.

2. கேடென்று காட்டாக் கெடுநெஞ்சர், நற்பணிக்கு
நாடினும் நாடாமல் கா.

3. காவல் கடனே கடிதாம், கரவினரைக்
காவல் புரியார் கசடு.

4. கசடே 'முதுகுடுமி' 'வேள்விப்பேர்க் கிள்ளி'
அயரா தவரை அறி.

5. அறிந்தால் விழிப்பாய்; அயலார் கரவை
அறிவாய் தெளிவாய் அமைந்து.

6. அமைந்த இளங்கோ அடிகளும் அண்ணன்
அமைவாய் அமைந்தார் அயல்.

7. அயல்வேள்விச் சாலையுள் அண்ணன்பின் போய
மயலுரைத்தார் தாமே மதித்து.

8. மதிகெட்டு வேற்றார் மதியேற்றார் மாண்புப்
பதிவும் இழந்தார்; பழி.

9. பழிசெய்வார் பாராண்டார்; பண்டுமுதல் இன்றும்
வழிகாணோம் நன்மை வர.

10. வருகே டனைத்தும் வரவேற்கும் கேடர்
பெருகி வருதலைப் பார். 320

32. தமிழ் மொழிக் கேடர்

1. தமிழ்ப் பணிக்கு, முரணானவரும் முழுதுறு பகைவராவாரும் உட்பகையாராக இருப்பவரும் ஆகார். அவர் கேடராம்.

2. கேடராகக் காட்டாத வஞ்சர், தமிழாக்கப் பணிக்கு நாடிவந்தாலும், நெருங்க விடாமல் காத்தல் கடன்.

3. காவல் கடமையை வழுவாமல் செய்தலே கடிய வேலையாம். கரவாக இருப்பாரைக் கொள்வார் குற்றவாளியராம்.

4. அத்தகைய கசடரே, பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி இராசசூயம் வேட்ட கிள்ளி என்பதை மறவாதறிக.

5. அவர்களை அறிந்தால் விழிப்பாக இருப்பாய்; அயலார் சூழ்ச்சியையும் அறிவாய்; தெளிவுற்று வாழவும் செய்வாய்.

6. சால்பராம் இளங்கோவும், இறுதியில் செங்குட்டுவன் போலவே அயல் நெறிக்கு ஆட்பட்டு விட்டார்.

7. வேள்விச் சாலைக்குள் செங்குட்டுவன் பின்னே இளங்கோவும் சென்றதை அவரே சொல்லவும் செய்தார்.

8. வேற்றார் வழியில் தம்மதி கெட்டுப் போயவர் தமக்கிருந்த மிகப் பெரிய சிறப்பையும் இறுதிக் கண் இழப்பவரானார்.

9. மாறாம் நெறிகளிலே ஆட்சி செய்பவர் தொடர்ந்தமையால் நாம் நலம் பெறவழிகாண முடியவில்லை.

10. இவற்றால், நம் இன மொழி நாட்டுக்கு வரும் கேடுகளை யெல்லாம் வரவேற்கும் கேடர்களே பெருகினர்.

33. இனத்தரின் இனக்கேடு

1. பார்த்தால் 'தமிழினக் கேடர் தமிழரே';
வேர்த்தென்ன செய்வோம் விளம்பு?

2. விளம்பினால் பாண்டிய நாடு வடுகர்
களமாகச் செய்தவர் யார்?

3. யாரால் மராத்தியர் எய்தினார்; இன்றுவரை
தீராத தீதமைத்தார் தேர்.

4. தேர்ந்தநம் சேரலம் சேரப் பறிபோக
நேர்ந்த பகைவர் எவர்?

5. எவரால் இடுக்கிமூன் றாறுபீர் மேடும்
அவமாய் இழந்தோம் அற!

6. அறச்சீர்த்திக் கண்ணகி ஆலயம் செல்ல
மறிபகை செய்தவர் யார்?

7. யாரோதாம் சித்தூர்ப் பகுதியை நாமிழக்கத்
தேரோட்டம் விட்டார் தெரிந்து.

8. தெரிந்தசீர் வேங்கடத் தேட்டிழக்கக் கூட்டிச்
சொரிந்த வகையென் சொல.

9. சொலத்தக்க சென்னி நகரும் தெலுங்கர்
கொலுவிருக்கக் கூவிய தேன்?

10. ஏனோதான் காவேரி பாலாறு முல்லையெலாம்
தானே இழக்கும் துயர்? 330

33. தமிழ் இனத்தர் செய்யும் இனக்கேடு

1. தமிழ் இனத்திற்குக் கேடராயவரும் கேடராக இருப்பவரும் தமிழரே ஆவர்! எண்ணிக் கூறுக.

2. விளக்கமாகக் கூறுவதானால் மதுரைப் பாண்டியர் ஆட்சி வடுகர்களின் வாழ்விடங்களாகச் செய்தவர் எவர்?

3. இன்று வரை தீராத தீர்வாக அமைந்துள்ள மராத்திய அரசின் தீமைகளுக்குத் தாமே அழைத்துத் தேடித் தந்தவர் எவர்?

4. தெளிவாக நம்மிடம் இருந்த சேரலம், ஒரு சேர நம்மிடம் இருந்து பறிபோக ஆயது தமிழ் மொழிச் சிதைவு தானே.

5. எந்தப் பகைவரால் நம்முரிமை இடுக்கி, மூன்றாறு, பீர்மேடு முதலாயவற்றை முற்றான கேடாக எப்படி இழந்தோம்?

6. கற்பறக் கண்ணகியார் கோயிலுக்குச் செல்லவும் தடுக்கும் பகையாக அமையச் செய்தவர் எவர்?

7. தமிழர்தம் தாய்மண்ணாம் சிற்றூரையும் அதன்பகுதிகளையும் நாமிழந்து போகத் தேர்வடம் பிடித்துத் தந்தவர் எவர்?

8. எவருக்கும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்த திருவேங்கடமாம் தேன்வளத்தை நாம் இழந்துபோக அள்ளித் தந்தவர் எவர்?

9. சென்னிநகராம் சென்னையைத் தெலுங்கர் கொலுவிருக்கை யாகக் கொள்ளச் செய்தவர் எவர்?

10. வழிவழி உரிமையாம் காவிரி, பாலாறு, முல்லையாறு முதலாம் ஆற்று வளங்களை இழக்கும் படியாம் துயர் எப்படி வந்தது?

34. கயமைத் தமிழர்

1. துயர்தாங்கு தூயர் துணிவர் சிலரால்
உயர்தணிகை நாஞ்சில் உள.

2. உளதிழக்க என்றே ஒருப்படுதல் இல்லா
உளங்கொண்டார் உய்வதுதான் என்று?

3. என்றென்றால் இன்றும் இதைஎண்ணல் இல்லாதார்
என்றெண்ணி உய்வார் ஒருங்கு?

4. ஒருங்கெண்ணும் உள்ளம் உளநாட்டை, வேற்றார்
இருந்தாளக் கூடுமோ; எண்?

5. எண்ணின் உலகத் திழிவாளர் இத்தமிழர்
என்பதே உண்மை எழுத்து.

6. எழுதிய ஏடழிப்பும் ஏடொழிப்பும் செய்த
பழுததை எண்ணினரோ பார்.

7. பார்த்தால் 'கிரந்த' எழுத்துப் புகுத்தியது
யார்க்கும் தெரியாதோ அன்று?

8. அன்று தடுக்க அறிவாளர் எண்ணாமை
இன்று படும்பா டியம்பு?

9. இயம்பின் மொழிக்கேடர் செய்ததைப் போற்று
கயமைத் தமிழரே காண்.

10. காணாக் குறையால்நம் கன்னித் தமிழ்த்தாயைப்
பேணா தொழிந்தோம் பெரிது. 340

34. காக்கத் தவறிய கயமைத்தமிழர்

1. தமக்கு வந்த துயர்கள் தாங்கித் தொண்டாற்றிய சிலராலேயே திருத்தணிகையும் நாஞ்சில் பகுதியும் இழவாமல் உள்ளன.

2. எல்லாம் இழப்பதற்காகவே ஒன்றுபடுதல் இல்லாத் தமிழ்ப்பிறவியர் வாழப் போவதுதான் என்றோ?

3. 'என்று' 'என்று' வினவின் இன்றும் இழப்புகளை எண்ணிப் பாராதவராய் இருப்பவர் என்றுதான் எண்ணி வாழ்வரோ?

4. ஒருப்பட்ட உள்ளமுடைய ஓரினத்தவர் நாட்டை வேற்றினத் தவர் எங்காவது ஆள முடியுமா, என்பதை எண்ணுக.

5. இதனை எண்ணிப் பார்த்தால் இவ்வுலகிலேயே இழிவுடையர் இத்தமிழினத்தாரே என்னும் உண்மை கல்லெழுத்தாம்.

6. பண்டிருந்த ஏடுகளை அழித்ததும் ஒழித்ததும் ஆகிய படுபாவச் செயல்களை எண்ணியாவது பார்த்தனரா? பார்க்க!

7. பார்த்தால் தமிழ் அடங்கலில் இல்லாத கிரந்த எழுத்துகளை இணைத்த சூழ்ச்சி எவர்க்கும் தெரியாமலோ போயிற்று.

8. தமிழ்ப் புலமையர் அதனைத் தடுக்காமல் ஏற்றிணைத்ததால் நாம் இப்பொழுது அதை நீக்கப்படும்பாடு எத்தகையது?

9. மெய்யாகக் கூறினால் மொழிக்கேடர் கேட்டை ஏற்றுப் போற்றிய இழிமைக்கு இடம் தந்தவர் அப்போலித் தமிழரே யாம்.

10. தமிழ் கற்றவராகச் செருக்கிய தமிழர்கள் தமிழ்த்தாயின் தூய்மையைப் பேணாமையாலேயே நாம் ஒழிந்தோம் மிக.

35. ஆள்பவர் கேடு

1. பெருங்குறை இன்று பெருவழிக்கண் தோன்றி
   வருமெழுத் தென்பதே வாய்த்து.

2. வாய்த்த வழியெல்லாம் வந்தாளும் ஆரியமும்
   சாய்த்தழிக்கும் ஆங்கிலமும் சார்ந்து.

3. சார்ந்ததாம் இந்தியோ சாரா இடமில்லை
   சேர்ந்தெதிர்த்த சீராளர் முன்.

4. முன்னேதாம் ஆள எதிர்த்தனர்; ஆட்சிவரப்
   பொன்னே எனக்கொண்டார் போய்!

5. போக்கடித்தார் தண்டமிழை; போய்ச்செறிந்தார் ஆங்கிலத்தை
   நாக்கடித்தார் 'வாழ்க தமிழ்' என்று.

6. என்றும் ஒருமையிலார் உட்பகையார் ஒன்றாகும்
   ஆக்கமிலார் ஆள்வார் தொடர்ந்து.

7. தொடர்ந்ததால் அன்னியர் தோட்டக்கா லதென்
   றடர்ந்தார் அழிக்கின்றார் ஆய்ந்து.

8. ஆய்ந்தால் தமிழரை அல்லாதார் யாரேனும்
   ஆளுரிமை இல்லாராய் ஆக்கு.

9. ஆக்காதான் ஆக்கம் அடையாதான்; ஆளடிமை
   நீக்காதான்; ஆளோ நினை!

10. நினைத்தால் தமிழனாய் நீள்வாய்; தமிழ்த்தாய்
    புனைமணிகள் பூண்பாள் புகழ். 350

35. நாடாள்பவர் கேடு

1. நாட்டின் பெருங்குறை நால்வழிச் சாலையில் எழுதப்பட்டுள்ள அயல் மொழிப் பெருக்கம்.

2. தோன்றும் இடங்களிலெல்லாம் ஆரிய எழுத்துகளும் தமிழைக் கீழே தள்ளி அழிக்கின்ற ஆங்கிலமும் மல்கின.

3. இந்தி இடம் பெறாத இடம் இல்லை; எந்த இந்தி எதிர்ப்பால் அரசுகட்டில் ஏறினார்களோ அவர்கள் முன்னேயே!

4. தாம் ஆட்சிக்கு வருவதற்காக வெறியாய் எதிர்த்தனர்; வந்தபின் அதேஇந்தியைப் பொன்னும் மணியுமாக ஏற்றனர்.

5. தமிழை ஒழித்தார்; ஆங்கிலத்தை இறுகப் பற்றினார்! வாய் முழக்கத்தில் மட்டும் 'வாழ்க தமிழ்' என்றார்.

6. தொடக்கநாள் தொட்டு உட்பகையாய் நாட்டின் ஒருமை கெடுத்து ஆட்சியைத் தொடர்கின்றனர்.

7. மொழிக் கேடரே தொடர்ந்து ஆள்வதால் அயலார் தோட்டக்காடு தமிழகமே என்று குவிந்தார்; அழிக்கின்றார்!

8. மெய்யாக இதனை உணர்ந்தால் தமிழ்ப்பிறப்பினர் அல்லாதார், மற்றை மாநிலங்களைப் போல், ஆட்சிக்கு வாராமல் செய்க.

9. அவ்வாறு ஆக்காதவன் ஆட்சிநலம் இல்லாதான்; அடிமையாதல் நீங்காதான்; அவன் மாந்தப் பிறப்பாகப் பிறவான்.

10. அயற்கேடுகளை நினைத்தால் தமிழனாக நிமிர்வாய்; தமிழன்னையும் அணியவேண்டும் அணிகளை யெல்லாம் ஏற்பாள்.

36. உழைப்பை ஒழித்தல்

1. புகழ்ந்தவை போற்றிச் செயமாட்டான் என்று
புகழ்பெறுவான் நீயே புகல்!

2. புகல்வட்டி வாங்குமனை போக்கடிக்கும் சூது
புகவிட்டார் போக்கடித்தார் ஆண்டு.

3. ஆண்டாண்டும் தீரா வறுமையே வாழ்வாக்க
ஈண்டளித்தார் 'கள்மதுக்கள்' எண்.

4. எண்ணினால் வாக்குக் கிலவயக் கொள்ளியை
எண்ணெயொடு வைத்தார் எளிது.

5. எளிதாக வாரி வழங்குதல் எல்லாம்
எளிதாய் ஒழித்த துழைப்பு.

6. உழையாமல் உண்ண வகைகண்டால் யாரே
உழைப்பார்? இறந்த துழைப்பு?

7. உழைப்பாளர் கைகள் இரப்பாளர் கையேல்
உழைப்பொழியா தாமோ உரை?

8. உரைத்தால் 'கொடைபொறா ஊற்றை'யாய்க் காட்டி,
உரைப்பார்; பழிப்பார்; உடன்.

9. உடனொன்றாய்க் கெட்டொழிய ஊர்க்கொள்ளை கொள்ள
இடனென்று தேர்வார் இலர்.

10. இல்லாரே மேன்மேலும் இல்லாதார் ஆகவும்
உள்ளாரே உள்ளாராம் ஊர்ந்து. 360

36. உழைப்பை ஊக்க வேண்டுவாரே உழைப்பை ஒழித்தல்

1. புகழப்பட்டவற்றைச் செய்யமாட்டாதவன், எந்நாளில், புகழை அடைவான் என நீயே கூறு.

2. ஆள்பவர், உழைப்பவர்களை வட்டிக் கடைகளுக்கும் சூதாட்டக் களத்திற்கும் போகவிட்டார்.

3. உழைப்பவரும் பிறரும் வறுமையிலும் நோக்காட்டிலும் கிடக்கும் வகையில், மதுக் கடைகளைத் திறந்து விட்டதை எண்ணுக.

4. எண்ணினால் வாக்குக் கொள்ளைக்காக 'இலவயம்' என எண்ணெயை விட்டுக் கொள்ளியும் மூட்டியது தெளிவாம்.

5. எளிதாக மதுவால் வந்த பொருளைக் கொடையாகவும் இலவயமாகவும் வழங்கி உழையாராக்கிக் கெடுத்தார்.

6. இலவச அரிசியாலும் பணத்தாலும் உண்ண வகை செய்தால் எவரே உழைப்பார்? அதனால் உழைப்பு ஒழிந்தது.

7. உழைத்து வாழ்ந்தவர் கைகள் இரந்து வாழ்வார் கையாக மாறிவிட்டால், உழைப்பு ஒழிந்துபோகாமல் இருக்குமோ?

8. இவ்வுண்மையைச் சொன்னால் கொடுப்பதற்குப் பொறாமைப் படுபவர் என்று அழிபழியும் வசையும் உடன் வாரிவழங்குவார்.

9. அனைவரும் ஒரு மொத்தமாகக்கெடவும், கொள்ளையடிக்கவும் செய்யும் சிறு செயல் என்று தெளிபவர் இல்லை.

10. இச்செயல், வறியவர் மேன்மேலும் வறியவர் ஆகவும், செல்வ வளத்தர் மேன்மேலும் செல்வவளத்தவர் ஆகவும் ஆக்குவவாம்.

37. பகை யொழிக்க

1. ஊர்ந்து வருபாம்பை ஊருக்குள் விட்டகுறை
நேர்ந்தறிந்தால் நேராவோம் நின்று.

2. நின்று கெடுப்பார்க்கு நில்லோம் துணையாக;
ஒன்றுபட் டாவோம் உறுத்து.

3. உறுதுயர் உற்றாலும் ஓர்ந்தறியா மூடம்
உறுவகை எண்ணி ஒதுக்கு.

4. ஒதுக்கி உடனாவார் தம்மையெலாம் ஒன்றாய்ச்
செதுக்கிநாம் சேர்த்தல் செயல்.

5. செயலுக் கெதிரிடை செந்தமிழ் என்னின்
அயலுக் கயலாம் அவர்.

6. அவரும் அறப்போருக் காகாத் தடையாய்
அகற்றி நடப்பாய் அறிந்து.

7. அறிந்தொன்றி நிற்பாரை, ஆரத் தழுவிச்
செறிந்திருத்தல் வேண்டும் திறம்.

8. திறவோன் சிறுகுறையைத் தேடிப் பகையா
துறவோனாய்க் கொள்க உவந்து.

9. உவப்பார் ஒருமிப்பார் ஒன்றாவார் என்றால்
தவழ்ந்தோடும் தானே பகை.

10. பகையழிக்க எண்ணின் படுதுய ரெல்லாம்
நகைத்தேற்கும் திண்மை பெறு. 370

37. நாட்டுக்கு கேடாம் பகையை ஒழிப்பாயாக

1. ஊருக்குள் வருபாம்பை வரவிட்டது நம்குறையே எனத் தேர்ந்து தெளிந்தால் நிமிர்ந்து நம் கடமை புரிவோம்.

2. நாட்டைக் கெடுப்பவர்க்குத் துணையாக நிற்க மாட்டோம்; நாம் ஒன்றுபட்டுச் செயலாற்றக் கிளர்வோம்.

3. தாங்காத் துயரங்கள் வந்தாலும் அவற்றை அறிய மாட்டாத அறிவுக் குறைகளை உரிய வகையால் எண்ணி ஒதுக்குக.

4. ஒதுக்க வேண்டுவாரை ஒதுக்கி, தக்காரை யெல்லாம் ஒன்றாகக் கட்டோடு அமையச் செய்து கடனாற்றல் வேண்டுவதாம்.

5. நம் செயலுக்கு எதிரிடையாக இருப்பவர் தமிழ்ப் பிறப்பினரே என்றாலும், அவர் கெடுக்கும் அயலாரே ஆம்.

6. அத்தகையவர்களையும் மேற் கொண்ட போருக்கு உதவாத தடையாகத் தள்ளி வீறு நடையிடுவாயாக.

7. உண்மை உணர்ந்து உணர்வோடும் ஒன்றி நிற்பவரை முழுதுறத் தழுவிச் சேர்ந்தும் செறிந்தும் திறத்தோடு இருத்தல் வேண்டும்.

8. ஒன்றிய சீரியோனிடம் சிறு குறைகள் உண்டாயினும் துருவிப் பார்த்துப் பகையாக்காது நட்பாக மகிழ்வுடன் கொள்க.

9. தமிழர் தம்முள் கூடி மகிழ்வர்; ஒருமித்துச் செயல்படுவர்; பகைக்கு இடம் தாரார் என்றால், பகை தானே அகலும்.

10. பகைகளை அழிக்க எண்ணினால், வரும் துயரங்களைக் கண்டு நகைத்து வெல்லும் உறுதியைத் தாங்குக.

38. தனியாட்சி

1. பெற்றவ ரேனும் பிறிதெண்ணின் கொள்ளாமல்
   உற்றது செய்தலே ஊக்கு.

2. ஊக்கின் அவர்தாமும் உன்னோடு நிற்பராம்
   தேக்கெறிந்து கொள்வாய் திடம்.

3. திடமான மக்களைத் தேடாத பெற்றோர்
   இடமான தில்லை யிது.

4. இதனை அறிந்திடப் பண்டைப் புறநூல்
   அதனை எடுப்பாய் அறிந்து.

5. அறியப் பிறிதென்ன அண்டைநம் ஈழம்
   அறிவிக்க வில்லையோ அஃது.

6. அதையும் பொறாமல் கெடுத்தவர் யாராம்?
   அதையறிந்தால் நீங்கா ததிர்வு.

7. அதிர்வென்றால் சொல்லல் அரிதாம்; தமிழர்
   முதிர்பகையாய் முட்டுமிந்தி யம்.

8. இந்தியத் தோடும் இவணாண்டார் கைகுலுக்கி
   நொந்தழிய வைத்ததாம் நோவு.

9. நோவால் பயனென்ன நூறாயிரம் கொத்தடிமை;
   தாயாம் தமிழாளல் இல்.

10. இல்லை தனியாட்சி இந்தியக் கொத்தடிமை
    உள்ளவரை ஓயா திடர். 380

38. தமிழினத்தர்க்கென அமைந்த ஆட்சி

1. பெற்றோரே எனினும் மாறாக நிற்பார் எனின், அதனைக் கொள்ளாமல் செய்ய வேண்டுவ செய்தலிலே ஊக்கமாக நில்.

2. அவ்வாறு நீ ஊக்கமாக நிற்பது கண்டால் அப்பெற்றோரும் உன்னோடு கூடி நிற்பார்; ஆதலால் மேலும் உறுதி கொள்வாய்.

3. தமிழகத்தின் தனிச்சிறப்பு, திடமான மக்களின் திறமான செயலை ஒப்பாத பெற்றோர் இருந்தது இல்லை என்பது.

4. இதனை நேரிடையில் அறிந்து கொள்ள விரும்பினால் புறநானூறு என்னும் வீறு மிக்க நூலைப் படித்து அறிக.

5. அறிய வேறு சான்று என்ன வேண்டும்? அப்போர் வாழ்வை, நம் ஈழத்துப் போராளிகள் உலகுக்கே அறிவிக்க வில்லையா?

6. அவ் உரிமைப்போரைப் பொறுத்துக் கொள்ளாமல் கெடுத்தவர் எவர்? அதை அறிந்தால் உண்மைத் துடிப்பு ஒடுங்குமோ?

7. ஈழத்துக்கு உண்டாக்கிய அதிர்ச்சியைச் சொல்ல முடியுமா? இந்தியம் அழித்தது அல்லவோ அது!

8. இந்தியம் மட்டுமா? இந்தியக் கூட்டாய்த் தமிழக ஆட்சியும் கைகுலுக்கி நோவுக்கு நோவாக்கிய தல்லவோ?

9. எல்லாம் நிகழ்ந்தபின் நோவதால் என்னபயன்? பல்லாயிரம் ஆண்டு ஆட்சி புரிந்த தமிழின ஆட்சி ஆங்கு இல்லை.

10. தமிழனுக்கு உரிமை ஆட்சி இன்றிக் கொத்தடிமையாகக் கிடக்கும் காலம் வரை இடர் ஒழியப் போவதில்லை.

39. விழிப்புறல் வேண்டும்

1. இடர்விளைத்த தேசியம் ஈண்டு திரவிடம்
   என்னும் பகையாம் இரண்டு.

2. இரண்டன் துணையால் இலங்கையன் செய்தான்
   முரண்டனாய் எல்லாம் முடித்து.

3. முடித்தான் முடிவுக்கு மூண்டவுள் ளாளன்
   துடிப்பும் துணையா யது.

4. ஆயவெலாம் தாய்த்தாய்த் தமிழ இனஅழிப்பே
   ஆயதனை எண்ணாரே ஆர்த்து.

5. ஆர்த்தவர் தம்மை அடாவடி வன்முறையாய்ச்
   சேர்த்தார் சிறைக்குள் செறித்து.

6. செறித்தாலும் சேரச் சிறுமைகளைச் செய்து
   மறித்தாலும் தாங்கினார் தாம்.

7. தாமே அரசாளல் தாதாவாம் என்றாரும்
   தாமே இறங்குவார் தாம்.

8. தாழ்வும் உயர்வும் தமிழகம் கண்டாலும்
   வாழ்வதுதான் மாறா வகை.

9. வகைகெட்ட வாழ்வில் வரிசை இழந்தார்
   நகையாட்சி நல்குமோ நன்கு?

10. நன்குணராக் கும்பலே நாட்டில் இருப்பதால்
    பின்பும் தமிழ்க்கேடே யாம்.

39. தமிழர் விழிப்புடைய வேண்டும்

1. இந்திய தேசியமும், இங்கே ஆளும் திரவிடங்கள் செய்து வரும் தமிழ்க்கேடுகளும் எண்ணின் நமக்கு இரண்டும் பகையே.

2. நம் இரண்டு பகைகளின் துணையைக் கொண்டே இலங்கைச் சிங்களக் கொடியன் முரண்டனாய் ஈழத்தமிழரசை அழித்தான்.

3. அழித்த அழிவுக்கு, ஈழத்திலேயே உண்டாய பல்பகையும் உட்பகையும் கூடியதும் காட்டிக் கொடுத்ததும் துணை.

4. நடந்தவை எல்லாமும் தாவித் தாவித் தமிழ் இன அழிப்பே ஆயதைத் தமிழர் எண்ணிப் பார்த்தார் இல்லையே!

5. அமைந்துகிடந்தார் கிடக்க, அடாவடிக்கு எதிராக ஆர்த்து எழுந்தவரை சிறைக்குள் சேர்த்தடைத்தார் இங்கு.

6. துணிவாக எதிர்த்துச் சிறைக்குட்பட்டு ஆங்குச் செய்யப்பட்ட சிறுமைகளைத் தம் உறுதியான தன்மையால் தாங்கினார்.

7. தாம்தாம் ஆள்வோம் என்னும் தடிப்போடு ஆட்சி புரிந்தவரும், தம் செயலால் ஆட்சியில் இருந்து இறக்கப்படுவார்.

8. தமிழகம் என்ன கண்டது? மீண்டும் தமிழ்க் கேடர் ஆட்சியைக் கண்டதல்லாமல் நல்லாட்சி கண்டதில்லையே!

9. வாழ்வியல் வகை கெட்ட கெடுகேடர், நடுமை நயன்மை, பண்பாடு இல்லார் நல்லாட்சியை நல்க முடியுமோ?

10. உண்மை நேர்மை உணராத கூட்டமே நாட்டில் பெருக் கெடுத்து நிற்பதால் தமிழகத்திற்குக் கேடே தொடர்கிறது.

40. தனிநாடு தேடு

1. ஆக்கம் இனப்பற்றோ டாளுமை தேக்கும்
மொழிப்பற்றும் மூண்டிருக்க முன்னு.

2. முன்னின் தமிழனே ஆள முறைகாண்பாய்
முன்னேற்றம் காண்பாய் முழுது.

3. முழுதிலாத் தீத்தமிழன் வேற்றானே ஆவான்
பழுதவனை நாடாள வைப்பு.

4. வைக்கத் தகுவாரை வைக்காமை வைப்போரில்
வைத்ததீ என்ன அறி.

5. அறிந்தாயேல் தக்கதமிழ் ஆட்சியனைக் காண்பாய்
பெறுநலங்கள் எல்லாம் பெற.

6. பெறவேண்டும் மேலுரிமை பெற்றாதல் இன்றேல்
அறவொதுங்கி நாடாக்க ஆய்.

7. ஆய்ந்தால் தமிழினம் ஆதியில் ஆதியினம்
தேய்ந்தான் உண்மை தெரி.

8. தெரிந்தால் தனிநாடு தேடாமல் மாட்டாய்
பிரிந்திடுதல் ஒன்றே வழி.

9. வழிவந்த ஈழத்தை வாராமல் செய்த
பழியாளர் செய்வாரோ பார்த்து.

10. பார்த்தால் வடவரும் அன்றித் திரவிடரும்
நேர்ந்தழிக்கும் கூட்டாய் நினை. 400

40. தமிழர்க்கெனத் தனிநாட்டை ஆக்குக

1. தமிழர்க்கு ஆக்கமாவன மூன்று. தமிழினப் பற்று; நல்லாளுமையோடு கூடிய மொழிப்பற்று என்பன முழுதுற அமைந்திருத்தல்.

2. இவை அமைந்த அரசைக் கருதினால் தமிழனே தமிழகத்தை ஆளுதற்குரிய வழிகாண்க; முன்னேற்றமும் காண்க.

3. இனமொழி நாட்டுப் பற்று இல்லாத தீய தமிழன், வேற்றவனே ஆம்; அவனை நாடாள வைப்பதும் குற்றமே.

4. ஆட்சியில் வைக்கத் தக்கவரை வைக்காமல் பிறரை வைத்தல் வைக்கோல் போரில் வைத்த தீயினுக்கு ஒப்பாம் தீமையாம்.

5. இதனை நன்கு அறிந்தால் தகவார்ந்த ஆட்சி புரிவாரைக்காண முடியும்; பெற வேண்டும் நலங்கள் யாவும் பெறவும் முடியும்!

6. இந்திய ஒன்றியத் திருந்தாலும் தமிழகம் ஆளுரிமை பெற்றாதல் வேண்டும். இல்லையேல் ஒதுங்கித் தனிநாடாக்க வேண்டும்.

7. ஆராய்ந்தால் தொல்பழமையான இனம் தமிழினமே. அவ்வினம் தேய்ந்தும் ஓய்ந்தும் கிடக்கின்ற உண்மையை உணர்க.

8. உணர்ந்தால் தனிநாடு அடையாமல் விடமாட்டாய்; அதற்கு இந்தியப் பிணைப்பு நீங்கிப் பிரிந்திருத்தல் ஒன்றே வழி.

9. முறையாகக் கிடைக்க இருந்த ஈழத்தை அடையவிடாமல் செய்த பழிகாரர், உண்மை உணர்ந்து செய்வன செய்வரோ?

10. நிகழ்ந்தவற்றைப் பார்த்தால் வடவரும் கூடிக் கெடுத்த திரவிடரும் தமிழரை இணைந்தழிக்கும் பகையாக எண்ணுக.

ஐந்தாம் நூறு

41. மீட்டெடுக்கும் மீட்பர்

1. நினைப்போம் தமிழாட்சி நீண்டதுபோல் நீண்ட
தெனைத்தாட்சி ஞாலத்தில் எண்.

2. எண்ணின் இடையீடொன் றில்லாமல் எம்மொழிதான்
மண்ணின் மொழியா யது.

3. அதற்கென்று கையகல மண்தானும் இன்றேல்
இதற்கொப்பாம் கேடுண்டோ கூறு.

4. கூறுதல் வேண்டாமல் கூடுவாய் குன்றாக
மாறுவாய் மாயும் பகை.

5. பகையின்றி நாமெல்லாம் பண்பட்டு நின்றால்
புகையாகப் போகும் புரிந்து.

6. புரிந்தால் பகைவர் புகுந்தாட்டம் போடார்
தெரிந்துபோம் உண்மைத் திடம்.

7. திடமாய் எதிரிட்டுத் தீயாய் எழாமல்
இடந்தந்த கேடென்று கொள்.

8. கொள்வாயேல் எச்சரிக்கை கொள்வாய் இழப்பொழித்துக்
கொள்வாய் இழந்தனவும் மீட்டு.

9. மீட்டெடுக்கும் மீட்பர் மிகவேண்டும்; தம்நலத்தை
ஓட்டும் உரவர் ஒருங்கு.

10. ஒருங்கமைந்த ஒள்ளியனே ஒப்போலை எண்ணான்
வருமினத்தைக் காப்பான் வரிந்து. 410

41. இழந்தவற்றை மீட்டெடுக்கும் மீட்பர்

1. தமிழ்வழி ஆட்சி நீண்டு அமைந்ததுபோல் உலகில் எந்த மொழியாட்சியாவது நிகழ்ந்தது உண்டா என நினைக்க வேண்டும்.

2. நினைத்தால் பல்லாயிரம் ஆண்டுகளாக உலகில் எந்த மொழிதான் இருவகை வழக்குகளிலும் இருந்தது?

3. அத்தகைய தமிழ் மொழிக்கென உலக ஆளுமையில் சிறிதளவேனும் இல்லாத கேடுபோல் ஒருகேடு உண்டா?

4. வெளிப்பட விளம்பாமல் ஒன்றுபடுக; குன்றம்போல் நிமிர்க. நின்றால் பகை உடனே அழிந்துபோகும்.

5. நமக்குள் பகையும் உட்பகையும் இல்லாமல் கூடிநின்றால் பகையனைத்தும் புகைபோலப் போயொழியும்.

6. உன் ஒருமை நிலைப்பாட்டைப் புரிந்தால் தாந்தோன்றி ஆட்டங்களைப் போடாமல் உண்மை தெரிந்து போவார்.

7. நாம் ஒன்றுபட்டு மூண்டெழும் தீயேபோல் எழுதல் இல்லாமல் இடந்தந்த தீமையே காரணம் என அறிவாய்.

8. இவற்றை அறிந்து கொள்வாயானால் இழந்த இழப்புகளை ஒழித்து அவற்றை மீட்கவும் செய்வாய்.

9. நாடுமொழி இன மீட்டெடுப்பைக் கொண்டு பகையை ஓட்டவல்ல மீட்பரே இப்பொழுது நமக்குவேண்டும்.

10. வாக்குகளைப் பற்றிக் கருதாமல் இனக் காப்பே கருதும் வல்லாளன் தோன்றினால் தான் காப்பாளன் ஆவான்.

42. நம் கேடு

1. வரியெழுத் தில்லாமல் வந்த வடவர்
வரிந்தார் தமிழால் வரி.

2. வரிகொண்டார் மெய்யியல் வாரிப் பெயர்த்தார்
எரியோம்பல் அன்றி இலார்.

3. இலாத கலையெல்லாம் ஏட்டில் பெயர்த்தார்
சொலாமல் எரித்தார் தமிழ்.

4. தமிழில் மறையில்லை மந்திரம் இல்லை
எமக்குள தென்றார் இரைந்து.

5. இரைந்த மொழியில் இசைவாகி நின்றார்
கரைந்தார் இறைமொழி என்று.

6. என்றென்றும் பின்னுக்குத் தள்ளவே தெய்வமொழி
என்றார் தமிழை இழித்து.

7. இழித்தனர் நீசமொழி என்றார் இழிப்பை
இழிதமிழர் ஏற்றார் இணைந்து.

8. இணைந்ததால் கோயிற்குள் இல்லாமல் செய்தார்
இணையில்லாத் தேவாரப் பா.

9. தேவாரம் தீண்டாமல் தேங்காய் பழமேந்திப்
போவாராய் ஆயினர் போய்.

10. போய்த்தட்டில் போட்டதாம் காசுக்குள் தெய்வருள்
ஆய்விட்ட தார்செய்த கேடு? 420

42. நமக்கமைந்த கேடு

1. வரியெழுத்து இல்லாமல் இவண்வந்த வேதியர் தமிழியைக் கண்டு வரி எழுத்துப் படைத்தார்.

2. வரிஎழுத்தைப் பதிந்து கொண்டவர் இறைமை பற்றிய மெய்யியல் கொள்கைகளையும் பெயர்த்துக் கொண்டார்.

3. தம்மிடம் அதுகாறும் இல்லாத தமிழ்க் கலைகளை யெல்லாம் பெயர்த்தார். பெயர்தானும் சொல்லாமல் எரித்தார்.

4. பின்னர்த் தமிழில் தமக்குள்ள மறைகள் இல்லை; மந்திரங்களும் இல்லை என்று பெருமிதமாகப் பேசினர்.

5. அவர்கள் உரத்துக் கூறிய வல்லொலி வேதியத்தில் இசைவாகி நின்ற தமிழரிடம், 'எம் மொழி தேவ மொழி' என்று புளுகினார்.

6. தமிழை இழிவுபடுத்தித் தம்மொழிக்குப் பின்னே தோன்றிய மொழி என்பதற்காகவே இவ்வலக்காரச் செயலைச் செய்தார்.

7. அவ்வளவில் நில்லாமல் தமிழை 'நீசமொழி' எனப்பழித்ததையும் தமிழர் ஏற்று இணைந்தார்.

8. தமிழர் இணைந்தமையால், மன்னர் துணைகொண்டு தேவாரம் முதலியன கோயிலுக்குள் புகாமல் ஆக்கினார்.

9. தேவாரம் திருவாசகம் எடுக்காமல் தேங்காய் பழம் ஏந்திப் போகின்ற சடங்கராக்கிவிட்டார் கோயிலுக்குள் போய்.

10. தேங்காய் பழத்தட்டில் காசு போட்டுவிட்டால் தெய்வ அருள் கிட்டிவிட்டதாகச் செய்தவர் கேடா? நம்பியவர் கேடா?

43. தமிழ்வாழ வழி

1. கேடுநாம் செய்தோம்செய் கேட்டை அகற்றாமல்
ஓடினோம் கோயிலை விட்டு.

2. கோயிலை விட்டது கோலோச்ச மேலுரிமை
வாயிலாய்ப் போயது வாய்த்து.

3. வாய்புடைத் தோதி வயிறுபுடைத் துண்டுதமிழ்
ஏய்ப்பாரை விட்ட திடர்.

4. இடரெல்லாம் கோயிலை விட்டதே; மேலும்
படர்ந்ததைக் கண்ணாரப் பார்.

5. பார்த்தால்தான் நம்பாட்டன் சொத்தைப் பறிகொடுத்த
சீரழிப்பே என்போம் சிதைத்து.

6. சிதைத்தார் கலையைச் சிதைத்தார் மொழியை
உதைத்தார் நமையும் உணர்.

7. உணர்ந்தால் மொழியழிவு மூலத் தொடக்கம்
உணர்வாய் இனியேனும் உன்.

8. உன்னால் முடியும் உணர்ந்துள்ளே போய்நின்று
உன்னருமைத் தேவாரம் ஓது.

9. ஓதுவாய்; உண்டியில் தட்டினில் யாதொரு
காசும்நீ போடாமல் வா.

10. வந்தால் வரிசையாய் யார்யாரும் செய்தால்தான்
வந்தெய்தும் தண்டமிழ் வாழ்வு. 430

43. தமிழ் மொழி வாழ்வதற்கு நாம் செய்யவேண்டியவை

1. நாமே கேடு செய்தோம்; செய்தநம் கேட்டை நீக்காமல் கோயிலையே விட்டு நெருங்காமல் போனோம்.

2. நம் பழவுரிமைக் கோயிலை விட்டது, வேதியத்திற்குக் கோயிலை ஆள மேலுரிமை தந்ததாகப் போயிற்று.

3. உரத்தெழுப்பி வாய்பெருக்க ஓதவும் வயிறு புடைக்க உண்ணவும் ஆகிய வேதியத்திற்குத் தடையில்லா தாயது.

4. நமக்குள்ள இடர்களின் மூல மெல்லாம் நாம் கோயிலை விட்டு வெளிப்பட்டதே ஆகும். அதுவே விரிந்ததாம் பின்னர்.

5. இவற்றை எண்ணிப்பார்த்தால்தான் நம்பாட்டன் சொத்தை நாமே அள்ளித்தந்த சீர்கேடு அஃதாம் என்பதை உணர்வோம்.

6. அதனால் வேதியர் நம் கலைகளையும் மொழியையும் அழித்தார்; நம்மை உதைப்பவரும் ஆனார்.

7. இவற்றை ஆய்ந்து அமர்ந்து உணர்ந்தால் நம் மொழியழிவுக்கு மூலமாம் தொடக்கம் இதுவே, என்பதை அறிவாய்.

8. இப்பொழுதும் என்ன? உண்மை உணர்ந்து கோயிலுக்குள் சென்று தேவார திருவாசக திருவாய்மொழிகளை ஓதுக.

9. அவ்வாறு உள்ளுருகி ஓதி உண்டியலிலோ, அருச்சகர் தட்டிலோ எவ்வொரு காசும் போடாமல் திரும்பி வருக.

10. இத்திட்டத்தை மேற்கொண்டு போற்றினால் உடனே தமிழுக்கு வாழ்வு ஒவ்வொன்றாகத் தானே வந்து சேரும்.

44. எழுச்சிகொள்

1. வாழ்வு தமிழுக் கெனவாக்க எண்ணுவார்
தாழ்வின்றிக் செய்கடன் தான்.

2. தானே இசையொடும் கூத்தும் தமிழாகும்
தேனாய் இனிக்கும் தெரு.

3. தெருத்தோறும் தேன்தமிழேல் தேடுமுறை மன்றும்
உருப்படும் ஓங்கும் தமிழ்.

4. தமிழாட்சி செய்யும் தமிழ்க்கல்வி எங்கும்
அமிழ்தாக எய்தும் அறி.

5. அறிந்து கடனாற்ற ஆரென்ன நானென்
றுறுதிகொண் டோங்கி எழு.

6. எழுந்தால் எழுவர் எழும்ஊர் எல்லாம்
விழுதாய் விரியும் விரைந்து.

7. விரைந்து தமிழ்நாடு வீழா துயரும்
கரந்தவை எய்துமேகண் முன்.

8. முன்னாண்ட சிற்பமும் முத்தமிழும் ஓவியமும்
தன்னாண்ட கூத்திசையும் தாம்.

9. தாமே எழும்பத் தமிழர் எழும்புதல்
தாமே முதலாம் தகவு.

10. தகவாய் எழுது; தகவாய் எழும்பு;
தகவாய் எழுப்பு; தர!

44. தமிழனே நீ எழுச்சி கொள்வாயாக

1. தன் வாழ்வைத் தமிழுக்கே ஆக்க வேண்டும் என்பவன் உடனே ஒப்படைக்க வேண்டியது தன்னையே யாம்.

2. அவ்வாறு செய்வானேல், இசையும் கூத்தும் எம் முயற்சியும் இல்லாமல் தானே தமிழாகிவிடும்! தெருவெங்கும் இனிக்கும்.

3. தெருத்தோறும் இசையும் கூத்தும் திகழத் தொடங்கினால் முறைமன்றங்களிலும் தமிழ் ஆட்சி செய்யும் நிலையாம்.

4. தமிழாட்சியே நாட்டில் நடைபெறும். தமிழ்வழிக் கல்வியே எந்நிலையிலும் எவ்விடத்திலும் உண்டாகிவிடும்.

5. இவற்றைச் செய்ய 'எவர் வருவார்' என்று எண்ணாமல், 'நானே செய்யத் தொடங்குவேன்' என எழுச்சிகொள்.

6. எழுந்தால் அண்டை அயலார் அனைவரும் எழுவர்; ஊரும் எழும்; ஆலமரம் வீழ்தால் விரிவது போல்!

7. அந்நிலையில் தமிழ்நாடு வீழ்வில்லாமல் உயர்ந்தெழும்: தலைகாட்டா நலங்களெல்லாம் கண்டுமகிழத் தோன்றும்.

8. முன்னே முழுதுற நடைமுறைப் பட்டிருந்த சிற்பமும் இசையும் கூத்தும் ஓவியமும் கூடியெழும்.

9. இவையெல்லாம் தகவாக எழும்ப வேண்டுமானால், முதற்கண் தமிழர்கள் தாமே முந்துற எழவேண்டும் அல்லவோ!

10. ஆதலால், தகவாக வேண்டுவ எழுது; நீயும் தக்கானாய் எழும்பு; மற்றையோரையும் தக்காராக எழுப்பு; இவற்றைத்தர.

45. வெல்லும் வழி

1. தரவொருவர் வேண்டா; தகவதனைக் கொள்க;
உரனெல்லாம் உன்னிடத் துண்டு.

2. உண்டென எண்ணாமல் போன உணர்வுதான்,
கொண்ட தடையாய்க் குறி.

3. குறித்துணர்ந்தால் கொண்டாய் குறியாத வெற்றி
செறியுமது காண்பாய் சிறந்து.

4. சிறப்பென்ன சீரென்ன எல்லாமும் உன்றன்
மறப்பாலே போயதாம் மன்.

5. மன்னனே பிச்சையாய் மாறிய காட்சியே
உன்னிலையாம் உண்மை உரை.

6. உரைப்பார் உரையெல்லாம் ஓமென்று நம்பித்
திரைப்பால் துரும்பாவ தேன்?

7. ஏனென்று கேளாமை என்னிழிவாம் என்னாமல்
நானென்று நின்றாய் கெட.

8. கெட்டபின் னேனும் கெடுத்தாரை எண்ணாயேல்
முட்டாளில் முட்டாளாம் நீ.

9. நீயென்றால் உன்றன் நிலைதிருப்பப் பாடாற்றா
நானுந்தான் என்றறிந்தால் நாண்.

10. நாணம் பகுத்தறியா நாணம்தான்; கண்மூடம்
பேணும் அதுவே பெரிது. 450

45. நாம் வெற்றி கொள்வதற்காகும் வழிகள்

1. தமிழ் வளம் தருவதற்கு வேறொருவர் வேண்டா; நீயே கொள்க. அதற்குரிய அறிவும் ஆற்றலும் உன்னிடத்தே உண்டு.

2. எனக்கு அவ்வாற்றல் உண்டு என்று எண்ணாமல் போய்விட்ட நிலைதான் அவற்றுக்குத் தடையாக உள்ளதை அறிக.

3. அதை அறிந்து கொள்வாயானால் நீ எண்ணாத வெற்றி எல்லாமும் ஒருங்கே கூடிக் குலவி வரும்.

4. உன் சிறப்புகள், உன்வளங்கள் ஆகிய எல்லாமும் அவற்றை நீ மறந்த மறப்பாலே போயதென உறுதியாகத் தெளி.

5. வளமல்கிய வளவனே பிச்சைக்காரனாகி விட்ட நிலையே உன்நிலை என்னும் உண்மையை உணர்க.

6. மாற்றார் கெடுப்பார் சொற்களை எல்லாம் ஆம் ஆம் என்று கேட்டுச் செயல் பட்டதால் அலைமேல் துரும்பாய் ஆனாய்.

7. ஏன் என்று கேளாமல் எதையும் ஏற்றமை என் இழிவே என்று எண்ணாமல் நீயே கெட நான் என்று முன்னின்ற தறிக.

8. கெட்ட பின்னராவது கெடுத்தவரையும் கெட்ட உன்னையும் எண்ணாவிடில் முட்டாளில் முட்டாள் நீயே என்பதை உணர்.

9. நீயென்று உன்னைப்பழித்து நான் ஒதுங்கல் முறையன்றாம்; உன்னைத் திருந்துமாறு கடமை புரியா நானும் குற்றவாளியே.

10. இதில் வெட்கப்படத்தக்கது உண்மை உணர்ந்தறியாமையேயாம். கண்மூடியாகி விட்டவன் எளிதில் கண்ணைத் திறப்பானா?

46. தமிழ் முகவரி

1. பெரிதாக ஒன்றும் பெறவேண்டா நீயுன்
உரிமையைப் போற்றி உணர்.

2. உணர்ந்தால் உணர்வார் உறுதியாய் நிற்பார்
இணைவார் அனைவோரும் ஏற்று.

3. ஏற்றுண்ணல் என்றும் இழிமையாம், உன்னுழைப்பைப்
போற்றிநீ வாழ்வாய் பொலிந்து.

4. பொலிவாய வாழ்வு புகுங்கடமை யாற்ற
வலிவாக நிற்றலே யாம்.

5. ஆங்காலம் போங்காலம் பாராமல் எந்நாளும்
ஆங்காலம் என்றே அறி.

6. அறிந்தால் கணியத்தை நம்பாய்; கடமைத்
திறனால் புகுமே திரு.

7. திருவாளன் நீதான் திறங்கெடுப்பார் சொல்லால்
திருவிழப் பெண்ணித் தெளி.

8. தெளிந்தால் மொழிக்கொலைஞர் 'சோதிடப்பேர்க் கேடர்'
எளிதாய்ப் புலனாம் உனக்கு.

9. உனக்கறி வுண்டானால் உன்முகத்தை அம்மைத்
தழும்பாக்கு பேரைத் தவிர்.

10. தவிர்த்தால் தமிழ முகவரியைப் பேறாய்ச்
செவியாரத் துய்ப்பாய்செந் தேன். 460

46. தமிழனுக்குரிய அடையாளம்

1. பெரிதாக அடைய வேண்டிய தொன்றும் இல்லை; இயல்பாக இருந்தவை எவையோ அவற்றை விடாமல் காக்கக் கருது.

2. நீ உணர்ந்தால்; உன்னைச் சார்ந்தாரும் துணை நிற்பார். உன்னோடு ஒன்றுவார்; பிறர் பிறரும் ஏற்றுக் கொண்டு இணைவார்.

3. இலவயமாகவும் பிச்சையாகவும் கையேந்தல் இழிவாம். உன் உழைப்பால் உண்டாம் வளத்தால் சிறப்பாக வாழ்வாயாக.

4. நீ பொலிவு மிக்க வாழ்வு வாழ்வது எதற்கெனின் நமக்கு உண்டாகிய கடமைகளைத் துணிவாகச் செய்து முடிப்பதற்கே.

5. 'இது நல்ல காலம்' 'இது கெட்டகாலம்' என்று பாராமல், 'உள்ள வெல்லாம் நல்ல காலமே' என்று தெளிவு கொள்க.

6. அவ்வாறு நீ அறிந்தால் சோதிடத்தை நம்பமாட்டாய்; உன் கடமை யாற்றலால், வேண்டும் வளமெல்லாம் வரும்.

7. நீ திருவாளன் என்பதை உணர்க; உன்திறனைக் கெடுப்பவர் சொல்லாலேயே உன்திருவை இழந்தாய் என்பதறிக.

8. நீ ஆராய்ந்தால் மொழிக்கேடு செய்வாருள் முன்வரிசையர் சோதிடரே என்பது உனக்குப் புலப்படும்.

9. உனக்குத் தன்னறிவு உண்டு என்றால் உன் முகமாம் பெயரை அம்மைத் தழும்பாக ஆக்கியவர் அவர் என்று தவிர்ப்பாய்.

10. சோதிடர் சொற்கேட்டுப் பெயர் வைத்தலைத்தவிர்க்க நீ உறுதி கொண்டால், உன் முகவரியாம் பெயர் தமிழ்த்தேனாம்.

47. மொழிக் கலப்பு

1. தேன்மொழி உன்மொழி என்றால் எவர்மொழியும்
தேன்மொழி யாதல் இயல்பு.

2. இயல்பு கெடுப்பவன் தேள்மொழியன் என்றே
இயம்புதல் தேர்ந்த நெறி.

3. நெறிப்படி செல்லின் நெருஞ்சிமுள் குத்தா
நெறிமந் திரத்தை நினை.

4. நினைப்பாய் கலப்படக் குற்றம் அனைத்திலும்
குற்றம் தமிழில் கலப்பு.

5. கலப்புத் தமிழால் கயமை விளைப்பார்
கலப்பாலில் நஞ்சர் கருது.

6. கருதினால் நீகலவாய் காவல் புரிவாய்
பெருகிச் சிறப்பாய் பெரிது.

7. பெரிய மொழிமீட்பன் பேறும் பெறுவாய்
உரியதாம் என்றும் களிப்பு.

8. களித்தார்த்துக் காத்திடுவாய் கன்னித் தமிழைத்
தெளிவான தேட்டாய் விதை.

9. விதைத்தால் விளைவாகும் வீட்டோடு நாடும்
புதியகலை பூத்தெழும்பும் பொற்பு.

10. பொற்போ புதிதில்லை போற்று பிறப்புமுதல்
நிற்பே அதன்தன் நிலை. 470

47. தமிழ் மொழியிற் பிற சொற் கலப்பு

1. உன் மொழி உனக்குத் தேன் மொழிஎன்றால், அவரவர்க்கு அவரவர் மொழி தேன்மொழியாதல் இயற்கை.

2. அவ்வியல்பை எவன் கெடுத்தாலும் அவன் தேன்மொழியன் அல்லன். தேள் கொட்டுவது போன்ற மொழியினன் என்க.

3. “போக வேண்டும் வழிப்படி ஒருவன் போனால் அவனுக்கு நெருஞ்சி முள் குத்தாது” என்னும் திருமந்திரத்தை நினைக்க.

4. ஒரு பொருள் போலும் ஒருபொருளைக் கலத்தலாம் குற்றத்திலும், கலப்படக் குற்றம் மொழிக் கலப்படக் குற்றமாம்.

5. தமிழில் அயற் சொற்களைக் கலந்து கேடு செய்வார், கலத்தில் உள்ள சுவைப் பாலில் நஞ்சைக் கலப்பவர் என்க.

6. அவ்வாறு நீ கருதத் தொடங்கினால் நீ மொழிக் கலப்புச் செய்யாய்; மொழித் தூய்மையாம் காவலும் செய்வாய்.

7. மொழித் தூய்மை காத்தலால் நீ மொழிமீட்பன் என்னும் பெறுதற்குரிய பேறும் பெறுவாய்; என்றும் உனக்கு மகிழ்வாம்.

8. களிப்பு மிகக் கொண்டு சீரிளமைத் தமிழாகக் காத்துப் பரப்பும் வகைகளில் பரப்புவாயாக.

9. நல்லவற்றைத் தேடிச் செய்தால் வீடும் நாடும் புதுவளம் பூத்துப் பொலிவாக விளங்கும்.

10. தமிழுக்குப் புதிய அழகு இயற்கை! அது தோன்றும் போதே வேண்டும் பொலிவுகளோடு பிறந்தது.

48. ஓயா உழைப்பு

1. நிலையாம் பணியே நினைத்துப் புரிக
விலைவணிகம் வேண்டா விடு.

2. விட்டொளிரும் ஞாயிற்றை விற்றுண்ணப் பார்ப்பவனைக்
கட்டோடு நீக்கல் கடன்.

3. கடமை உணர்ந்தோன் கடுகளவும் தாயின்
உடைமை சுரண்டான் உலைந்து.

4. உலைவானால் உள்வாங் களறாய் விழுங்கிச்
கலைப்பான் சிதைப்பான் கவர்ந்து.

5. கவர்ச்சிக் கவர்வு, களவாளி மூலம்
அவர்க்கிடம் தாரேல்; அறி.

6. அறியா தழித்த அழிவோ பெரிதாம்
அறிந்தபின் னேனும் விடு.

7. விடுத்தால் தமிழும் நாடும் சிறக்கும்
அடுப்பான் தமிழனே அன்று.

8. அன்றுவரை ஓயாமல் ஆளாளும் தொண்டாற்ற
இன்றெழுக நன்றெழுக இங்கு.

9. இங்கெழும்பு செங்கதிர் சேர ஒளிமல்கி
எங்கெங்கும் ஓங்க உழை.

10. உழைக்கப் பிறந்தவன் ஓயான் ஒதுங்கான்
திளைப்பானே தொண்டில் தினம். 480

48. மீட்புக்காக ஒழியாது பாடுபடல்

1. தமிழ் தமிழின மீட்டெடுப்புக்கு நிலையான பணிகளையே செய்தல் வேண்டும். தமிழை வணிகப் பொருளாக்க வேண்டா.

2. சுடர்விட்டு ஒளிசெய்ய வேண்டிய கதிராம் தமிழையே விற்று வயிறு வளர்ப்பவனை உறுதியாக நீக்குவது கடமையாம்.

3. தமிழ்வளர்க்கும் கடப்பாடு உணர்ந்தவன் கடுகளவு கூடத் தமிழ்த் தேட்டைச் சுரண்டிக் கெடுத்து வாழ மாட்டான்.

4. கண்காணிக்க நாம் தவறினால் உள்வாங்கு மண்போல் உள்ளவற்றை விழுங்கி உருக்குலைத்துக் கெடுப்பான்.

5. கவர்ச்சியாகப் பேசியும் படம் காட்டியும் கவர்தல் களவாளியின் வழி. அத்தகையனுக்கு இடம் தருதல் இல்லாமல் காப்பதை அறிக.

6. நம் அறியாமையால் நாமே அழித்த அழிவு மிகுதியாகும். அவ்வழிவை மீளச் செய்யாமல் விடவேண்டும் அல்லவா!

7. அவ்வாறு விடுத்தால் தமிழும் வாழும்; தமிழ்நாடும் சிறப்புறும்; அந்நாளில் தமிழன் தமிழனாக இருக்கும் தகவை அடைவான்.

8. தமிழன் தமிழனாகும் நாள்வரை ஓய்வு ஒழிவு இல்லாமல் இன்றே ஒருமித்து நன்றாகச் செயலாற்ற வேண்டும்.

9. இருக்கும் இடத்தில் எழும்பும் தமிழ்ச் செஞ்சுடர், எவ்வெவ்விடத்தும் ஒளிசெய்து ஓங்குமாறு உழைப்பாயாக.

10. உழைப்பதற் கென்றே பிறந்தவன், ஒருநாளும் ஓயான்; ஒதுங்கான்; தொண்டு செய்வதிலேயே இன்புற்றுவான்.

49. அயலாற் கிடம் கொடேல்

1. தினந்தோறும் வாழ்நாளாய்; திட்டம் செயலாய்
நினைந்தாற்றல் வெற்றி நிலை.

2. நிலைப்போம் நிமிர்வோம் நினைப்பவை முடிப்போம்
சிலைப்போம் செயலெல்லாம் செய்து.

3. செய்தவை வீணாகச் செய்தவர் நம்மவரே
உய்வகை ஒன்றாதல் ஒன்று.

4. ஒன்றேதான் நம்மெண்ணம் ஒன்றேதான் நம்செய்கை
ஒன்றேதான் நம்நாடும் ஒன்று.

5. ஒன்றா தயலடிமை; ஒன்றா தயலாளல்;
இன்றாதல் எண்ணி ஒழி.

6. ஒழிக்கவே நிற்கும் பகையை ஒழியா
திழிவதா உன்பிறப் பெண்.

7. எண்ணின் 'அயலாற் கிடங் கொடேல்' என்னும்
திண்ணியசொல் காப்பாய் தெரி.

8. தெரிந்த பகையில் தெரியாப் பகையைப்
புரிந்தழித்தல் வேண்டும் புரி.

9. புரியாமல் செம்மறி மந்தையாய் ஆகித்
திரிவாரைக் கண்டே திருத்து.

10. திருந்தினார் உன்னைத் திடமாக நம்பிப்
பொருந்தினால் வாரி அணை. 490

49. கெடுக்கும் அயலார்க்கு இடம் தராமை

1. நாள்தோறும் வாழ்நாளாகச் செய்தல்; திட்டம் செயலாக்கல்; எதிர்காலம் நினைந்து பணியாற்றல்; வெற்றியாம்.

2. நிலையாவோம்; நிமிர்வோம்; நினைத்ததை நிறைவேற்றுவோம்; செய்ய வேண்டுவ செய்து வீறி எழுவோம்.

3. இதுகாறும் பலவற்றை வீண்படச் செய்தவர் நம்மவரே; அந்நிலை நீங்க வழி நாம் ஒன்றுபட்டு ஆக்கம் செய்தலேயாம்.

4. நம் எண்ணம் ஒன்றாதல் வேண்டும்; நம் செயலும் ஒன்றாதல் வேண்டும்; நம் நாடும் ஒன்றாம் ; அதற்கொன்றுக.

5. அவ்வாறானால் அயலார் அடிப்படுத்த இயலாது; அயலார் ஆளலும் ஆகாது; இன்றாவது எண்ணி ஒழிப்பவை ஒழிக்க.

6. உன்னை ஒழிப்பதற் கென்றே நிற்கும் பகையை ஒழிக்காமல், இழிவுபட்டுக் கிடப்பதற்காகவா உன்பிறப்பு வந்தது?

7. நன்றாக எண்ணினால் அன்றே ஔவையார், "மாற்றானுக்கு இடங் கொடேல்" என்ற உறுதிச் சொல்லைக் காப்பாற்றுவாய்.

8. வெளிப்படத் தெரிந்த பகையை அழிப்பதிலும், வெளிப்படத் தெரியாத உட்பகையை அறிந்து அழித்தலே முதன்மையாகும்.

9. மாற்றார் செயல் அறியாமல் செம்மறியாட்டு மந்தைபோல் செல்பவரைத் தேர்ந்து கண்டு திருத்தும் வகையால் திருத்துக.

10. திருந்தியவர்கள் உறுதியாக ஏற்றுக் கொண்டு பொருந்தி நிற்பாரேயானால், அவர் பழைய நிலையை மறந்து ஏற்க.

50. இரங்குவ செய்யற்க

1. அணையாமல் அப்பால் விடுத்தால், அயலோ
டிணைவான் கெடுப்பார், இணைந்து.

2. இணைந்தார் குறையைப் பெரிதாய் நினையேல்
'இளைத்தெண்ணிக் கொள்ளல்' இனிது.

3. இன்னுயிரும் நாட்டினுக் கீயும் துணிவாளன்
ஒன்றுகுறை காணாமல் ஒன்று.

4. 'ஒன்றுநன்' றுள்ளக் கெடுமெனும் வாய்மொழியை
நன்றறிதல் நம்கடமை நாடு.

5. நாடியெலாம் ஒன்றாமா? நால்வகையும் உண்டேகாண்!
கோடிணையும் யாழைக் குறி.

6. குறிக்கொண்டால் பன்னரம்பும் கூட்டியமாய் ஓங்கும்
நெறிக்கொண்டு நீயிணைந்து நில்.

7. 'நில்லா உல'கென்று நீண்டுரைத்த காஞ்சியது
நிற்க உரைத்தல் நினை.

8. நினைப்பாயேல் 'பாங்கரும் சீர்மைய காஞ்சி'
வனைவாய் அமரனென வாய்த்து.

9. வாய்த்த பிறப்பில் வருவீடு காணாமல்
ஏய்த்ததை எண்ணிநீ எற்று.

10. "எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று." 500

50. நீயே வருந்து மாறான செயலைச் செய்யாதே

1. திருந்தி வந்தவர்களை ஏற்காமல் விடுத்தால், அவர்கள் மாற்றாரோடு கூடியிணைந்து இரட்டைக் கேடராவர்.

2. பொருந்தி இணைந்தவரின் குறையைப் பெரிதுபட நினையாமல் பொறுத்திருந்து எண்ணி, இனிது ஏற்றுக் கொள்க.

3. நாட்டு நலத்திற்குத் தன் உயிரையும் தரும் துணிவாளனிடம் சிறிய குறைகாணின், அதனைக் காணாமல் கூடியிரு.

4. நல்லது ஒன்றிருந்தாலும் அதனை நினைத்து அல்லாத மறத்தல் நன்று என்ற வள்ளுவத்தை அறிந்து போற்றல் கடமையாம்.

5. ஒவ்வொருவர் நாடித்துடிப்பும் ஒன்றாக இருக்குமா? பலவகையும் உண்டுதானே! வளைவமைத்த யாழமைதி நினை.

6. யாழியல்பை அறிந்தால் பலவாம் நரம்புகளும் ஒன்றற் கொன்று கூடி இனிய இசையாய் அமைதலைக் காண்பாய்.

7. இவ்வுலகம் நிலையாமையை நிலையாக உடையது என்னும் காஞ்சித் திணையை எண்ணி நிலைபெறு வகை நினை.

8. நிலைபேற்றை நினைத்தால் பலவகைச் சிறப்பும் அமைந்தது காஞ்சி என அறிவாய்! அழியாஅமர வாழ்வும் அடைவாய்.

9. பெற்றுள்ள பிறப்பிலேயே வீடுபேற்று இன்பம் காணாமல், ‘பின்னே பெறலாம்’ என்ற புனைவை விடுக.

10. ‘நான் என்ன செய்தேன்’ என வருந்தும் செயலைச் செய்தால் மீண்டும் அவ்வாறு வருந்தும் செயல் செய்யாமை நன்றாம்.

ஆறாம் நூறு

51. தாய்மொழி வழிக் கல்வி

1. தாய்ப்பால் பருகல் தகவாம் பருகினால்
நோய்ப்பால் குழந்தை படா.

2. தாய்மொழி மூலம் தருங்கல்வி எல்லாமும்
வாய்ப்பான வான்மழை யாம்.

3. பள்ளி வருமுன் பல்லா யிரம்சொற்கள்
அள்ளி வருதல் அறி.

4. அறிந்தது கொண்டுமேல் ஆக்கும் பயிற்சிச்
சிறப்பை அறியார் எவர்?

5. மேலறிவும் மேம்படைப்பும் மேதக்க தொண்டுகளும்
சாலச் சமைத்தார் எவர்?

6. பட்டறிவு மிக்கார் பயிற்றுமொழி தாய்மொழியாய்ச்
சொற்றதனை எண்ணிச் சுடர்.

7. படித்தல் பயிற்றல் படுகுறை இன்றி
முடித்தற் குரிய முறை.

8. புரியாமல் ஓதிப் புரியாமல் கற்றுப்
புரியாமல் போதல் புரி.

9. கேட்ட செவிக்கல்வி கேடின்றித் தங்கினால்
வேட்டவகை யாகும் விடை.

10. இயல்பாகக் கற்கும் இயன்முறையை எண்ணா
தயல்வழியை நாடுதல் ஏன்? 510

51. தாய்மொழி வழியாகக் கற்பிக்கப்படும் கல்வி

1. தாய்ப்பால் குடித்தல் குழந்தைக்குத் தக்க உணவும் ஊட்டமும் நோய்த்தடுப்பும் ஆகும். நோயின்றி வளர்வுமாகும்.

2. அவ்வாறே தாய்மொழி வழியாகக் கற்பிக்கப் படும் கல்வி யாவும் வளரும் பயிர்க்கு வாய்த்த மழை போல் உதவும்.

3. பள்ளிக் கூடத்திற்குக் குழந்தை வருமுன்னரே பல்லாயிரம் சொற்களைப் பொருளோடு அறிந்து கொண்டே வருகின்றது.

4. அவ்வாறு அறிந்துள்ள சொற்களை அடிப்படையாகக் கொண்டு மேற் பயிற்சியாக்கும் முறையே சிறந்த முறை.

5. உலகில் மேலான அறிவு, உயர்ந்தபடைப்பு, சிறந்த தொண்டு என்பவற்றை உற்றவர் தாய்மொழி வழியில் கற்றவரே ஆவர்.

6. பட்டறிவு மிகுந்த பெரியவர்கள், பயிற்றும் மொழி தாய்மொழியாகவே இருக்க வேண்டும் என்பதை எண்ணித் தெளிக.

7. படிப்பதற்கன்றிப் பயிற்றுவதற்கும் அரைகுறை இல்லாமல் படிப்பை முடித்தற்கும் ஆயவழி தாய் மொழிவழிக் கல்வியே யாம்.

8. அயல்மொழி வழியால் கல்வி, கற்பிப்பவர்க்கும் புரியாது. கற்பவர்க்கும் புரியாது. பின்னர்ச் செயலாற்றற்கும் சிறவாது.

9. தாய்மொழி வழிக் கல்வி கேட்ட அளவிலேயே புரியும்; மனத்தும் தங்கும்; மறுமொழி செவ்விதில் கூறவும் வாய்க்கும்.

10. இயல்பாகக் கற்கும் இயற்கையாகக் கற்பிக்கும் முறையைக் கைவிட்டு, அயல் மொழியில் கற்பித்தல் எதற்காகவோ?

52. கலைச் சொல்

1. நூலில்லை நூற்கேற்ற நுண்கலைச் சொல்லில்லை
என்பாரின், பாலில்லை பற்று.

2. சொற்பஞ்சம் இல்லாச் சுடர்மொழி வண்டமிழாம்;
நற்பஞ்சம் நெஞ்சத்தில் தான்.

3. பண்டைக் கலைகள் பயின்ற மொழியாதாம்
கண்டறிந்து உண்மையைக் காண்.

4. தொழிற்கல்வி எல்லாமும் தோய்ந்தளித்த தொல்லோர்
எழிற்கல்வி எல்லாம் எது?

5. கட்டடம் சிற்பம் கணியம் மருத்துவம்
மட்டிலா தாக்கினார் மாண்பு.

6. "வையத்தின் வானம் நணிய" தெனவுரைத்தும்
ஐயுறல் தானா அறிவு.

7. வையகம் அண்டம் உலகம் இயல்ஞாலம்
எல்லாம் அறிவியலாம் எண்.

8. ஆட்சியும் தூதும் அமைச்சும் அறிவந்த
மாட்சி அயல்மொழியா லா?

9. நாவாயால் ஞாலம் வலம்வந்த நாளையினை
நீயாய மாட்டாயோ நேர்?

10. பட்டம் பருவம் விதைத்தல் விளைப்பெல்லாம்
பட்டறியார் செய்யார் பயிர்! 520

52. இதற்கு இதுவே குறியீடு என்னும் கலைச் சொல்

1. தாய் மொழியில் கற்பிக்கத் தக்க நூல் இல்லை. நுண்ணிய கலைச் சொல் இல்லை என்பாரேல் அவர்க்குப் பற்றில்லையாம்.

2. சொற்குறைபாடு இல்லாத ஒளிமிக்க மொழி தமிழேயாகும். பஞ்சம் என்பதெல்லாம் நெஞ்சத்தில் உள்ள குறைபாடேயாகும்.

3. பண்டைக் கலைகள் எத்தனை எத்தனை? அவற்றைப்பயின்ற மொழி எது? இதனைக் கண்டு கொண்டாலே தெளிவாம்.

4. முன்னை நாளில் மருத்துவம் பொறியியல் கட்டட இயல் கல்விகளை எம்மொழியில் கற்பித்தார்? கற்றார்?

5. கட்டடக்கலை சிற்பக்கலை வானியற்கலை மருத்துவக் கலை ஆக்கியவர் தாய்மொழியில் தானே ஆக்கினார்.

6. மண்ணுலகைக் காட்டிலும் விண்ணுலகமே நெருக்கமானது என்று பொய்யா மொழி புகன்றும் ஐயமுறல் அழகாமா?

7. வையகம், அண்டம், உலகம், ஞாலம் என்னும் சொற்கள் அறிவியல் விளக்கப் பொருளவை தாமே.

8. பண்டு முதல் நிகழ்ந்த ஆட்சி, தூது, அமைச்சு என்பவை எல்லாம் அயல்மொழி வழியாலா நடை பெற்றன?

9. நாவாயாம் கப்பலால் உலகம் வலம் வந்த பண்டைத் தமிழர் கலவணிக நாளை நீ எண்ணிப் பார்க்க மாட்டாயா?

10. பட்டறிவு இல்லாதவர் பயிர்விதைக்கும் காலம், மழைபெய்யும் பருவம் விளையும் காலம் அறியாரா?

53. கலைவளம் - 1

1. வண்ணக் கலையும் வரைகலையும் ஓவமும்
நண்ணிய பேறு நனி.

2. உலகுக்கே தந்தான் உயர்சுழியும் எண்ணும்
நிலவும் அதனை நினை.

3. அணுவளவு முன்னாக ஐஅம்பல் ஈறாய்க்
கணக்கிட்டார் காணரிய காண்பு.

4. கைகால் உறுப்பால் அளவை முறைகளைச்
செய்தமைத்த சீர்மையைச் செப்பு.

5. ஆய கலைகள் அறுபத்து நான்கெனினும்
ஏயகலைகள் எண்ணரிய வாம்.

6. எல்லாமும் உள்ளான் இரப்பாண்டி ஆயினால்
வல்லானோ வாழ்வு வளம்?

7. என்னென் றறியா இறைவாழ்த் தெவரேனும்
நன்றுணர்ந்தார் கொள்வரோ நாடு?

8. என்னென் றறியாமல் இல்லச் சடங்குகளைத்
துன்னினார் உண்டோ தொட.

9. நாமேதாம் நம்தலையில் மண்ணள்ளிப் போட்டதால்
ஆமே எனஎண்ணல் ஆய்வு.

10. தாய்மொழிப் பற்றற்றோம் தக்க இனப்பற்றும்
போய்ப்பற்றல் அற்றோம் புரி. 530

53. தமிழின் கலைப்பெருக்கம்

1. தமிழர்க்கு வாய்ந்த வண்ணக் கலை, ஓவியக் கலை சிற்பக் கலை என்பவை பெரும் பேறானவை அல்லவோ.

2. உலகுக்குச் சுழியம் (0) என்னும் உயரிய எண் மூலத்தைத் தந்தவன் தமிழன் தானே! அதனை எண்ணிப் பார்க்க.

3. அணு என்னும் அளவு தொடங்கி, தாமரை, வெள்ளம், ஆம்பல் எனப் பெருகக் கணக்கிட்ட பெருமை பேறில்லையா?

4. கருவி இல்லாமல் கையாலும் காலாலும் விரலாலும் அளவு வகைகளையெல்லாம் ஆக்கியமைத்த அருமையைச் சொல்.

5. கலைகள் என்பவை அறுபத்து நான்கு தாமா? எண்ணாமல் விடுபட்ட கலைகள் தாம் எத்தனை எத்தனை?

6. எல்லாமும் இயல்பாக வாய்க்கப் பெற்ற வளமுடையவன் இரவலனாக வாழ்கின்றான் என்றால் அவன் வாழ்வு வாழ்வா?

7. நல்லவற்றை உணர்ந்தவர் புரிந்து கொள்ள முடியா அயல்மொழியில் வழிபாடு செய்ய ஏற்பரோ?

8. அயல்மொழி வழியாகக் குடும்பச் சடங்குகளை அறிவாற்றல் நிரம்பியவர் எவரேனும் கொள்வரோ?

9. இவையெல்லாம் நாமே நம் தலையில் அள்ளிப் போட்டுக் கொண்ட அளற்றுமண் என்று எண்ணினால் தீர்வு கிடைக்கும்.

10. நாம், தாய்மொழிப் பற்றினை அற்றுப் போனோம்; நம் இனப்பற்றும் அற்றுப் போனோம். எண்ணிப் புரிக.

54. கலைவளம் - 2

1. காலம் இடமாம் இரண்டும் முதற்பொருளாய்
ஏல உரைத்ததை எண்.

2. நானிலப் பேறும் நயக்கும் கருப்பொருளும்
மேனிலை ஆய்வென்னல் மேல்.

3. நூற்றொரு கோடியின் மேற்படும் அண்டமெனச்
சாற்றினார் தேர்ச்சியைச் சார்.

4. மாழை வகைகளை மாற்றார்தாம் தந்தாரா?
கூழை படாமல்நீ கூறு.

5. எண்ணோ டெழுத்தை உலகுக்குத் தந்தாரை
எண்ணாப் பிறப்பதுதான் என்?

6. வானோங்கு கோபுரம் கண்டும் உணர்வில்லான்
ஏனோதான் வீண்பிறந்தான் இங்கு?

7. சித்த மருத்துவம் சீரார் தமிழரதாம்
பித்தம் தெளிவானோ பேசு.

8. பாலாடை அன்னதாம் நூலாடை நெய்ததும்
மேலாடக் காணானோ மேல்?

9. கோட்டைப் பொறிகளைக் கூறுநூற் சான்றறியான்
ஓட்டைக் குடமென் றுரை.

10. வளரிப் பயிற்சி வகைதமிழ்ப் போரர்
வளமை அறிய வரும். 540

54. மேலும் ஓங்கிய நம் கலைவளம்

1. ஆசிரியர் தொல்காப்பியர் முப்பொருள் கூறுங்கால் காலமும் இடமும் முதற் பொருள் என்று கூறியதை எண்ணுக.

2. நானில அமைவும் பெயரீடுகளும் அவற்றில் கருக் கொண்ட கருப்பொருள் களையும் மேலாக ஆய்க.

3. நூற்றுக் கணக்கான அண்டங்கள் இயங்குகின்றன என்ற இறைமையர் மணிவாசகர் திறத்தைக் கண்டறிக.

4. இரும்பு, செம்பு, வெள்ளி, பொன், வயிரம் என்னும் பொல (மாழை) வகைகளை அயலாரா தந்தனர்? நிமிர்ந்து சொல்.

5. உலகுக்கே எண்ணையும் எழுத்தையும் தந்தவர் வழிவந்தும் அவர் கொடையை அறியாத உன்பிறப்பு என்ன பிறப்பு?

6. வானளாவிய கோபுரங்களையும் எழுநிலை மாடங்களையும் எழுப்பியவர் வழிஞனாக ஏனோ பிறந்து தொலைத்தான்?

7. அறிவர் மருத்துவம் தமிழர் மருத்துவம் சித்தமருத்துவம் என்பன நம்மவர் கண்டதாம். பித்தன் அறிவானா?

8. பாலாடையைப் போலும் நூலாடையை நெய்த மேன்மை தொன்னூல்களில் கண்டும் காணாதவன் மேன் மகனோ?

9. அரண்மனைக் கோட்டைக்கண் இருந்த பொறிகளை நூல்கள் விரிய உரைத்தும் அறியாதவன் ஓட்டைக் குடம் அன்னனாம்.

10. பகைவரை ஒருசேர அழிக்கவல்ல வளரிக் கருவிப்போர் அறிந்தால் தமிழர் போர்த்திறம் அறியவரும்.

55. கலைவளம் - 3

1. வெளித்தோற்றி உள்தோன்றா ஆடி பதித்த
   பளிக்கறை கட்டியது பார்.

2. பூணி இலாமல் பொறியின் இயல்வதாய்க்
   காணிய ஊர்தியைக் காண்.

3. வலக்கால் மிதிப்பால் உயரேறும் ஊர்தி
   இடக்கால் மிதிக்கிறங்கல் எண்.

4. ஏழிசை பாடும் எழிற்சிற்பம் கண்டமை
   யாழிசைப் பாகாய் அறி.

5. நூற்றெட்டு நாட்டியம் நுண்கல்லில் நாட்டற்குப்
   பாற்பட்ட சிற்பியைப் பார்.

6. ஆயிரம் நாண்கொண்ட ஆதியாழ் கண்டவன்
   பாயிரம் என்னே பகர்.

7. பேரிகை முன்னாய தோற்கருவி நூற்றின்மேல்
   யாரிசையில் கண்டார் இசை.

8. நீர்பாட மண்பாட நேரும் வளைபாட
   யார்பாட வல்லரோ பார்.

9. போர்ப்பறை என்னப் பொருநர் களம்பாட
   நேர்ந்தமைந்த நீர்மை நினை.

10. பண்வகுத்துப் பாடு பழங்கலைத் தண்டமிழை
    எண்வகுக்கக் கூடுமோ எண். 550

55. மேலும் அமைந்த கலைவளம்

1. வெளியே தெரியவும் உள்ளே தெரியாது ஆகவும் ஆகிய கண்ணாடி மாளிகை கட்டிய வரை எண்ணிப் பார்க்க.

2. பூட்டி இழுக்கும் மாடு குதிரை இல்லாமல் பொறியால் இயங்கவல்ல ஊர்தி பற்றிய செய்திகளை உன்னி நீ பார்க்க.

3. வலக்கால் மிதித்தால் விண்ணில் ஏறவும், இடக்கால் மிதித்தால் மண்ணில் இறங்கவுமாய பொறிபற்றி அறிக.

4. ஒரு,கற் சிற்பத்தில் ஏழு இடங்களில் தட்டினால் ஏழிசை வரும் வகையில் அமைந்தமை, யாழிசைவழி தேனாக அறிக.

5. நூற்றெட்டு நளிநயங்களைக் காட்டும் சிற்பங்களைக் கல்லில் வடித்துக் காட்சியாக்கிய தமிழச் சிற்பனை நினைக.

6. ஆயிரம் நரம்புகொண்டது ஆதியாழ். அதனைக் கண்டவன், செய்தவன் இசைத்தவன் என்பார் புகழை எவ்வாறு கூறுவது?

7. பேரிகை முதலாகக் கண்ட தோற்கருவிகள் நூற்றுக்கு மேற் பட்டனவாகக் கண்ட தமிழிசை போல் எவர் கண்டார்?

8. நீர் பாடவும் (நீரலை) மண்பாடவும் (குடம்) ஏற்ற மூங்கில் பாடவும் (குழல்) உலகில் எவர் முதற்கண் கண்டார்.

9. போருக் கென்றே அமைந்த வீரர் நடையையும் களப்போரையும் எழுச்சி கொள்ள வைத்த இசையை நினைக.

10. பாடலுக்கு ஏற்பப் பல்லாயிரம் பண்களைஇசைத்துப் பாடவல்ல பேற்றை எண்ணிக் கூற முடியுமோ? எண்ணுக.

56. கலைவளம் - 4

1. வண்ணம் வரிவாரம் பண்ணிசை எல்லாமும்
நண்ணிய பேற்றை நவில்.

2. திருப்புகழ் மாண்பு தெரிவிக்க வல்ல
திருவினர் தாமெங் குளர்.

3. அருட்பாவில் சொக்கார் அருளாளர் ஆகித்
தெருட்பே றடைவாரோ தேர்.

4. சன்மார்க்கம் காட்டும் சமன்பாடு ஞாலமே
என்மார்க்கம் என்றாக எண்.

5. காவடிச் சிந்துக் கலைத்தேர்ச்சி கொண்டாரின்
தாவடி பார்த்துத் தளிர்.

6. வில்லடி போலும் விறலடி காண்டற்கு
மல்லடி போட்டார் மதி.

7. குடமாடு கூத்து, குவிந்துள்ள கூட்டம்
குடமாடச் செய்தமை கொள்.

8. சொற்போரும் மற்போரும் சோராமல் காத்தன்று
நற்போரில் நின்றார் நமர்.

9. கும்மி குரவை குழியாடல் கோலாடல்
அம்மா! அகன்ற தறி.

10. வெறியாடு வேலன் விளையாட்டில் ஊரே
செறிந்தாடி நின்றதே சேர்ந்து. 560

56. மேலும் விரிந்த கலைவளம்

1. வண்ணம், வரி, வாரம், பண்வகுப்பு என்பவை யெல்லாம் தமிழர்க்கு வாய்த்திருந்த அருமையைக் கூறுக.

2. திருப்புகழ் என்னும் வண்ணப் பாடலின் சிறப்பை முழுதுறத் தெரிவிக்க வல்ல திறத்தவர் உலகில் எங்கே உள்ளனர்?

3. அருட்பா என்னும் அமுதப் பாவில் உருகி உருகிச் சொக்கிப் போகாதவர் அருள்நெறி தெளிந்த அருமையர் ஆவரோ?

4. சன்மார்க்கம் என்னும் ஆன்மநேய நெறிகாட்டும் ஒப்புரவு உலகமெல்லாம் எங்கள் நெறி என்று கொள்ளுமாறு எண்ணுக.

5. காவடிச் சிந்து என்னும் பாடல் அருமையும் அதன் சந்தமும் தாளக் கட்டும் ஆட்டமும் பார்த்து இன்பச் சுரப்பாகுக.

6. வில்லடி என்னும் பாட்டும் இசையும் தாளமும் பொருளும் காண எத்தகைய பாடுபட்டிருப்பர் என மதிக்க.

7. குடம் தலையில் தாங்கி ஒன்றன்மேல் ஒன்றாய் அடுக்கித் தாளத்திற்கு ஏற்ப ஆடும் குடமாடல் கண்டோரும் ஆடினரே.

8. சொற் போரா, மற்போரா தொய்வு இல்லாமல் செய்து நயத்தக்கவராக விளங்கியவர் நம்மவர்.

9. கும்மியாட்டம், குரவையாட்டம், பன்னாங்கு குழி என்னும் ஆட்டம், கோலாட்டம் எனவிரிந்த வியப்பினை அறிக.

10. வேலன் வெறியாடல் என்னும் அரிய தேர்ச்சிமிக்க ஆட்டத்தில் ஊரவரே திரண்டு அவ்வேலன் எனவே ஆடிய பேறு பெரிதாம்.

57. சொல்வளம் – 1

1. 'நாளென ஒன்றுபோற் காட்டி' எனலாலே
நாட்காட்டி பெற்றோமே நாம்.

2. நாட்குறிப்பு நாட்செய்தி நாண்மலர் என்றுபல
ஆட்படுத்திக் கொண்டோமே ஆம்.

3. 'அகர முதல' எனத்தொடங்கு பேற்றால்
அகராதி ஆய தறி.

4. அகர முதலி எனவும் அதன்பேர்
பகரவும் ஆயது பார்.

5. 'நீட்டி அளப்பதோர் கோல'தனால் நீட்டல்கோல்
தீட்டிய சொல்லாம் திரு.

6. நிறைகோல் சமன்கோல் ஞமன்கோல் எழுதுகோல்
எல்லாம் குறளால் எனல்.

7. 'முற்பகல் பிற்பகல்' என்பவை நாம்கொள்ள
முற்கொடை வாய்மைக் குறள்.

8. உள்ள திழத்தலை 'உள்வீழ்தல்' என்றது
வள்ளுவர் வாய்மொழி யாம்.

9. ஆழ்மனத்தை 'உள்உள்' எனச்சொன்ன ஆழ்மனத்தர்
வள்ளுவ வான்முகிலே யாம்.

10. 'தக்கார்' எனும்பதவி தந்தார் அவரே
தகவிலார் என்றாரும் தாம். 570

57. தமிழ்ச் சொல்லின் பொருள் வளம்

1. ‘நாள் என ஒன்று போல் காட்டி’ என்று திருவள்ளுவர் கூறியதால் நாட்காட்டி பெற்ற பயனால் பெற்ற பேறு பலவாம்.

2. நாட்குறிப்பு, நாள் இதழ், நாள் மலர், நாள் வழிச் செலவு எனப் பலவற்றை மேல் வரவாகப் பெற்றுக் கொண்டோம்.

3. ‘அகர முதல’ எனத் தொடங்கிய தொடக்கம் அகராதி ஆயது அறிக.

4. ‘அகர முதல’ என்பதே ‘அகர முதலி’ எனப் பெயர் கொள்ளவும் வழக்காக்கவும் நூலாக்கம் பெறவும் ஆயது.

5. ‘நீட்டி அளப்பதோர் கோல்’ என்றதனால் நீட்டல் கோல், நீட்டல் அளவை என்பவை வளமாக வாய்த்தன.

6. சமன் செய்து சீர்தூக்கும் கோல், எழுதுங்கால் கோல் என்பவற்றால் நிறைகோல், எழுது கோல் வாய்த்தன.

7. முற்பகல் என்றும் (A.M) பிற்பகல் என்றும் (P.M) நாம் கொள்வதற்கு முற்கொடையாக வாய்த்தது குறளேயாம்.

8. உள்ள பொருளெல்லாம் இழந்து போதலை ‘உள்வீழ்தல்’ என்று வழங்கிய பேறு வள்ளுவர்க்கே ஆகும். (I.P; திவாலா)

9. ஒக முறையில் வழங்கும் ஆழ்மனத்தை ‘உள்ளுள்’ என்று ஒடுக்கிக் காட்டிய ஒளியர் வள்ளுவரேயாம்.

10. கோயில் அறங்காவலரைத் தக்கார் என வழங்கும் இந்நாள் வழக்குக்கு மூலக் கொடையர் வள்ளுவரே யாம்.

58. சொல்வளம் – 2

1. 'கல்'லென்னும் ஓசை கலித்த ஒலிவகைகள்
சொல்லத் தகுவவோ சொல்.

2. 'கொக்'கென்னும் புள்ளொலியால் கொக்கி முதலாக
மொக்குசொல் லெண்ண முனை.

3. 'காக்கா' ஒலியினால் கண்டறிந்த சொற்கலை
ஆக்கத்தை நன்றாய் அறி.

4. 'குர்க்குர்க்' குரங்கின் கொடைவளச் சொற்களை
எண்ணினால் விண்ணேறும் எண்.

5. ஈயும் சிலந்தியும் கீரியும் ஈந்தகொடை
ஆயும் அளவு விரிவு.

6. சிலம்பின் கொடையோ சிலம்புக்கும் எட்டா
நலப்பேறாய் நல்கும் நனி.

7. 'மா'வென்னும் நாற்கால் விலங்கொலி நல்குசொல்
ஆமாம் மிகுவெள்ள மாம்.

8. 'ஓசை ஒலியெல்லாம் ஆனாய்நீ' என்பதோ
பேசாமல் பேசும் பெரிது.

9. குரல்வளை உள்ள உயிரியொலி எல்லாம்
குரலாம்; பிறவோசை யாம்.

10. குரலே இசையில் முதலாய் இருத்தல்
முரல்வாய் வழியாக முன். 580

58. மேலும் தமிழ்ச் சொல்லின் பொருள்வளம்

1. ‘கல்’ என்றும் ஓசைக் குறிப்பு வழியாகப் பெருகிய பொருளமைந்த சொற்கள் சொல்லி முடியக் கூடியனவா?

2. ‘கொக்கு’ என்னும் பறவையின் ஒலிவழியாகக் கொக்கி முதலாக உண்டாகிய சொற்களை எண்ணிப் பார்க்க.

3. ‘கா கா’ ஒலியால் கண்டறிந்த சொற்களின் ஆக்கப் பெருக்கத்தை ஆய்ந்து நன்றாக அறிக.

4. ‘குர்’ ‘குர்’ என்றொலித்தலால் பெயர் கொண்ட குரக்கு என்பதன் சொற்கொடைகளை எண்ணினால் மேலே மேலே பெருகும்.

5. ஈ என ஒலிக்கும் ஈயும், சில் என ஒலிக்கும் சிலந்தியும் ‘கீர் கீர்’ என ஒலிக்கும் கீரியும் கொடுத்த கொடை விரிவானது.

6. சிலம்பு என்பதன் கொடையோ சிலம்பாம் மலைக்கும் எட்டாத நலங்களை மொழிக்கு மிகுதியாக வழங்கும்.

7. மா என்னும் நான்குகால் விலங்கின் ஒலிவகையால் உண்டாகிய சொற்களோ மிக்க வெள்ளப் பெருக்கினதாம்.

8. “ஓசை ஒலி எல்லாம் ஆனாய்நீயே” என்னும் அப்பரடிகள் வாக்கு ஓசையையும் ஒலியையும் தெளிவாகக் காட்டும்.

9. குரல்வளையுள்ள உயிரினங்கள் வாயசைப்பு ஒலியாம். அஃதில்லா இயற்கை, ஓரறிவுயிரி எழுப்புவ ஓசையாம்.

10. குரலே இசையின் முற்பட்டு நிற்க அடிப்படை, குரல்வாய் வழியாகத் தோன்றுவதே குரல் என்பதனை விளக்கும்.

59. சொல்வளம் – 3

1. நீ என்னும் முன்னிலை நீங்கல் பொருளாதல்
நீக்கு முதலாய் நினை.

2. பர்ரோ டகரம் இகரம் உகரம்
பகர்சொற் பொருள்களைப் பார்.

3. பகர அகரம் பரவிப் பரவி
அகலுதல் தோன்றல் அறி.

4. பகர இகரம் வளைய வளைய
வருவதை வாய்க்கத் தெளி.

5. பகர உகரம் திரளல் பொருளாய்
உருள வருதல் உணர்.

6. சகர இகரம் செறியொற்றுச் சொற்கள்
பகரும் சிறுமை பதி.

7. சிக்கு முதலாகச் சின்னீராய் உள்ளவை
ஒக்க உணர்த்தல் உணர்.

8. உகரத்தோ டொற்றெழுத் தொன்ற உயர்ச்சி
நிகரின்றி ஓங்கல் நினை.

9. ஏகாரம் என்றால் எழுச்சியும் ஏற்றமும்
ஓஓ எனவுயரல் உன்.

10. ஆய்வின் நுணுக்கத்தை ஆய்த எழுத்தொலியால்
ஆய்வார் அறிவார் அளந்து. 590

59. மேலும் சொற்பொருள் விரிவளம்

1. நீ என்பது தன்மையில் நீங்கி முன்னே நிற்கும் முன்னிலை ஆதலால் நீக்கு, நீங்கு, நீச்சு முதலாக ஒற்றொடு நீளும்.

2. 'பர்' என்பதனோடு அகரம் இகரம் உகரம் சேருங்கால் உருவாகும் சொற் பெருக்கத்தை எண்ணிப் பார்க்க.

3. பகரத்தோடு அகரம் சேரப் 'பர' என்றாகும்; அது பரவல் பொருளில் பலவாய் விரியும். பரட்டை, பரப்பு, பரத்தல்.

4. பகரத்தோடு இகரம் சேர்ந்துபரி என்றாயின் வளைதல் பொருளில் பலவாய் விரியும். பரிவட்டம், பரிசல்.

5. பகரத்தோடு உகரம் சேர்ந்து 'பரு' என்றாயின் திரள்தல் பொருளில் பலவாய் விரியும். பரு, பருமம், பருவம், பருக்கை.

6. சகரத்தோடு இகரம் சேர்ந்து(சி) ஒற்று ஒன்று கூடினால் சிறு, சிறிய என்னும் பொருட் சொற்கள் உண்டாம். சிக்கனம்.

7. மேலும் அதனைச் சிக்கு என்பது முதலாகச் சின்னீர் (சிறிதுநீர்) என்பவை வரை ஒவ்வொன்றாக எண்ணித் தெளிக.

8. உகரத்தோடு ஒற்று ஒன்று உண்டாகிச் சேர்ந்தால் உயர்ச்சிப் பொருளில் ஓங்கிப் பலவாக விரிவுறும். உச்சி, உப்பு, உத்தி.

9. ஏகாரம் முதலாய சொல் எழுச்சியும் ஏற்றமும் ஆகும். ஓ, ஓ என்பது நின்றால் உயரப் பொருள் தரும்.

10. அறிவின் மிக்கார் ஆய்த எழுத்தை ஆய்வின் நுணுக்கத்தால் அறிந்து ஆய்தம் என்றும் ஆய்தக்குறுக்கம் என்றும் கண்டனர்.

60. சொல்வளம் - 4

1. கரவும் கராவும் கருவும் முதலாம்
வரவு கருமையே ஆம்.

2. கரடு கரடி கரப்பான் எனவே
வரலை அறிந்து வகு.

3. கராவே முதலை கருவே கரும்பு
விராவி வரலை விளங்கு.

4. கர்நீண்டு காரென ஆயினும் அக்கருமை
ஆம்பொருளில் தானே வரும்.

5. காரே கருமை கருமுகில் காராவின்
பேரே தெரிக்கும் தெளி.

6. கார்திரிந்து காலாகக் காழாகக் காளாக
நேர்ந்தாலும் அக்கருமை ஆம்.

7. காலமே காலனே காலி எனவருவ
சாலவே சாற்றப் பல.

8. காழகம் காழே கருதினால் அக்கருமை
சூழவே நிற்கும் சுடர்.

9. காளியும் காளனும் கார்நிறம் காட்டுதல்
நாளும் அறிவனவே நாம்.

10. கட்டமை யாப்பெனக் காண வருசொற்கள்
ஒட்டும் அறிவியலாய் ஓர். 600

60. மேலும் அது - கருமை

1. கரவு, கரா (முதலை) கரு (கரும்பு, கருப்பை) முதலாக வரும் சொற்கள் கருநிறத்தவையாம்.

2. கரடு, கரடி, கரப்பான் என்று வரும் சொற்களும் அவ்வாறு கருநிறத்தவையே.

3. கரா என்பது முதலை; கரு வழிப்பட்ட கரும்பு; இரண்டும் நீர் வாழ்வும் நிலவாழ்வுமாக மாறி இருத்தல் நினைக.

4. கர் என்னும் அடி கார் என முதல் நீண்டாலும் அக்கருமைப் பொருளே தருதலை அறிக.

5. கார் என்பது கருமையையும் மழைமுகிலையும் கருநிற எருமை கருநிறப் பசு என்பனவற்றையும் தெரிவித்தல் அறிக.

6. கார் என்பது மாறிக் கால் என ஆனாலும் ழகரம் பெற்றுக் காழானாலும், ளகரம் பெற்றுக் காளானாலும் கருமையே.

7. காலம், காலன், காலி என வருதல் மிகப் பலவாம். அவற்றைச் சொல்ல விரிவுறும்.

8. காழகம், காழ் என்பனவற்றை எண்ணினால் அக்கருமை பெருகிய தாகவே தோன்றும்.

9. காளி என்னும் பெயரும் காளன் என்னும் ஆண்மை இறைமை, காளன் என்பனவும் கருமையாம்.

10. இவ்வாறு கட்டமைந்த சொற்களை எண்ணின் அறிவியல் முறைப்படியே தமிழ்ச் சொற்கள் அமைந்தமை புலப்படும்.

ஏழாம் நூறு

61. முகம்

1. தன்முகம் பார்த்தல் எதிர்முகம் பார்த்தலென
   நன்முகப் பார்வை இரண்டு.

2. தன்முகம் பாரான் எதிர்முகம் பார்ப்பனேல்
   தன்முகம் இல்லை தனக்கு.

3. முகம்பார்த்துப் பேசுதல் மீண்டும் முகம்பார்க்கத்
   தூண்டுதல் வேண்டும் தொடர்.

4. முகத்தியல் என்ன; அகத்தியல் காட்டும்
   தகத்தகத் தங்கமாய்த் தாங்கு.

5. முகத்தியல் காட்டல் முரணாம் எனின்நீ
   நகைத்தங்கு நில்லேல் நழுவு.

6. முகத்தின் நடிப்பு முறைகேட்டுக் கான
   அகத்துத் துணையாம் அறி.

7. முகமாறிப் போவானை முட்டேல்; முகமாறி
   முன்னிற்கச் செய்யுமுன் சால்பு.

8. புறம்பழியாக் கொள்கை புகழாம்; பிரிந்தார்
   அறம்நோக்க வைக்கும் அது.

9. முகமென்ன பாறையா? மூளெரியா? தண்ணந்
   தகவன்றோ தாங்கும் அது.

10. மலராக நீயிருந்தால், மாற்றாரும் வண்டாய்
    நிலவாமல் போகார் நினை. 610

61. தன்முகமும் முன்முகமும்

1. தன்முகத்தைப் பார்த்துப் பேசுதல் தன்முன் நிற்பவர் முகத்தைப் பார்த்துப் பேசுதல் என முகப்பார்வை நலமாக இரண்டு உண்டு.

2. தன்முகத்தை மட்டும் பார்த்துத் தன்முன் நிற்பவர் முகத்தைக் கருதாமல் பேசினால் அம்முகம் தன்முகம் அன்றாம்.

3. முகம் பார்த்துப் பேசும் முறை, மீளவும் இருவரும் முகம் கொடுத்துப் பேசுவதற்குத் தூண்டுவதாக இருத்தல் வேண்டும்.

4. முகத்தியல் என்பது முகநோக்கம் மட்டுமன்று. அகநோக்கின் வெளிப்பாடே என்பதை மிகப் பளிச்சிட்டுக் காட்டும்.

5. அகத்தியல் காட்டா முகம் காட்டல் நேயமுரணாம் என நீ உணரின் நகைத்து விட்டு நில்லாமல் அகன்று போய் விடு.

6. முகத்தின் போலிமைத் தோற்றம் பின்னே ஆகும் முறை கேட்டுக்கான அகவெளிப்பாட்டு அறிகுறியாகும் என்பதறி.

7. முகத்தைப் பார்த்து முகம் கொடாது போகின்றவனை நெருங்காதே. நெருங்கின் உன்சால்பு கெட்டு நிற்க வைக்கும்.

8. புறங் கூறுதல் இல்லாக் கடைப்பிடி புகழாக்கும். முகம் மாறிப் போயவரும் தம் மனச் சான்று கொண்டு பார்க்க வைக்கும்.

9. முகம் என்பது பாறைக் கல்லும் அன்று; கொழுந்து விட்டு எரியும் தீயும் அன்று; தண்ணிய தன்மை கொண்டது!

10. நீ மலர் போல் மலர்ச்சி மென்மை இனிமை பயன் கொண்டு இருந்தால், மற்றையோர் தேனீ எனத் தேடிவாராமல் போகார்.

62. மெய்

1. மெய்யேநீ மெய்யேதான்! பொய்யென்று சென்னார்தாம்
பொய்யாகச் சொன்னார் புனைந்து!

2. உயிர்நிலைப் பேறான மெய்யே, உயிர்நிலையை
ஊரறியச் செய்வதே நீ.

3. உயிர்போய பின்னும் உருவம் படைக்க
உயிராக நிற்பாயும் நீ.

4. 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்'
சுடர்மொழி சொல்லல் தெளி.

5. உடம்பை இயக்கும் உயிரது வேனும்
உடம்பிலா துய்வது வா?

6. ஆவி உருவத்தை ஆளாக எண்வாரார்?
கூவி அழும்பேய்க் குறி.

7. மெய்யேதான் மெய்யறிவு மூலம்; தொடலறி
வெய்தாமல் எவ்வறி வாம்.

8. மெய்யேதான் மேன்மக்கள் சாவாத வாழ்வராய்ச்
செய்செயல்கள் எல்லாம் சொலும்.

9. "ஊனுடம் பாலயம்" என்னும் மொழியைநீ
தேனுரையாய் எண்ணித் தெளி.

10. மெய்யை நனியோம்பி மேதக்க எல்லாமும்
செய்தாக்க வந்ததே மெய். 620

62. அழியா உடல்

1. உடலே அழியா உடல் நீயேதான், உன்னைப் பொய் யென்று சொன்னது மெய்யாகப் பொய்யேதான்! இட்டுக் கட்டியதது.

2. உயிர் நிற்பதற்கு இடமான உடலே, உடலில் உயிருண்டு இல்லை என்பவை உலகறியச் செய்வது நீயே யாம்.

3. ஓர் உயிரி உடலை விட்டுப் போன பின்னரும் அவ்வுயிரி இருந்ததன் அடையாளம் படைக்க நிற்பதும் நீயேயாம்.

4. உடம்பு அழிந்தால் உயிரும் அழியும் என்று திருமூலர் கூறிய ஒளிமிக்க சொல்லால் தெளியலாமே மெய்யென.

5. உயிர் உடலை இயக்குவது உண்மையானாலும் உடம்பு இல்லாமல் உயிரைத் தனித் தறிய முடியக் கூடியதா?

6. ஆவியாகி விட்ட ஒன்றை ஆளாக எண்ணுபவர் எவர்? கூவி அலறுவதாகக் கூறும் பேயின் அடையாளம் தானே அது.

7. மெய்யுணர்வு கொள்வதற்கு மெய்யான அடிப்படை மெய்யே! தொடலறிவு இலையேல் பின்னை அறிவுகள் உண்டோ?

8. உயர்ந்தோர்களின் உடல் உருவமே அவர்கள் தோற்றமும் ஏற்றமும் செயலும் பண்பும் எல்லாமும் சொல்லும் சான்று.

9. திருமூலத் திருமந்திரம் ஊன் உடம்பே திருக் கோயில் என்று கூறிய உரையைத் தேன்போலும் உரையாக எண்ணித் தெளிக.

10. உடலை நலமாகப் பேணி உயர்வானவை எல்லாமும் செய்து ஆக்கம் பெருக்க ஆகியதே ஆக்கையாம் மெய்.

63. வாய்

1. வாயடக்கம் வாயாதார் நோயடக்கம் வாயாத
பேயரெனப் பேசல் முறை.

2. சோற்றுக்கு மட்டுமில்லை சொல்லுக்கும் நாவேதான்
ஏற்றழிக்கும் எல்லாமும் எண்.

3. 'யாகாவா ராயினும் நாகாக்க' என்றதுதான்
சொல்லோ டுறுசுவைச் சுட்டு.

4. ஆகாப் பொருளெல்லாம் அள்ளி விழுங்குவதால்
போகாத நோய்கள் புகும்.

5. ஒவ்வா உணவே ஒருநூறு தீமையாம்
செவ்வையாம் பட்டுணியும் சீர்.

6. 'பற்றியம்' என்பது பற்றும் கடைப்பிடியாம்;
'பத்தியம்' ஆக்கினர் பாழ்.

7. நோயால் கெடுவதினும் வாயால் கெடுவாரே
தாயாலும் கொள்ளாத் தடி.

8. எவ்வள வுண்டாலும் அவ்வளவும் அள்ளி
எரிக்கவோ செய்யும் எரி?

9. உடலுக்குக் கட்டாயம் ஓய்வென்பார் தங்கள்
குடலுக்குத் தந்தாரா ஓய்வு?

10. நாளைக் கொருவேளை ஊணென்னல் காலைகால்
பின்னரை காலாய்ப் பிரித்து. 630

63. வாழ்வாக்கும் வாய்

1. வாய்ச்சுவையில் அடக்கம் கொள்ளாரை நோயைப் பெருக்கும் பேயரெனப் பழித்துப் பேசுதல் வழக்கமாகும்.

2. வாயடக்கம் என்பது சுவையடக்கம் மட்டுமில்லை. சொல்லடக்கமே; நாவடக்கம் இல்லாமை யாவும் அழிக்கும்.

3. எவற்றைக் காக்கத் தவறினாலும் நாவைக் காக்கத் தவறாதே என்று வள்ளுவம் சொன்னது சொல்லோடு சுவைக்குமேயாம்.

4. ஒவ்வாத ஊண்களை எல்லாம் அள்ளி உள்ளே போட்டால் தீராத நோய்களெல்லாம் தேடிப்புகுவது உறுதியாம்.

5. ஒவ்வாத உணவே பலப்பல தீமைகளையும் ஆக்கும்; செம்மையாம் பட்டுணி நோன்பு சீர்மையாம்.

6. மருத்துவர்கள் கடைப்பிடிக்கக் கூறும் முறைகள் 'பற்றியம்'. அதைப் பத்தியம் என்று சொல்லிப் பாழ்படுத்தினார்.

7. நோயால் கெடுவாரினும் வாய்ச்சொல்லால் கெடுவாரே பலர். அவர் தாயாலும் கொளாத் தடியர்.

8. வேண்டா அளவு அள்ளிப்போட்டு உண்டாலும் அவற்றை எல்லாம் எரித்து ஆற்றலாக்க வல்லதாகுமோ குடலெரிப்பு?

9. கட்டாயமாக உடலுக்கு ஓய்வு வேண்டும் என்பார். ஆனால் அவரே தங்கள் குடலுக்கு ஓய்வு தந்தாரா என்றால் இல்லை.

10. ஒருநாளைக்கு ஒரு வேளை உணவு என்பது, காலையில் கால் உணவு; பகலில் அரையுணவு; இரவில் கால் உணவு என்பதாம்.

64. மூக்கு

1. மூச்சுப் புகல்வரல் மூக்கேயாம்; அன்னதுபோல்
மூக்கே முளையாம் பயிர்க்கு.

2. உயிர்ப்புக் கிடமென உள்ள உயர்மூக்
குயிர்களுக் கெல்லாம் பொது.

3. முளையதைக் காண்பவன் மூக்கின் அமைவாம்
கிளையதை எண்ணல் முறை.

4. மூக்கினைப் பேணல்நல் மூச்சினைப் பேணலாம்
ஊக்கும் உயிர்பேணல் ஆம்.

5. உட்புகு மாசுக் குயர்தடைக் காப்பது
கட்டமை மூக்கு முடி.

6. மூக்குள் அழுக்கு முடைநாற்றம் உண்டாயின்
ஊக்கும் உடனங்குப் புண்.

7. உள்ளிழுக்கும் காற்றை உறுநஞ்சாய்ச் செய்துபின்
உள்விடுத்தால் என்னாம் உணர்?

8. வெளிமாசும் உள்மாசும் வேர்வையின் மாசும்
குளிப்பிலே போமோ குறி?

9. நோயாக்கு மூச்சு நுழையாமல் காத்திட
நீயாக எண்ணி நினை.

10. மூக்கு நலம்பேணல் மூச்சு நலம்பேணல்
காக்கும் உயிரைக் கனிந்து! 640

64. உயிர்க்காப்பாம் மூக்கு

1. மூச்சுப் புகுதலும் வருதலும் மூக்குவழியேயாம். வித்துகளிலும் முளைத்து வளரும் இடம் மூக்கேயாகும்.

2. உயிரோட்டத்திற்கு இடமாக உள்ள உயர்ந்த மூக்கு ஓரறிவுயிரி முதல் எல்லா உயிரிகளுக்கும் பொதுவாம் உறுப்பாகும்.

3. பயிரி முளையிட்டு வருதல் மூக்கின் அமைவைப் போல் இரட்டைப் பிளவாக இருத்தலை எண்ணுதல் வேண்டும்.

4. மூக்கைத் தூய்மையாகப் பேணிக் கொள்வது உயிரைப் பேணுவதாம். அப்பேணுதல் உயிர் மேலும் சிறக்க உதவும்.

5. மூக்கின் உள்ளாக உள்ள மயிர்முடி மூச்சின் வழியாக உள்ளே போகும் மாசு தடுத்துக் காக்கும் நலத்ததாம்.

6. மூக்குக்குள் அழுக்கும் கேடான நாற்றமும் உண்டாகுமானால் அங்கே புண்ணும் சீழும் உண்டாகச் செய்துவிடும்.

7. உள்ளே தூய்மை ஆக்க இழுக்கும் காற்றை நஞ்சாக்கி உள்ளே விடுத்தால் எத்தகைய கேடாம் என்பதை உணர்க.

8. வெளியழுக்கும் உள் அழுக்கும் வேர்வை நாற்றமும் ஆகிய எல்லாம் குளித்ததால் மட்டும் அகன்று போய்விடுமா?

9. நோயை ஆக்குகின்ற நச்சுக் காற்று உள்ளே போகாமல் காப்பதற்கு நீயே எண்ணிப் பார்த்து முடிவு செய்க.

10. மூக்கின் நலத்தைப் பேணுதல் மூச்சின் நலத்தைப் பேணுதலாம். அதுவே உயிரைக் காக்க வழியாகும்.

65. கண்

1. கண்ணருமை காணும் சிறப்பால் அறிந்திடுக
மண்ணருமை விண்ணருமை மாண்பு.

2. வண்ணம் வனப்பு வகையெல்லாம் வாய்த்தாக்கும்
கண்களைக் காக்கக் கருது.

3. கண்ணேஎன் கண்மணியே பாவாய் எனக்கொஞ்சும்
உண்மை உணர்ந்தவை போற்று.

4. இருக்கும் உறுப்பருமை எண்ணாமல் பின்பதை
எண்ணியென் எண்ணாமல் என்?

5. கண்ணருமை பேணல் அறிவறியப் பேறாகும்
எண்ணத் தவறேல் இதை.

6. புகைதூசி புன்மாசு யாவும் பகையாம்
படுவதற்கு முற்காக்கப் பார்.

7. கண்ணைக் கழுவும் கடமை தவறாமல்
எண்ணிப் பலமுறை செய்.

8. தூய்திலா நீரால் துயராக்கிக் கொள்ளாமல்
காய்நீரும் தண்ணீரும் காட்டு.

9. உருத்தல் உளைச்சல் உருவாயின் கையால்
உருத்தேல் துடையேல் உணர்ந்து.

10. ஆய மருத்துவர் ஆய்ந்துரைப்ப வெல்லாம்
நீயுணர்ந்து காத்தல் நெறி. 650

65. கண்ணின் அருமை

1. கண்ணின் அருமையைக் காட்சிச் சிறப்புகளால் அறிக. கண்ணருமையே மண் அருமை விண் அருமை!

2. வண்ணம் வடிவம் வனப்பு முதலிய எல்லாமும் காணச் செய்து நலமாக்கும் கண்களைக் காத்தலைத் தலைக்கடனாகக் கருதுக.

3. அருமை மகவையும் காதலியையும் கண்ணே, கண்மணியே, எனக் கொஞ்சுகின்றமையை உணர்ந்து கண்ணைப் போற்றுக.

4. நமக்கு வாய்த்துள்ள உறுப்புகளின் அருமையை எண்ணாமல் அவை கெட்டபின் எண்ணி என்? எண்ணாமல் என்?

5. கண்ணின் அருமையைப் பேணிக் காத்தல் அறியத் தக்க பேற்றை வழங்கும். இதனை எண்ண மறவாதிருக்க.

6. புகையும் தூசியும் மாசுகள் யாவும் கண்ணுக்குப் பகையாம். அவை கண்ணில் படாதிருக்க விழிப்பாக இருக்க.

7. உறங்கி எழுந்தாலும் சோர்ந்தாலும் தொடர்ந்து கண்ணுக்கு வேலை தந்தாலும் கண்ணைக் கழுவித் தண்மை ஆக்குக.

8. தூய்மையற்ற நீரால் கழுவித் துன்பத்தை உண்டாக்கிக் கொள்ளாமல் தூய வெந்நீர் தண்ணீரால் கழுவுக.

9. கண்ணில் உருத்தல், வலித்தல் உண்டாகுமானால் கையால் துணியால் தேய்க்காமல் பேணி வேண்டுவ செய்க.

10. துறைசால் மருத்துவர் தெளிந்து கூறியவற்றை யெல்லாம் நீ தெளிவாக அறிந்து, கண்ணைக் காத்தல் முறையாம்.

66. செவி

1. செவியுறுப்பு கேள்விக்குச் செவ்வுறுப்பாம் உண்ணும்
அவியுறுப்பின் ஆக்கமாய்ப் போற்று.

2. கேள்வி அறிவு கிடைக்கின்ற மூலத்தை
ஆள்வினை வல்லான் கெடான்.

3. செவிப்பறை கெட்டால் செவிடாகிப் போகும்
குவிவளம் யாதும் கொளான்.

4. காதைக் குடைதல் கருத்தின்றிச் செய்தலால்
பேதைமை கொள்வார் பெரிது.

5. இசைக்கும் இசையுலகம் எங்கேயோ போக
வசையும் வருமே வரிந்து.

6. கல்லாக் குறையும் கடியும் செவியுறையை,
இல்லாமல் செய்தல் இழிவு.

7. செவிக்குறை எய்திச் செறிகருவி மாட்டித்
தவிர்ப்பினும் தற்செவியா மா?

8. ஆன்ற அறிவுக் கமையாணி வேரதை
ஏன்றுநாம் காத்தல் கடன்.

9. அழுக்கு குறும்பீளை ஆகா வெடிகள்
இழுக்காய் அமைவதை எண்.

10. செவிட்டில் அறைதல் செவிடாக்கல் ஆகும்
தவற்றில் தவறாம் அது. 660

66. செவிச் செல்வி

1. செவி உறுப்பு, கேள்வி அறிவைப் பெருக்கவே அமைந்த செவ்வுறுப்பாம். உண்பதாம் அவியுண்ணும் வாயினும் போற்றுக.

2. கேள்வி அறிவுக்கு மூலமாகக் கிடைத்ததாம் செவியை, அறிவு முயற்சியன் எவ்வாறும் கெடாமல் போற்றிக் கொள்வான்.

3. செவிக்கண் உள்ள ஒலிவாங்குறுப்புக் கெட்டுப் போனால் செவி கெட்டுப் பெருகியுள்ள வளங்களைப் பெறமாட்டான்.

4. காதை முறைகெட்டுக் குச்சி விரல் இறகு என்பவை கொண்டு குடைபவர் பின்னே அறிவுக்குறைக்கு ஆளாவர்.

5. இசை என்னும் இனிமைச் சுவை எட்டாமல் ஒழிந்து போம். செவிடன் என்னும் (மாற்றுத்திறனாளி) பழியும் பெறுவான்.

6. கல்வியால் வரும் செவிச் செல்வத்தைப் பெறுதற்கு உறைவிடமாம் செவியைக் கெடுத்தல் குற்றமாம்.

7. செவி, கேட்கும் திறனை இழந்து கருவி கொண்டு கேட்டாலும், இயற்கையாம் செவியாகி விடுமா? ஆகி விடாதே!

8. அகன்ற அறிவைப் பெறுவதற்கு அமைந்த ஆணிவேர் போன்ற செவியை இயன்ற அளவால் முயன்று காத்தல் கடமையாம்.

9. அழுக்கும் பீளையும் கேட்டற்கு ஆகாத வெடி முதலாம் பேரொலியும் கெடுப்பதை அறிந்து அவற்றை விலக்குக.

10. செவிட்டில் அடிப்பது செவிடாக்கும் செய்கையாம். அது தண்டிப்பில் கொடிய தண்டிப்பாகும்.

67. மூளை

1. மூளைப் பகுதி முழுதாய காப்பரணம்
மூளியக்க மெல்லாம் அது.

2. ஆணையோ டாளுமை ஆக்கமெலாம் பூணமைந்த
மின்னியக்கம் மூளையென முன்.

3. மூளைத் தலைமையே மூத்த நலவியக்கம்
ஆளியக்கம் எல்லாம் அது.

4. சீர்த்த அறிவுக்கும் செந்தண்மை நெஞ்சுக்கும்
வாய்த்தது மூளை வளம்.

5. மூளை முடிச்சு முறைகேடே ஞாலத்தைப்
பாழாய்ப் படுத்தும் பகை.

6. ஆக்கம் அனைத்தும் அழிவுக் ககப்படுத்தும்
ஊக்கியும் மூளை உணர்.

7. மூளை நலமே முழுநலமாம் முத்தான
ஆளாக வாழ்ந்தாரை ஆய்.

8. ஆன்றோரும் சான்றோரும் ஆமூளை வண்மையால்
வாய்ந்தோராய் எண்ணி வழுத்து.

9. மூளைப் பதிவுக் களவில்லை வெற்றிடமாய்
வேளை கெடுப்பார் மிக.

10. கோளா றெனும்சொல் குறிக்கும் இருபொருள்
கேளா தவைதாமா கேள். 670

67. முழுநல மூளை

1. பெருமூளை சிறுமூளை யாகியவையே உடலின் முழுவதற்கு மாகிய காப்பிடமாம். உடல் உள இயக்கம் அதன் சார்பினவே.

2. ஆணையிடல் ஆளுமைபுரிதல் ஆக்கம் செய்தல் ஆகியவை அமைந்த மின்னியங்கு நிலையம் மூளையாவதை அறிக.

3. மூளையின் முதன்மையான இயக்கமே மிகுந்த உடல் உள அறிவு நல இயக்கங்களாம்! மாந்தரியக்க மூலம் அதுவேயாம்.

4. சீர்மைமிக்க அறிவுக்கும் அருளமைந்த நெஞ்சுக்கும் வாய்ந்த முதலாவது மூளையின் வளப்பமேயாம்.

5. மூளையில் உண்டாகும் திரிபும் அவிழ்க்க இயலா முடிச்சும் ஆக்கும் முறை கேடுகளே உலகு கெடுக்கும் பகை.

6. ஆக்கத்திற்கு ஆவனவற்றை எல்லாம் அழிவுக்கு ஆக்குவதும் அதனை ஊக்குவதும் மூளைக் கேட்டின் விளைவென உணர்க.

7. மூளையின் நலமே அறிவு பண்பாடு புகழ் முதலாயவற்றின் நலமாகும். முத்துப்போல் சிறந்து விளங்கியவரை ஆய்க.

8. அறிவால் சிறந்தவரும் பண்பால் நிறைந்தவரும் அந்த மூளைக் கொடையால் வாய்ந்தவர் என எண்ணி வாழ்த்துவாயாக.

9. மூளையில் பதிதற்குரிய இட அளவு பெரிதினும் பெரிது. அதனை வெற்றிடமாக்கிக் கெடுப்பவரே மிகப்பலராம்.

10. கொள்கை நெறி எனவும், மூளைமாறுபாடு எனவும் இருபொருளும் தரும் 'கோளாறு' என்பது கேளாததா?

68. கொள்கை

1. உழைப்பால் பெறலன்றி ஓரிடத்துக் கேட்கும்
பிழைப்பைக் கருதல் பிழை.

2. பொறியில்லார் ஆளுமைப் பொற்பறிந்தால் மற்றோர்
வறியராய் ஏந்துவரோ கை.

3. ஈட்டுதே னீயை இயல்போடு காண்பவன்
நீட்டான் நிரப்பு நினைத்து.

4. "இரப்பன் இரப்பாரை எல்லாம்" என்ற
சுரப்பை அறிதல் சுடர்.

5. எனக்கொன்று தந்தார் எனில்மற் றெனக்கன்றாம்
தொண்டுக்குச் செய்யும் துணை.

6. தொண்டு தொடரத் துணையாய் இருப்பாரைக்
கண்டுபா ராட்டல் கடன்.

7. தானேதான் முன்வந்து தெய்வம் அருளாது;
வான்மழையாய் வாய்த்த தது.

8. கேடில்லா வான்மழையே கிட்டிற் றெனப்போற்றல்
நாடறிந்த நல்லோர் நயன்.

9. வாரிச் சுருட்டவே வந்தவன் தொண்டுக்கு
வேரிற் புழுத்த புழு.

10. ஊருக்குத் தொண்டு புரிகின்ற தூயனை
ஊரதே காக்கும் உவந்து. 680

68. கடைப்பிடி

1. தாம் உழைக்கும் உழைப்பால் வருவதை அல்லாமல் எந்த இடத்தும் இரந்து உயிர்வாழ்தல் பிழைபட்ட தாம்.

2. பொறிக் குறை உடையாரும் வாழும் பொலிவை அறிந்தோர் வறுமையுற்றுக் கையேந்தி வாழும் வாழ்வு கொள்வரோ?

3. தேடிச் சேர்த்து வாழ்வதே வாழ்வாகிய தேன் ஈயைக் காண்பவன் மானம் கெட்டுக் கையேந்திப் பிழையான்.

4. இரப்பவரை எல்லாம், இரவாதீர் என்று இரந்த வள்ளுவச் சுரப்பை அறிவாரானால் சுடர்மிக்க திறவராக விளங்குவர்.

5. தொண்டர் ஒருவருக்கு ஒருவர் உதவினார் என்றால் அது பெறுபவர் தமக்கன்று; தொண்டு துலங்குவதற்கே யாகும்.

6. தொண்டு தொடர்ந்து துலங்குவதற்கு உதவுவாரை இனம் கண்டு பாராட்டல் தொண்டு செய்வார் கடமையாம்.

7. தெய்வம் உருக் கொண்டு வந்து என்றும் தந்து விடாது. தெய்வம் அன்னவரே வான்மழை என வழங்குவதாம் அது.

8. வான்மழையும் இருவேறு தன்மையது. ஆனால் ஆக்கமே அன்றிக் கருதாத வான்மழை அன்னவர் உதவியாளர்!

9. உதவுதற்காகத் தந்த உதவியைத் தனக்குத் தந்ததாகக் கருதிக் கொள்ளையடிப்பவன் பயிரின் வேரில் உண்டாகிய புழு.

10. ஊருக்கு உண்மையாகத் தொண்டு செய்பவன் என்றால் உண்மையாக ஊரே அவனைக் காக்கும்.

69. தன்னம்பிக்கை

1. தன்பொறியைத் தன்புலனைத் தான்காவான் தான்கண்ட
என்பொறியும் என்புலனும் என்?

2. தன்னம்பிக் கையில்லான் தான்கொண்ட நம்பிக்கை
என்னவே என்னினும் என்?

3. நம்பிக்கை என்றால் நலமார்ந்த நம்பிக்கை
தன்னம்பிக் கையதே தான்.

4. கையாலே ஆகாதான் ஆற்றமாட் டாதான்தன்
நம்பிக்கை இல்லானே யாம்.

5. தனைநம்பிச் சோராது தாளாண்மை கொள்வான்
தனைநம்பும் தெய்வத் தயை.

6. துணிவாளன் என்றும் துயரமுறான் என்னும்
மணிமொழியை மாண்மொழியாய் எண்.

7. உள்ளம் உடைமை உடைமையெனும் வாய்மையாம்
வள்ளுவ ஊக்கம் வகு.

8. உள்ளத் தனைய துயர்வென்னும் வள்ளுவ
நம்பிக்கை கொள்வாய் நயந்து.

9. ஏழுநாய் கூடி எதிர்நின்று வள்ளிட்டும்
தாழாது நின்றதோர் ஆடு.

10. வாய்பிளந்து வந்த புலிகண்டும் அஞ்சாமல்
வாய்பிளந்தாள் வந்தபுலி வாய். 690

69. தன்மேம் பாட்டுத் தகவு

1. தன் பொறிகளையும் புலன்களையும் காக்கமாட்டாதவன் பொறிகளாலும் புலன்களாலும் என்ன பயனோ?

2. தன்னம்பிக்கை இல்லாதவன் கடவுள் முதலாம் எந்த நம்பிக்கைகளைக் கொண்டிருந்தாலும் எப்பயனும் இல்லை.

3. நம்பிக்கை என்றாலே என்றும் எவ்விடத்தும் எந்நிலையிலும் தன்னை விட்டு நீங்காது தான் கொண்ட நம்பிக்கையே.

4. தன்னம்பிக்கை இல்லாதவன், கையால் எதுவும் செய்தல் இல்லானும் எதனையும் முடிக்க மாட்டாத வனுமாம்.

5. தன்னை நம்பிச், சோர்வு சிறிதும் இன்றி முயற்சி கொள்வானைத் தெய்வத் தன்மை வாய்ந்தவரும் ஏற்று ஆவன செய்வர்.

6. துணிவு மிக்கோன் ஒருநாளும் எத்தடைக்கும் அஞ்சான் என்று பொதுமக்கள் வாய்மொழியாம் பெருஞ்சொல்லை எண்ணுக.

7. உள்ளத்தின் உறுதிப் பாடே உடைமைகளுள் எல்லாம் உயர்ந்த உடைமை என்னும் வாய்மொழியை ஆணையாகக் கொள்க.

8. உள்ளத்தின் உயர்வு எவ்வளவு, அவ்வளவே உன் உயர்வாம் என்னும் வள்ளுவத் தன்னம்பிக்கையை விரும்புக.

9. ஓர் ஆட்டுக் கடாவைச் சூழ ஏழு நாய்கள் நின்று குரைத்தன. கடா பெருமிதமாய் நின்றது. நாய்கள் குரைத்துக் கலைந்தன.

10. கடித்துக் குதற வாயைப் பிளந்துவந்த புலியைத் துணிந்து கையால் இருவாயும் பற்றிப் பிளந்த புலியாம் வீறுடையாளுண்டு.

70. மேன்மை

1. தேரிழுக்கச் செல்வாரில் தீயணைக்கச் செல்வாரே
நேருயர்ந்த மேலோர் நினை.

2. திக்கற் றவரைத் திறமாகத் தேர்ந்தறிந்து
தக்க தியற்றல் தவம்.

3. வீழ்வாரைத் தூக்கி விழுப்பமுறச் செய்வாரே
வாழ்வாருள் வாழ்பவர் ஆம்.

4. வாடும் பயிர்காக்கும் வான்மழையாய் நின்றோரின்
பாடு புகழைநீ பாடு.

5. பாலை மழைக்கும் பயிர்மழைக்கும் ஒப்பிட்டுச்
சோலைக் கொடையாய்ச் சுடர்.

6. வெள்ளத்துப் பட்டு விரைவாரைக் காப்பாரே
உள்ளத்துத் தெய்வமாய் உன்னு.

7. உருக்கொண்டு வந்தே உதவும் ஒருதெய்வம்
நானென்ன எண்ணி நட.

8. தாம்தெய்வம் ஆயாரைத் தாங்காத தெய்வமெதும்
யாமறியச் சொல்லற் கிலை.

9. தெய்வ உறையுளாய்த் தேர்ந்து திகழ்வாரைத்
தெய்வமே காக்கும் திடம்.

10. மேலிருந்து வாராது தெய்வம் மிகுதொண்டால்
கீழிருந்து மேலேறும் மேல். 700

70. மேலாய தன்மை

1. தேரிழுக்கச் செல்கின்ற அடியார்களிலும் ஊர்எரியும் போது அணைக்கச் செல்லும் அஞ்சாத் துணிவரை மேம்பட நினை.

2. தாடி சடை மழுக்கைத் தவத்தினும் உயர்தவம், எவ்வாய்ப்பும் இல்லாத ஏதிலியர்க்கு ஏற்றதுணையாகித் தொண்டாற்றுதலே!

3. பெருமையாக வாழ்வாரினும் பெருமையாக வாழ்பவர்! குப்புற வீழ்ந்து பட இருப்பாரைத் தூக்கி மேம்படச் செய்பவரே.

4. வாடிச் சாவும் நிலையில் நிற்கும் வளர்பயிர் போல்வார்க்கு வான்மழை போல் உதவினார் உதவியைப் பாடிப் பரப்புக.

5. பாலையில் பெய்தமழை யாகாமல் வளர்பயிர்க்குப் பெய்த மழையாக இருப்பார் தம்மை எண்ணி நீ சோலை வளமாகு.

6. வெள்ளத்துள் இழுபட்டுப் போவாரை அஞ்சாது புகுந்து காப்பவரே உறுதியாக உதவும் தெய்வமாக நினைக்க.

7. உருத்தாங்கி உதவுதற்காகவே வாழ்கின்ற தெய்வப் பேற்றாளன் நானே என்றெண்ணிச் செருக்கின்றிச் செயலால் காட்டுவாயாக.

8. தெய்வத் தன்மையராய் முன்வந்து உதவுகின்றவரைக் காக்கத் தவறும் தெய்வம் தெய்வமெனச் சொல்லேல்.

9. தெய்வமாகவே வாழ்ந்து கொண்டு தேடித்தேடி உதவுவாரைத் தெய்வமே தேடித் தேடி உறுதியாகக் காக்கும்.

10. தெய்வம் எங்கோ மேலே இருந்து கீழே இறங்கி வாராது. கீழே இருந்தே தெய்வமாய் மேலேறி விளங்குதலே மேன்மை.

எட்டாம் நூறு

71. அன்பு

1. உள்ளார்ந்த அன்பில் ஒருகுறை உண்டானால்
பொள்ளெனத் தோன்றும் அது.

2. அன்புக்கும் மாறாம் அடைக்குந்தாழ் உண்டாம்நேர்
வன்புக் கிடமாம் வழி.

3. கூடாக் குணமே குணமாகி விட்டாரைக்
கூடாமை அன்புக் குணம்.

4. தாயுளம் கூடத் தகாத தறுதலையைப்
போயணைக்கப் புண்ணாகிப் போம்.

5. உயிர்நிலை அன்புக் குறுதி யறமாம்
அயராது போற்றல் அரண்.

6. முன்னிலையாம் அன்பியல் இல்லறமாம் பின்னைப்
பெருகும் அருளே துறவு.

7. தூய துறவன் துலங்குமிறை ஆவனென
ஏய நினைத்தாரை எண்.

8. அன்பின் விளைவதும் அன்பாக நீளுமேல்
அன்பே உலகாம் அமைவு.

9. அன்பின்றேல் பின்னை அருளில்லை ஆன்மமெலாம்
தன்னுயிராய் எண்ணல் அருள்.

10. உலகத்தை உட்கையில் உட்கார வைப்ப
திலகுமுயர் அன்பொன்றே ஆம். 710

71. பிறர்க்கென வாழும் நேயம்

1. உண்மையான அன்பின் இடையே ஒருகுறை தோன்றுமானால் வெளிப்பட அறியுமாறு செய்து விடும் என்பது அறிக.

2. அன்புக்கு மாறுபட்ட அடைக்கும் கதவும், பூட்டும் உண்டாம். அது நேர் எதிரீடாக முட்டும் போதில் என்பதாம்.

3. வேண்டத் தகாத இயல்பே தமக்கு இயல்பாகி விட்டாரைக் கூடாது ஒதுங்குவதே அன்பின் இயல்பாகும்.

4. தாய்மையாம் பேரன்பும் கூடாத தகவில்லாக் கேடனை நெருங்க மனம் நொந்து மாறிப் போதல் கண்கூடு.

5. வாழ்வின் உயிர் நிலையாக அமைந்த அன்புக்குப் பயன் அறமாகும்; அதனால் அறத்தைப் பேணல் நல்ல பாதுகாப்பாம்.

6. முற்படத் தோன்றிய அன்பால் அமைந்த பெருமையதே இல்லறம். அவ்வன்பின் பெருக்கமாம் அருளே துறவறம்.

7. தூய துறவனாக விளங்குபவனே இறைமைத் தன்மையனாம் தகவினைப் பொருந்தப் பெறுவன் என்பதை எண்ணுக.

8. அன்பு வித்தின் விளைவு அன்பே ஆகும். அவ்வாறு எங்கும் விதைக்கப்படின் அன்பின் விளைநிலமாக உலகம் திகழும்.

9. அன்பு ஒருவரிடம் இல்லையானால் அருளில்லை; உயிரிகளை யெல்லாம் தன்னுயிர் எனப் பேணுதலே அருளாகும்.

10. உலக முழுவதையும் நம் உள்ளங்கையில் உட்கார வைக்கும் உயர் நிலை, விளங்கும் அன்பு ஒன்றற்கே கூடுவதாம்.

72. இன்சொல்

1. வந்தார் உவக்க வரவேற்றல் வாய்மணக்கத்
தந்துண்ணச் செய்தலின் மேல்.

2. இன்னாத ஒன்றால் இனியவை பன்னூறும்
இன்னாத தாகல் இயல்.

3. வகையாய்ப் படைத்த வளவிருந்தும் சொல்லால்
பகையாகிப் பாழ்பட்டுப் போம்.

4. சோற்றில் கிடக்கும் ஒருகல்லே சோறெல்லாம்
தூற்றப் படுத்தல் துணி.

5. இன்சொற் கிணையான ஈகையொன் றில்லையிதை
வன்சொலொன் றாலே அறி.

6. புண்படுத்தல் யார்க்கும் எளிதாகும் பண்படுத்தும்
பாங்கே அரிய பயன்.

7. கல்லடியில் வல்லடியாம் காய்ந்துரைக்கும் சொல்லடிதான்
நல்லுளத்தில் நண்ணா தது.

8. பல்லுக்குப் பல்லென்னும் பாழ்மையில் ஊன்றினார்
பல்லுக்குப் பல்லுடைவார் பார்.

9. தெற்கடிக்கும் காற்றுத் திருப்பி அடிப்பதனைச்
சற்றறியிற் சாற்றும் அது.

10. எளியராய் எண்ணி இழிவுறுத்தல் அன்னார்க்
கெளியாரும் எள்ள இடம். 720

72. இனியவை கூறுதல்

1. நம்மைத் தேடிவந்தவர் மகிழுமாறு வரவேற்று உரையாடல் நாவு மணக்குமாறு ஊண்தருதலினும் மேம்பட்டதாம்.

2. இனிமையற்ற சொல் ஒன்றனைச் சொல்லி விடுதலால் இனிய சொற்கள் பல சொல்லியவும் இனிமையற்ற தாகிப் போம்.

3. வகை வகையாக ஆக்கிப் படைத்த அரிய சுவைமிக்க உணவும் கடுஞ்சொல் ஒன்றனால் பாழ்பட்டு ஒழிந்து போகும்.

4. சோற்றில் கிடக்கும் ஒரே ஒருகல் அத்தனை அரிசி ஆக்கச் சிறப்பையும் தூற்றுதலாக ஆக்கிவிடுதல் கண்டு தெளிக.

5. இனியவை சொல்லுதலுக்கு இணையான கொடை எதுவும் இல்லை. இதனை வன்சொல் ஒன்றன் விளைவால் அறிக.

6. ஒருவரைப் புண்படச் சொல்லுதல் எவர்க்கும் எளிதாகும். ஆனால் பண்படுத்தச் சொல்லும் சொல்லே அரிய நலமாம்.

7. கல்லடியைக் காட்டிலும் வல்லடியாக இருப்பது கடிய சொல்லடியேயாம். அது, நல்ல உள்ளத்தை நெருங்குதல் இல்லை.

8. பல்லை உடைத்தார் பல்லை உடைத்தல் என்னும் அழிவு வழியில் நின்றவர் தமக்குச் செய் தீமைக்குத் தாமும் தீமை அடைவார்.

9. தெற்கே அடித்தகாற்றுத் திரும்பி அடிக்கும் இயற்கை போல் தீமைசெய்தார் திரும்பித் தீமைக்கு ஆட்படுவர்.

10. எளியவராக ஒருவரை எண்ணி இழிவுபடுத்தல் அவர்க்கு எளியவரும் எளிதில் இழிமைப்படுத்த இடமாக்கும்.

73. சொல்லுதவி

1. சொல்லுதவி போலச் சொலத்தக்க நல்லுதவி
இல்லையாம் நன்றாக எண்.

2. சொல்லால் சுடர்ந்தாரைச் சொல்லக் கணக்குண்டோ
சொல்வதுவாம் அப்பேறு சொல்.

3. சொல்லா நிலையும் சுடர்நிலையாம் தீமையைச்
சொல்லாத வேளை தனில்.

4. சொல்லாளன் சொல்லைச் சுருக்குதல் சொற்செட்டாம்
அல்லாதான் செட்டென்ன செட்டு.

5. தற்பெருமைச் சொல்லே தனைச்சிறுமைக் காட்படுத்தல்
தற்பெருமை காணா தது.

6. சொல்லி நிறைந்தாரே சொல்லால் முழக்குவதைத்
தள்ளி யுரைத்தனர் தாம்.

7. சும்மா இருக்கும் சுடர்மை எளிதன்றாம்;
அம்மா அரிதின் அரிது!

8. பேரா இயற்கை பெரிதுணர்ந்த பேர்தாமே
நேராய் அறிந்த நிலை.

9. கல்லால் அடியுற்றும் கண்டுகொளார்; அல்லாதார்
கல்லாக் கலையாம் அது.

10. தேளே கடித்தல் தெரிந்தாலும் மற்றதுதான்
மாளா திருக்க மதி. 730

73. எழுச்சியூட்டி ஆக்கமாக்கும் சொல்லாம் உதவி

1. வீழ்வாரை வாழ்வாராக்க வல்ல சொல்லுதவி போலும் ஒரு நல்லுதவி இல்லை என்பதை நன்றாக எண்ணுக.

2. சொல்லால் சுடர்போலக் கிளர்ந்து ஒளி செய்தவரைச் சொல்லக் கணக்கில்லை. சொல்லும் வகையால் சொல்க.

3. தீமை பயப்பதாம் ஒன்றைச் சொல்லாமல் இருப்பதும் நல்லசொல் சொல்லிய பயனை நல்கும்.

4. சொல் வல்லான் சொல்லைச் சுருக்கிச் சொல்லுதல் சிக்கனமாம். பொருட் சிக்கனம் என்ன சிக்கனம்?

5. தற்பெருமையாகச் சொல்லும் சொல்லே சிறுமைக்கு ஆட்படுத்துதல் அறியாதவன் பெருமைக்குக் கேடன்.

6. சொல்ல வேண்டுவன எல்லாவற்றையும் சொல்லி முடித்தவரே சொல்லால் முழக்குதல் வேண்டா என்றாராம்.

7. செயலற நிற்கும் ஒளியுடைமை அரியதில் அரியதாம். அம்மம்மா அப்படி அருமை வேறெதுவும் உண்டோ?

8. அந்நிலையர் வாழும் நாளிலேயே பேரா இயற்கை வீடு பேற்றை நேருக்கு நேராய்க் காட்டியவராம்.

9. கல்லால் அடிப்பட்டாலும் மலராய் மதிக்கும் நிலையரைக் காண்க! அது கற்றலரிய கலையாம்.

10. தேளே கடிக்கக் கண்டும் அத்தேள் எவராலும் அடிப்பட்டுச் சாவாமல் உயிர் வாழ்ந்திருக்கக் காணல் அந்தண்மை அறிவாம்.

74. சொல் வகை

1. கடித்ததைக் கொன்றதால் காணுபய னென்ன
இடந்தூய தாக்கநீ எண்.

2. தூய்மைப் பொருளாய்த் துலங்கு துடைப்பத்தை
வாய்மையாய் எண்ணி மதி.

3. துடைப்பத்தில் தூய்மை இலையானால் எந்த
நடைவழியும் நாறும் நனி.

4. திருந்தார் பிறரைத் திருத்த நினைத்தல்
பொருந்தாச் செயலாம் புரி.

5. எடுத்தெறிந்து கேட்டால் இழிமை புரிவோர்த்
தடுத்துரைக்க உண்டோ தகவு.

6. அவராக நாம்மாறி அன்பாகச் சொன்னால்
எவர்தாமும் கேட்பார் இனிது.

7. அச்சத்தால் ஆரும் அமைந்து திருந்தாராம்
உச்சத்தில் செல்வார் உணர்.

8. உணர்ச்சி வயப்பட்ட போதில் உரைத்தல்
இணக்கமறச் செய்யும் இடர்.

9. இடைத்தடுத்துச் சொல்லல் இரைச்சலே ஆக்கும்
தடையின்றிச் சொல்வதைத் தாங்கு.

10. வெல்லும்சொல் வல்லார் விரையார் வெடித்துரையார்
நல்ல முறையது தான். 740

74. சொல்லைச் செவ்விதில் சொல்லும் முறை

1. தேள் முதலியவை கடித்ததெனின் அவற்றைக் கொன்றதால் பயன் என்ன? தூய்மைக்கேடு ஆக்காமையே பயன்.

2. தூய்மைப் பொருளாக விளங்கும் கூட்டுமாறு தூய்மை இல்லாததாக இருந்தால் தூய்மையாக்குமா? எண்ணு.

3. துடைப்பமே தூய்மை யற்றதாக இருந்தால் அதுநாறும்; அது கூட்டும் இடமும் நாறும்; அது கிடக்கும் இடமும் நாறும்.

4. தாம் திருந்தி நடவாராய்ப் பிறரைத் திருத்த நினைத்தல் பொருந்தாததும் நலமாக்காததுமாம் செயலாம்.

5. திருந்தாதான் திருத்தம் கூறும் போது நீ செய்வது சரியா? என்றால் அதனைத் தடுத்துரைக்க வழியுண்டா?

6. அவரும் தாமும் வேறல்லர் என உணரும் வகையில் அன்புடன் கூறினால் எவரும் உணர்ந்து ஏற்றுப் போற்றுவர்.

7. அச்சத்தால் எவரும் எண்ணிப் பார்த்துத் திருந்தமாட்டார். திருந்தச் சொல்வோனே நீ இதை உணர்க.

8. திருத்துவார் உணர்வு வயப்பட்டு நின்று உரைத்தல் உள்ள இணக்கத்தையும் இல்லாமல் போக்கல் உறுதி.

9. எதிர்ப்பார் உரையைக் கேட்டு மறுமொழி கூறாமல், தடுத்துக் கூறினால் கூச்சலே மிகும். கூறுமட்டும் நீ பொறு.

10. ஒருவர் சொல்வதை வெல்ல நினைவார் விரைந்துரையார். சீறியும் சொல்லார். அதுவே முறையாம்.

75. புரிதல்

1. தப்பாய்ப் புரிதல் தவறாய் முடிவெடுத்தல்
எப்பாலும் இன்னல் இவை.

2. எண்ணாமல் செய்தீ தெனினும் விளைவுகள்
நண்ணாமல் போமோ நகர்ந்து.

3. பொய்யுரைத்தல் நெய்ச்சோறாய்ப் போற்றும் பிறவிக்குப்
பொய்யாது தீமை புகும்.

4. பார்வைச் செடியும் பயன்செடியும் போல்வரைப்
பார்த்தறிதல் என்றும் பயன்.

5. தம்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்பவர்க்
கென்குற்றம் எய்தும் இலை.

6. தம்முகத்தைத் தாம்காணார் காண்பார் பிறர்முகமே;
என்முடிவு கொள்வார் இவர்?

7. தம்நலம் நோக்கித் தமையே நினைவார்க்கு
மன்னலம் தோன்றுமோ மற்று.

8. தம்மை உணர்வார் தலைசாய்க்கும் நெற்கதிருள்
மன்னித் திகழும் மணி.

9. புரிய நினையார் புரிந்தோ புரிவார்
புரியத் தகுவ புரிந்து.

10. புரியார் புரியார் அலராம்; புரிவன
எல்லாமும் தந்நலமே; எண். 750

75. தெளிதலும் தேர்ந்து செயலும்

1. ஒருவர் சொல்வதைத் தவறாகப் புரிந்து கொள்ளலும் தாமே ஒரு வகையால் முடிவு கொள்ளலும் எவ்விடத்தும் கேடே.

2. எண்ணிப் பாராமல் செய்யும் தீமையே ஆனாலும் அத்தீயதன் கேடு கேடாக அமையாமல் விட்டுப் போய் விடாதல்லவா!

3. பொய் பேசுதலே சுவைமிக்க நெய்யொடு கூடிய சோறாக உண்பாரைப் போன்றவர்க்குத் தவறாமல் தீமை வந்தே யாம்.

4. வீட்டில் வளர்க்கும் பார்வைச் செடியையும், காய்கறிக்குதவும் பயன் செடியும் ஒப்ப இருப்பவரைப் பார்த்துப்பழகல் பயனாம்.

5. தம் குற்றத்தைப் பிறர் சுட்டாமல் திருந்தி, மற்றையோர் செய்யும் குற்றம் காண்பவர்க்கு எக் குற்றமும் எய்தாது.

6. தம்மைப் பற்றித் தாம் அறியாமல் பிறர்குற்றமே காண்பவர் என்ன ஆக்கமான முடிவை எடுத்துச் சிறப்புறுவார்?

7. தம் நலமே குறியாக இருந்து வாழ்வதே வாழ்வு எனக் கொண்டார்க்குப் பிறர் நலம் நாடும் தன்மை தோன்றவோ கூடும்?

8. தம்மைத் தாமே தெளிவாக அறிந்து பண்பட்டு வாழ்பவர், மணிதிரண்ட நெற்கதிர் போன்ற மேன்மையராகத் திகழ்வார்.

9. பிறரைப் புரியவேமாட்டாதார், தம்மைப் புரிந்து கொண்டோ ஆக்கம் புரிவர்; புரியத் தக்கவற்றையும் புரியமாட்டாரே!

10. புரிந்து கொள்ளாதவர் எல்லாரும் புரிந்து கொள்ளாதவர் அல்லர்; அவர் புரிந்து கொள்வன எல்லாமும் தம் நலமே!

76. நட்பு

1. தன்கண்ணைத் தான்காணக் கண்ணாடி வேண்டுமேல்
தன்குற்றம் காணருமை காண்.

2. கண்ணன்ன நண்பாளர் காப்புரிமை உண்டானால்
எண்பெருமை எல்லாமும் ஆம்.

3. எள்ளா திடித்துரைத் தேற்றம் பெறச்செய்தல்
உள்ளார்ந்த நட்பின் உயிர்.

4. தம்நண்பர் குற்றத்தைத் தம்குற்றம் என்றுளைவார்
முன்புற்ற தெய்வம் எனல்.

5. தடுத்தாட் கொளவந்த தாயுள்ள நட்பை
எடுத்துரைக்க வல்லார் எவர்?

6. நேருக்கு நேருரைக்கும் நேயர் தொடர்பிருத்தல்
சீருக்குள் சீரான சீர்.

7. நிறைமறைத்து நேயர் குறைபரப்பு தீயர்
உறைநிலத் தொட்டா தொதுங்கு.

8. கொள்ளிவாய்ப் பேயென்னக் கூறும் குறைகளையே
உள்ளதெனக் கொள்வார் உளர்.

9. உள்ளார்ந்த நட்பை உருக்குலைக்க வல்லார்போல்
கொள்ளி நெருப்புண்டோ கூறு.

10. குற்றம் உரைப்பார் குணமான நண்பரெனின்
சுற்றமாய்க் கொண்டு சுடர். 760

76. நட்பால் ஆகும் நலம்

1. தன் கண்ணைக் காண்பதற்கே கண்ணாடி வேண்டுமானால், தன் குற்றத்தைத் தானே காணும் அருமையை நினை.

2. கண்போன்றவராக நம்மைக் காக்கும் நண்பர் இருந்தால் எண்ணரிய பெருமைகள் எல்லாமும் ஆகும்.

3. நட்பின் உயிராகக் கொள்வது, தம் நண்பரை இகழ்ந்து ஒதுக்காமல் இடித்துச் சொல்லி மேன்மை பெறச் செய்வதே.

4. தம் நண்பர் செய்யும் குற்றத்தைத் தம்குற்றமாக எண்ணி வருந்துவாரைத் தெய்வமே வந்து உதவுவதாகக் கொள்க.

5. தவறு செய்யுங்கால் தடுத்து, ஆட்கொள்ளுமாறு வந்த தாயாக நினைக்கத் தக்கார் நட்பைப் புகழவல்லவர் இலர்.

6. ஒருவருக்கு வாய்க்கும் சிறப்புக் கெல்லாம் சிறப்பு, நேருக்கு நேராக இருந்து இடித்துக் கூறும் நண்பர் இருப்பதேயாம்.

7. நண்பானவர் உயர்வுகளை மறைத்து, கீழ்மைகளைப் பரப்புவார் இருக்கும் இடத்துக்கே போகாமல் ஒதுங்கிப்போ.

8. கொள்ளிபோல் கொடியர் கூறும் குறைகளை உண்மை எனக் கொள்ளும் புல்லிய நண்பர்களும் உளர்.

9. உயிரான நட்பினரையும் நட்பின் அடையாளமே இல்லாமல் கெடுக்க வல்லவர் போல் கொள்ளி நெருப்பும் இல்லை.

10. குற்றத்தைக் கூறுபவர் பண்புடைய நண்பர் என்றால் அவரே சுற்றமாகக் கொண்டு ஒளிமிக்க வாழ்வு கொள்வாயாக.

77. கெடு நட்பு

1. தக்கார் உணர்த்தவும் தானுணராப் பேதைநேர்
மக்கி மடிந்திடும் மண்.

2. கொள்ளி எடுத்தவன் கொள்ளிக்குத் தப்பாமல்
உள்ளாதல் உண்மை உணர்.

3. வஞ்சனுக்கு வஞ்சன்தான் வாராமல் போகானே
வஞ்சமே வஞ்சன் பகை.

4. உள்ளம் இலாதானுக் குண்டாமோ எப்பொருளும்
உள்ளமே இல்லாப் பொழுது.

5. புன்கோ நிழலாம் புளியோ குழம்புக்காம்
அன்னதை அன்னதாய் ஆக்கு.

6. நெட்டோட்டம் ஓடும் நெறிவெள்ளம் மண்ணரித்
துட்கோட்டம் செய்யா துணர்.

7. சுற்றும் சுழலால்தான் சுற்றுப் புறமெல்லாம்
முற்றும் அழிவாகும் முன்.

8. நேரோடும் வெள்ளத்தால் நேராது தீமையெனின்
நேராம் பகையை நினை.

9. நேர்பகையே நற்பகையாம் நேரா மறைபகையே
நேரஞ்ச வைக்கும் பகை.

10. 'தண்டனைக்குத் தப்பினேன்' என்பான், மனச்சான்றாம்
தண்டனைக்குத் தப்பானே தான். 770

77. கெடுத் தொழிக்கும் நட்பு

1. தக்கவர்கள் சுட்டிக் காட்டியும் உணர்தல் இல்லாத அறிவிலி கண்ணுக்கு நேராகவே மட்கி மடிகின்ற மண்!

2. கொள்ளியை அழிவுக்காக எடுத்தவன் ஒருநாள் அக்கொள்ளிக்கு அவனும் உள்ளாகின்ற உண்மையை உணர்க.

3. வஞ்சம் புரிவானுக்கு வஞ்சம் புரிபவன் வாராமல் போகான். வஞ்சனுக்கு அவன் வஞ்சமே தீராப் பகை.

4. உயர்ந்த எண்ணம் இல்லாதவனுக்கு உள்ள பொருளெல்லாம் உள்ள பொருளோ? அவனுக்குத் தான் உள்ளமே இல்லையே!

5. புன்கு மரம் நிழலுக்கு உதவும்; புளியோ குழம்புக்கு ஆகும்; அவ் வவற்றை அவ்வவ் வகைக்குப் பயன்படுத்தல் ஆக்கம்.

6. நெடிதாக ஓடும் வெள்ளம் நேராகச் செல்லும்; கரையை அரிக்காது; உள்ளேயும் பெரும்பள்ளம் உண்டாக்காது உணர்க.

7. நீரில் உண்டாகும் சுழலால்தான் கரையரிப்படைந்து சுற்றுச் சூழல் அனைத்தும் அழிவாகும் என்பதை அறிக.

8. நேராக ஓடுகின்ற நீரால் தீமை நேராமை எண்ணினால் நேருக்கு நேராம் பகையால் கேடு நேர்ந்துவிடாது என்க.

9. நேராக மோத வரும் பகையே நல்ல பகையாகும்; நேருக்கு வாராத உட்பகை தான் மிக அஞ்ச வைக்கும் பகை.

10. குற்றம் புரிந்துவிட்டுத் தப்பினேன் தண்டனைக்கு என்று எண்ணுபவன், மனச் சான்றுத் தண்டனைக்குத் தப்பான்.

78. நல்லோர் நலம்

1. நல்லோரின் சார்பால் நலமெய்தும் நல்லோரைச்
சார்தலாம் பேறே அது.

2. அருவியைச் சார்ந்தால் அடைகின்ற தண்மை
உருவாவ தன்னார் உறவு.

3. நல்லாரைச் சாரின் நயத்தக்க அன்னாரின்
நல்லவை தாமே யுறும்.

4. நல்லார் சொற்கேட்டல் நானூறு நூற்கல்வி
கல்லாமல் எய்தும் கவிந்து.

5. நல்ல பெரியவர் நற்றுணை பெற்றார்க்குப்
பொல்லாங் கெவையும் புகா.

6. எரியைக் கறையான் அரியா பெரியர்
துணையை அணுகா பிழை.

7. பற்றிய பற்று பெரும்பற்றாய் விட்டாரேல்
மற்றப் பெரியாரே தாம்.

8. பேரா இயற்கைப் பெரியாராய் ஆயபின்
ஆரால் அசைத்திட ஆம்.

9. மலையை அசைக்கும் நிலநடுக்கம் தானும்
மலைக்கும் எனலதன் மாண்பு.

10. தேடி அலையாமல் தேடி வருகின்ற
தெய்வம் பெரியர் தெளி. 780

78. நல்லவர் நட்பால் எய்தும் நன்மை

1. நல்லவர்களைச் சார்தலால் நலங்கள் பலவும் சேரும். அவர்களைச் சார்ந்ததால் அடையும் உயர்ந்த பேறு அது.

2. அருவியை ஒருவர் அணுகினால் அடைகின்ற தண்மையைப் போல் நல்லவரைச் சேர்தலால் உண்டாகிவருவது அது.

3. நல்லவரைச் சார்ந்தால் விரும்பத்தக்க அவர்தம் நற்குணங்கள் நற் செயல்கள் முதலிய எல்லாமும் தாமே வந்து சேரும்.

4. நானூறு நூல்களை அரும்பாடு பட்டுக் கற்கும் கல்விப்பேறுகள் யாவும் கற்காமல் நல்லவரைச் சார்தலால் அடையலாம்.

5. நல்ல பெரியவர்களைச் சார்ந்து நின்று அவர் துணையைப் பெற்றவர்க்குப் பொல்லாத் தன்மை நெருங்கமாட்டா.

6. பற்றி எரியும் நெருப்பைக் கறையான் பற்றாது; அவ்வாறே பெரியவர் துணையாக உள்ளவரைப் பிழைகள் சேரமாட்டா.

7. பெரியவர்களைப் பற்றிக் கொண்டவர்கள் அப்பற்றே பற்றாக வாழ்ந்தால், அவரும் அப் பெரியவரே ஆகி விடுவார்.

8. நிலைபேறமைந்த பெரியவராய் ஆய பின்னர் எவராலும் எவ்வகையாலும் தம் நிலையில் இருந்து அசைக்க முடியாது.

9. தம் நிலையில் உறுதிவாய்ந்த பெரியவரிடம், மலையையும் அசைக்கும் நிலநடுக்கம் தானும் அசைக்காமல் வலியிழந்து போகும்.

10. நாம் தேடிக் காணவேண்டும் என்பது இல்லாமல் நம்மைத் தேடிவருகின்ற தெய்வமே அரிய பெரியவர் என்பது தெளிக.

79. கூட்டுறவு

1. கூட்டுக் குடும்பத்தில் கூடிவரும் நன்மைகள்
கூட்டிப் பெருக்கிக் குறி.

2. கூட்டாக உண்ணும் குணமில்லார் மற்றெவற்றில்
கூட்டாக நிற்பாராம் கூறு.

3. கூட்டுச் சுவையறிந்தே கொண்டார் கறிவகையும்
கூட்டுறவு காட்டும் இது.

4. பொங்கல் சுவையில் பொலிவாகும் கூட்டுறவு
எங்கும் பொலியாத தேன்?

5. உள்ளகம் கூட்டானால் உள்ளவெலாம் கூட்டாகும்
தெள்ளிதில் காட்டும் திரு.

6. பலதுளி வெள்ளமெனும் பாங்கறிந்தார், கூட்டு
நலனறிவார் நண்ணுவார் நன்கு.

7. கூட்டேதான் வெல்லுமெனக் கூறும் கதையேதான்
காட்டெருது நான்கின் கதை.

8. கட்டான குச்சிக் கதைசொல்லும் கட்டமைவு
கட்டாயக் கூட்டுறவே காண்.

9. தாமரைத் தண்டுதரு நூலும் களிறுபிணிப்
பாமதனைக் கேளாமோ பண்டு.

10. உளக்கூட்டே ஊர்க்கூட்டாம் ஒத்த வளக்கூட்டாம்
வாய்த்த பொதுநல வாழ்வு. 790

79. ஒத்த உரிமை – ஒத்தகடமை – அமைந்த வாழ்வு

1. கூட்டுக் குடும்ப வாழ்வினால் சேர்ந்து வரும் நலங்கள் கூட்டுக் கணக்கு, பெருக்கல் கணக்கு என்பவை கடந்த பெரியவை.

2. உண்ணுங்கால் ஒருவர்க்கு ஒருவர் பரிமாறி உண்ணும் தன்மை இல்லாமல் மற்றை எச் செயலில் கூட்டாக நிற்பார்.

3. தொடுகறிவகையுள் ஒன்று கூட்டுக் கறி. அதனைச் சுவைத்து அறிபவர்க்கு அதுவே கூட்டுறவு வாழ்வு காட்டும்!

4. அரிசி பால் நெய் பருப்பு இனிப்பு எனப்பலவும் கூடும் பொங்கல் பொலிந்து விளங்கும் விழாச் சிறப்பே கூட்டுறவு.

5. ஒவ்வொருவர் ஆழ்மனங்களும் கூட்டாக அமைந்துவிட்டால் மற்றை அமைய வேண்டும் அனைத்தும் கூட்டாகிவிடும்.

6. மழைத்துளி குடம்குடமாகவா பொழியும்! துளி, துளி யாகத்தானே பெய்யும். இத்துளிகளே வெள்ளப் பெருக்காம்.

7. நான்கு எருதுகளும் சிங்கமும் என்னும் கதையின் கூட்டுறவே வெற்றி என்பதைக் காட்டுவது அல்லவோ!

8. கட்டாக உள்ள குச்சியை ஒடிக்க முடியாமையும், ஒற்றைக் குச்சியை ஒடிப்பதுமாம் கதை கூட்டுறவின் வலிமைதானே!

9. தாமரைத் தண்டை ஒடிக்க வரும் நுண்ணிய நூல் நூறாயிரம் சேர்ந்தால் மத யானையையும் கட்டிவிடலாமே.

10. உள்ளத்தால் கூடினால் ஊரே கூட்டாகும்; ஒத்த வளமான கூட்டுமாம்! நலவாழ்வுச் சான்றாவது கூட்டுறவேயாம்.

80. கூட்டுக்குறை

1. கூட்டுத் தொழிலின் குறைபாடு நாட்டுப்
பொதுமையின் கேடாய்ப் புரி.

2. கன்றீன் இளங்கொடியைக் கால்மரத்தில் கட்டுதல்
ஒன்றே பொதுக்கேட்டுச் சான்று.

3. தனியார் வணிகம் தளராமல் ஓங்கல்
இனியோ அறிய வரும்?

4. அரசினர் பேருந் தழிமானம் தானே
முரசாம் தனியாருந் துக்கு.

5. கூட்டுற வாலையொடு கூட்டுற வங்காடி
நாட்டுசீர் என்ன நவில்?

6. எல்லாம் இழப்பென்றால் ஏய்ப்பாரும் மேய்வாரும்
சொல்லாச் சுரண்டல் சொலும்.

7. உச்சி கரவானால் உள்ளங்கால் தானேதான்
மெச்சிக் கொளாதோ மிக.

8. தனியார் துணிக்கடையில் தாவிவர வேற்கும்
இனிமையதை இங்கிழப்ப தேன்?

9. நூறுவகை காட்டி நுவன்றொன்றை எப்படியும்
பேறுவகை செய்திடல் பார்.

10. கூட்டுறவின் வீழ்வில்லை கூட்டழிப்புக் கொள்ளையே
நாட்டுவதாம் நாட்டுக்குக் கேடு. 800

80. ஒற்றுமையும் - ஒத்துணர்வும் - இல்லாத குறை

1. பலர் தொடங்கிய தொழில், நலமும் வளமும் நிலைபேறும் அடையாமையே நாட்டுப் பொதுப்பணிக் கேடாயிற்று.

2. இளங்கொடியைப் பொதுமரமாம் ஆலமரத்தில் கட்டுகின்ற ஒன்றே நம் பொது நலக் கேடுகளின் சான்றாம்.

3. தனியார் செய்கின்ற எல்லாவகை வணிகங்களும் எத்தளர்ச்சியும் இன்றி வளர்தலை இனிமேலா அறிய வேண்டும்?

4. அரசுப் பேருந்துகளில் நடக்கும் அழிமானச் செயல்கள் தாமே தனியார் பேருந்துகள் வளங் கொழிக்க முரசங்களாம்.

5. கூட்டுறவு ஆலைகள், தொழிற்சாலைகள், அங்காடிகள் ஆகியவற்றை நோக்க நாட்டுக்கு வளம் சேர்க்கின்றனவா?

6. எல்லாம் பொருள் இழப்பாக நடந்தால் ஏய்ப்பவரும் மேய்வாருமாய்ச் சுரண்டல் தானே!

7. உச்சிப்பதவியில் உள்ளவர் சுருட்டுபவர் என்றால் உள்ளங்கால் வரை உள்ளவர் சுருட்டுவார் அல்லரா?

8. தனியார் துணிக்கடையை நெருங்குமுன்னரே வரவேற்கும் செயலைக் கூட்டுறவு இழப்பது எதனால்?

9. தனியார் கடையில் நூறுவகை காட்டி எப்படியும் ஒன்றை எடுத்துச் செல்லச் செய்வதைப் பார்க்க.

10. கூட்டுறவுப் பண்பாட்டின் கேடு இல்லை இது. கூட்டாகக் கூடி அடிக்கும் கொள்ளையே ஈதென நாட்டுக்குக் கூறுவதாம்.

ஒன்பதாம் நூறு

81. தாய்மை - 1

1. வாயடக்கம் வாய்த்தார், வளமார்ந்த நல்லுளத்தர்
தாயடக்கம் தாங்கினோர் தாம்.

2. பிள்ளை கருவுள் பிறங்கிய போதுமுதல்
கொள்வதாம் நோன்புக் குறி.

3. உண்ட பழக்கம் உடனாய் வருபழக்கம்
அண்டாத நோன்பினர் ஆய்.

4. பட்டுணி யாய்க்கிடந்தால் பாவம் மகப்பசிக்காய்
விட்டுணார் வேண்டும் பொழுது.

5. தம்நோய்க்குத் தாமுண் மருந்ததனை விட்டாலும்
மன்மகவுக் காக மறார்.

6. உயிரொன்று தாங்கும் உவகைப் பெருக்கால்
உயிர்மூன்றாய் நின்றார் உணர்ந்து.

7. காலடி வைத்தாலும் கைப்பணி செய்தாலும்
மேலுள தந்த வுயிர்.

8. பெற்றவெலாம் பெற்றாராய் ஆக்குமோ நன்மகவு
பெற்றாலே பெற்றவ ராம்.

9. பட்ட துயரெல்லாம் பன்மடங் கின்பமாய்க்
கிட்ட வருவதச் சேய்.

10. சேயால் பெறுமின்பம் சேணுலகில் கண்டாரார்,
தாயே அறிவர் தக. 810

81. தெய்வ வடிவமாம் தாய்மைத் தன்மை

1. சொல்லடக்கமும் சுவையடக்கமும் அமைந்தவர் நல்ல உள்ளத்தவராம். அவர் தாய்மையின் அடக்கம் கொண்டவர்.

2. தாய் தம் வயிற்றில் கருத் தாங்கியது முதல் நாவடக்கத்தை நோன்பாகக் கொண்டவர் என்பதை அறிக.

3. முன் உண்ட பழக்கம், குடும்பவழிப் பழக்கம் சேய்க்கு ஆகாது எனின் கொள்ளாமல் விலக்கும் உறுதியாளி தாயாம்.

4. உண்ணாது பசித்துக் கிடந்தால் உதவாது கருவுக்கு என்று உரிய பொழுதில் உண்ணத் தவறாதவர் தாய்.

5. தம் நோய்க்கு வேண்டும் மருந்தைத் தவிர்த்தாலும் தம் மகவுக்காக உண்ணும் மருந்தை மறவாது உண்பவர் தாய்.

6. உயிர் ஒன்றனைத் தாங்குவதால் தாம் தம்துணை தம்மகவு என்னும் மூன்று உயிர்களையும் தாங்குபவர் அவர்.

7. நடக்கும் போதும் கையால் பணி செய்யும் போதும் கருவின் மேலேயே உயிரைக் கொண்டுள்ளார் தாய்.

8. எவ்வெவற்றைப் பெற்றாலும் பெற்றவர் என்னும் பெருமை பெறார். நல்ல மகவைப் பெற்றவரே பெற்றவர் எனப்படுவார்.

9. கருக் கொண்ட காலமுதல் வாந்தி மயக்கம் வலி எனப்பட்ட துயரங்கள் அனைத்தும், இன்பமாக்க வருவது அம்மகவு.

10. பெற்ற மகவால் தாய் பெற்ற இன்பம் வீடு பேற்றின்பம் என்பதில் உள்ள தெனக் கண்டவர் எவர்? தாயேயாம்.

82. தாய்மை – 2

1. தம்முயிர் இன்னுயிர் இன்னோர் உருவத்தில்
முன்னிற்றல் இன்ப முளை.

2. ஆடி அரவணைத் தானந்த முத்தத்தில்
பாடித் திளைக்கும் பழம்.

3. மழலை பொழியும் குழலாம் அமிழ்தப்
பொழிலில் குளிர்வர் புகழ்ந்து.

4. தத்தித் தடுமாறித் தாளெடுத் தூன்றிடும்
தித்திப்புக் குண்டோ இணை.

5. கையில் கனியாய்க் கவின்செல்வ வார்ப்படமாய்
மெய்யில் தவழும்ஏ மாப்பு.

6. உலக வளத்தை உயிர்த்தாக்கி வந்த
இலகும் கொடையிவ் எழில்.

7. தின்னாமல் தின்ற சுவையெல்லாம் சேர்த்தளிக்க
மன்னு கனியே மகவு.

8. பெற்றோரைப் பண்படுத்தப் பேறாக வாய்த்திடப்
பெற்றதே மக்களாம் பேறு.

9. பிள்ளையால் பெற்றோரும் பெற்றோரால் பிள்ளையும்
கொள்ளும் புகழே குடும்பு.

10. பிள்ளை வளமே பிறங்கும் உலகவளம்;
கொள்ளுவார் குன்றா வளம். 820

82. தாய்மைப் பேற்றுயர்வு

1. தம் இனிய உயிரே இன்னோர் உயிராக வேறோர் உருவத்தில் முன்னிற்றலைக் காணும் இன்பம் வீட்டின்பத் தோற்றமாம்.

2. தாம்பெற்ற மகவைத் தலையும் கையும் கண்ணும் ஆட ஆட அள்ளி அணைத்து முத்தம் தந்து மகிழ்பவர் தாயாம் கனி.

3. தாம் பெற்ற பிள்ளை மொழியும் மழலைக் குழலிசை யமிழ்தில், அமிழ்தச் சோலையில் தம்மைமறந்து குளிர்பவர் தாய்.

4. குழந்தை தவழ்ந்து நிமிர்ந்து தலையெடுத்து நடையிடும் தித்திப்புக்கு உலகில் ஏதாவது இணை உண்டா?

5. கையில் கனியாகவும் இயற்கை வார்ப்பாகவும் வாய்த்த குழந்தை, உடலில் தவழுங்கால் உண்டாம் பெருமிதம் பெரிது.

6. உலக வளங்களை யெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஓர் உயிராக்கி வந்து விளங்கும் கொடையே தாய்க்கு அவ் வழகிய குழந்தை.

7. பண்டங்கள் பழங்கள் வாங்கித் தின்னாமல் அவற்றின் சுவையெல்லாம் தாய்க்கு வழங்க வந்த தெய்வக் கனியே மகவாம்.

8. பெற்றோர் வாழ்வினைப் பண்படுத்த வாய்த்த பேறே மக்கட் பேறாம் பெறுதற்கரிய பேறு.

9. பிள்ளையின் சிறப்பால் பெற்றோரும், பெற்றோரின் சிறப்பால் பிள்ளையும் பெறும் புகழ்நிலையமே குடும்பம்.

10. பிள்ளையைப் பெற்ற பேறு, உலக அளவில் விளங்குமானால் அக்குடும்பம் குறையா வளமுடையதாம்.

83. காதல் வாழ்வு

1. களவுப் பொழுதில் கனிந்தீர் குனிந்தீர்
அளவளாவி நின்றீர் அணைந்து.

2. உயிரே உயிரின் உயிரே எனலை
மயிராய்க் கழித்தீர் மணந்து!

3. ஒற்றைக்கால் கொக்காய் ஒருநோக்கில் நின்றதனைச்
சற்றேனும் எண்ணீரோ சார்ந்து?

4. பிரியேன் பிரியின் தரியேன் எனலைப்
புரியீரோ பின்னே புணர்ந்து?

5. ஓடி உதவினீர் ஒன்றுயிராம் என்றானீர்
கூடினீர் ஓடினீர் இன்று?

6. மணவிலக்கு வேண்டி மறுதலையாய் நிற்றல்
இணங்கா இணக்கத்தின் சான்று!

7. பருவத்தின் கேடாய்ப் பழித்தால் புரியீர்
வருமான நோக்கும் அது!

8. பழஞ்சேறாய் எண்ணிப் பழிக்குளத்தில் வீழ்ந்தால்
கழங்காடி நிற்பளோ காண்?

9. இரட்டைச் சிறகினில் ஒன்றொடித்து மேலே
தரமாய்ப் பறப்பையோ தான்?

10. எத்தால் இயல்வாழ்க்கை எய்தும் எனவினவின்
ஒத்தால் உயர்வாழ்வாம் ஓர்! 830

83. காதல் மணங் கொண்டவர் வாழ்வு

1. *களவுக் காதலராக ஒருவருக்காக ஒருவர் என விளங்கினீர்! பணிந்தும் தணிந்தும் அளவளாவிக் கூடினீர்!*

2. *மணங் கொண்ட பின்னர் என்ன ஆயின? உயிரின் உயிரே என்று சொல்லியதை உதிர் முடியாக உதறியது ஏன்?*

3. *ஒரே நோக்கில் மீனைக் கவரநிற்கும் கொக்கு ஒற்றைக் காலால் நிற்பது போல் நின்றீரே! அதை, மணந்த பின் நினைத்தீரா?*

4. *உன்னைப் பிரிய மாட்டேன்; பிரியின் உயிரோடு இரேன் என்றதை மணந்த பின் எண்ணவே மாட்டீரோ?*

5. *ஒருவருக்கு ஒருவர் ஓடி ஓடி உதவினீர்! நம் உயிர் இரண்டில்லை, என்றீர்! பின்னர் விலக்குப்பெற ஓடினீர் ஏன்?*

6. *மணந்துகொண்டு காதலுக்கு மாறாக நிற்பது காதலிக்கும் போது உளக் காதலாக இல்லாததன் சான்று தானே!*

7. *பருவத்தின் கேடென்று பழித்துக் கூறினால் புரியீர்! அது பொருள் நோக்கும் உடனிருந்ததே யாம்.*

8. *காதலித்தவன் காதலித்தவளைச் சேறாக எண்ணிப் பழிக் குளங்களில் நீராடினால், கழங்காடுதல் போல் மகிழ்வளோ?*

9. *இரு சிறகுப் பறவையாய்ப் பறக்கும் நிலையில், ஒற்றைச் சிறகை ஒடித்துவிட்டு மேலுயரப் பறப்பாயோ!*

10. *எப்படி இருந்தால் நல்வாழ்க்கை என வினாவினால், ஒருவருக் கொருவர் ஒத்து வாழ்வதே உயர் வாழ்வாகும்!*

84. வாழ்க்கைத் துணை

1. சம்பளத்தில் பங்குண்டு சாப்பாட்டில் பங்குண்டாம்
ஆக்குவதில் பங்கில்லை ஏன்?

2. ஆக்கப் பழகவில்லை என்றால், அடுத்திருந்து
ஆக்கப் பழகல் அறம்.

3. ஊணகம் போனால் உணவாக்கு வாரவரும்
ஊண்படைப்பார் ஆவாரும் ஆர்?

4. மணவிருந்தைப் பார்ப்பார் மடைப்பள்ளி பார்ப்பார்
உணர்வாய்நீ உண்மை யுற.

5. வயிற்றில் சுமந்தாளை எண்ணிக் குழந்தையைத்
தோளில் சுமந்தாயேல் என்?

6. சுமைதாங்கி யாவோ அவள்வந்தாள்? காவுச்
சுமைதாங்கிப் போவானைச் சூழ்.

7. செலவிடலில் சேமிப்பில் செய்செயலில் எல்லாம்
இலதோ இருவர்க் கிணைப்பு.

8. இருதலை ஓருடற் புள்ளாகச் சொன்ன
அருமை இருவர்க்கும் ஆம்.

9. ஒருவன் எனாமல் ஒருத்தி எனாமல்
ஒருவராய் ஒன்றல் உயர்வு.

10. தம்மில் இருந்து தமதுபாத் துண்டன்ன
தம்மாண் அறமாம் அறி. 840

84. இல்வாழ்வில் ஒருவருக்கு ஒருவர் துணை

1. வருவாயில் பங்குண்டு; உண்பதிலும் பங்குண்டு; உணவாக்குவதில் கணவன் பங்கு உண்டா? ஏனில்லை?

2. ஆக்குவதற்குப் பழக்கம் இல்லை என்றால் மனைவியை நெருங்கி ஆக்குவதைக் கண்டு ஆக்குவது கணவன் அறம்.

3. உணவு விடுதிக்குப் போகிறோம்; ஆங்கு ஆக்குபவர் ஆடவர்! படைப்பவரும் ஆடவர்! இதை எண்ணலாகாதா?

4. மணவிருந்து ஆக்குபவரும், கோயில் மடைப்பள்ளிகளில் ஆக்குபவரும் ஆடவரே என்பதைக் கண்ணேரில் காண்.

5. நீ தந்ததால் ஆய மகவை வயிற்றிலே சுமந்தவள் மனைவி அவள் தந்த குழந்தையை நீ தோளில் சுமந்தால் என்ன?

6. அவள்மட்டும் சுமைதாங்கிக் கல்லாகவா வந்தாள்? காவடியைத் தாங்கிச் செல்பவனைக் காண்.

7. குடும்பத்திற்குச் செலவிடுதல் முதலிய எல்லாவற்றிலும் வாழ்க்கைத் துணையாம் இருவர்க்கும் ஒப்பு இல்லையா?

8. இரண்டு தலைகளையுடைய ஓருடல் பறவை போன்றவர் என்ற அருமைமொழி இருவர்க்குமே ஆம்.

9. ஒருவன் எனத் தனியாமல், ஒருத்தி எனத் தனியாமல், ஒருவர் என இணைப்பாக ஒன்றி வாழ்தலே உயர்வாழ்வாம்.

10. தாம் கட்டிய வீட்டில் தம் வருவாயைக் கொண்டு பகுத்துண்ணல் போன்றது இல்வாழ்வாம் அறம் என்றறிக.

85. வளர்ச்சி

1. குழந்தைப் பருவத்துக் கொண்டிருந்த தன்மை
வளர்ந்தபின் எண்ண வரும்.

2. இன்பம் விரும்பலும் துன்பம் வெறுத்தலும்
அன்றை அமைந்த அமைவு.

3. வளர்ந்தநாள் பின்னரும் வாழ்வில்அத் தேட்டம்
வளர்வ தழகோ வரைந்து.

4. தொட்டாற் சுருங்கி துலங்குவினை ஏற்றானேல்
கெட்ட தவன்றன் கிளை.

5. ஊட்டி உணவுண்டான் என்றும் அதுகொண்டால்
மூட்டுதீ யாகும் முடிவு.

6. உறங்கி வளரும் சிறுகுழந்தை என்றும்
உறங்கியே ஆயின் உணர்?

7. குடிதாங்க வல்லான் குதியாட்டம் போடான்;
மடியா துழைப்பதே மாண்பு.

8. புழுவாய் நெளிவான் புறவாக மேலே
எழுவானோ என்றுமே எண்!

9. காளைபோல் வீறிக் கடனாற்ற வல்லானே
வேளாக நின்றானாம் வென்று!

10. வெள்ளம் தடுக்கும் அணையாக நிற்பானை
உள்ளவே உள்ளுள் உவப்பு. 850

85. நாளும் வளரும் நல்ல நிலை

1. குழந்தை நிலையில் கொண்டிருந்த குறைபாடுகள் எல்லாமும் வளர்ந்த நிலையில் எண்ணின் தெளிவாக விளங்கும்.

2. ஒவ்வொரு பிறவியும் இன்பத்தை விரும்புவதும் துன்பத்தை வெறுப்பதும் இளமையில் இருந்தே அமைந்தனவாம்.

3. வளர்ந்து சிறந்து விளங்கும் பருவத்திலேயும் அக் குணங்களே அமைந்து வளர்வது அவ்வளர்வுக்கு அழகாகுமா?

4. தொட்டாற் சுருங்கிபோல் வாடுபவன் உயர்ந்த செயலை ஏற்றுச்செய்தால் அவன் உறவும் கெடும்.

5. எடுத்து ஊட்ட உண்டவன் என்றும் ஊட்டு பிள்ளையாகவே வாழ்ந்தால் காட்டை எரிக்க மூட்டிய தீயை ஒப்பதாம்.

6. குழந்தைப் பருவத்தில் உறக்கம் மிகத் தேவை; குழந்தை வளர உதவும் அவ்வுறக்கமே பின்னரும் கொண்டால் வாழ்வாமா?

7. குடியை மேலெடுக்கும் குறிக்கோள் உடையான் வேண்டாத ஆட்டம் போடான். உழைப்பதே குடிமாண்பாம்.

8. சேற்றுப் புழுப்போல உழல்பவன் விண்ணில் பறக்கும் புறாவைப் போல மேலே பறப்பானோ? எண்ணிப் பார்!

9. பீடு நடையிடும் காளை போல் வீறுமிக்க கடமை புரியும் வல்லமை யுடையானே, வேலனாக நின்றவனாம்!

10. வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும் அணையைப் போல் இடர் தடுத்து நிறுத்துபவனை நினைக்கவே மகிழ்வாம்.

86. குடும்பம்

1. தாயாரைத் தெய்வமாய்த் தாங்குவான் தாயாகத்
தன்பால் வருவாட்கேன் தாக்கு.

2. கண்ணே மணியே எனக்கொஞ்சும் தன்மகவைத்
தந்தாளைப் புண்படுத்தல் ஏன்?

3. பெண்ணின் பெருமை பிதற்றிப் பிறகவளை
மண்ணில் புதைப்போ மணம்?

4. திட்டும் வசையும் தீரா அவலமுமே
கொட்டத்தான் கொண்டாயோ மன்று!

5. பெண்ணென்றால் பேயும் இரங்குமெனப் பேசினார்
எண்ணாயோ பேயிற்பேய் ஆய்.

6. எங்கோ பிறந்தவள் எங்கோ வளர்ந்தவள்
இங்குன்னை நம்பிவர லேன்?

7. பெண்ணைப் படுத்துவாள், பெண்ணாய் இருந்ததை
எண்ணியும் பாராமை என்?

8. தன்மகட் கின்னலேல் தாங்காதாள் என்னிவட்குக்
கொள்ளியாய் வாய்த்தாள் கொடிது.

9. மருமகளைப் போற்றாத மாமியை எந்த
மருமகளும் ஏற்பளோ எண்?

10. நீசெய்யும் கேடே நினைஎய்தும் போழ்தத்தில்
ஓவென் றழுவாய் உணர். 860

86. பெற்றோரும் மக்களுமாய்ப் பெருகிய குடும்பம்

1. தாயைத் தெய்வமாக வணங்கும் பண்பாடுடையவன் குடும்பத்துக்குத் தாயாக வந்த மனையாளைத் தாக்குவதேன்?

2. கண்ணே! மணியே! என்று உவந்து உவந்து கொஞ்சும் மகவைத் தந்தவளைப் புண்படுத்திப் புலம்பியழச் செய்வது ஏன்?

3. பெண்ணின் பெருமையைப் பலவாகப் போற்றி அவளை வெறிகொண்டு தாக்கி அழிக்கவோ மணந்தாய்?

4. திட்டுதற்கும் பழித்தற்கும் நீங்காத் துயருக்கும் ஆளாக்கத் தான் மணவாளன் எனக் கோலம் கொண்டாயோ?

5. பெண்ணென்றால் பேயும் இரங்கும் எனப் பேசுவதை எண்ணாயோ? பேயினும் பேயன் நீ?

6. எவ்விடத்தோ பிறந்தவள்? எவ்விடத்தோ வளர்ந்தவள்? இங்கே உன்னை நம்பிவந்தாளே ஏன்? எண்ணிப்பார்!

7. பெண்ணொருத்தியாம் மருமகளை மாமியாள், பெண்ணாகத் தான் இருந்ததை எண்ணாது கொடுமை செய்தல் ஏன்?

8. தன்மகளுக்குப் புகுந்த வீட்டில் சிறியதோர் துயர்ஏற்பட்டாலும் தாங்காதவள் மருமகளுக்குக் கொள்ளியாகவோ வேண்டும்?

9. மருமகளைப் போற்றித் தாய்போல் காக்காதவளை எந்த மருமகள்தான் மாமியாக ஏற்றுக் கூடியிருப்பாள்?

10. நீ முன் செய்த கேடே உன் முதுமையில் உனக்குத்திரும்பி வரும்போது ஓவென்று அழநேரும் என்பதை உணர்.

87. தற்கேடு – 1

1. தன்னைத்தான் நோய்க்காக்கித் தானழிதல் ஆவானை
என்னைத்தான் காப்ப தெது?

2. தானென்னும் செம்மாப்புத் தன்தலையில் கொண்டானை
ஏனென்று கேட்பார் எவர்?

3. பட்ட மரத்தில் பறவை இருந்தாலும்
சுட்டெரியும் போதுண்டோ சொல்?

4. எரிச்சல் விதைத்தால் எரிச்சலை அன்றித்
தெரிக்கும் விளைவுண்டோ தேர்!

5. தேடிப்போய்ச் சண்டை தெரிந்திடுவார் தம்மையார்
கூடிப்போய் நிற்பார் குளிர்ந்து?

6. நாகாக்க மாட்டாமல் நாளும் பழிப்பானை
யாகாக்கும் தேடி அணைந்து.

7. ஊரெல்லாம் தூற்றித் திரிவானைக் காப்பாற்ற
யாரெல்லாம் முன்வருவார் முந்து.

8. வஞ்ச வடிவாய் வலம்வந்து போவானை
எஞ்ச விடுவார் எவர்?

9. வீட்டுக்கும் ஆகாத வீண்பிறப்பைக் கூட்டுக்குக்
கொண்டிருப்பார் உண்டோ குறி.

10. தானே கெடுவானைத் தக்கோர் எவர்தாமும்
வானாய் உயர்த்தார் வரிந்து. 870

87. தன்னைத் தானே கெடுக்கும் கேடு

1. நல்லுடல் பெற்றும் தன்னைத் தானே நோயனாக்கித் தன்னழிவைத் தானே ஆக்கிக் கொள்வானை எதுதான் காக்கும்?

2. தான் என்னும் செருக்கு தன்தலையிலே கொண்டவனை, அணுகி 'என்ன'? என்று ஏதாவது கேட்பவர் இருப்பரோ?

3. பட்டுப் போன மரத்தில் பறவை தங்கி இருந்தாலும், அம்மரம் சுட்டெரியும் போதில் எப்பறவையாவது நெருங்குமா?

4. எரிப்பது போல் சொல்லும் செயலும் வித்தாகக் கொண்டவன், எரிச்சலைத் தானே விளைவாகக் கொள்வான்.

5. வலியப் போய் வாய்ச் சண்டை கைச் சண்டை செய்வாரை எவர் தாம் குளிர்ந்து போய்க் கூடி நிற்பார்?

6. கொடுமையும் கடுமையுமாய், எவரையும் பழிக்கும் நாவனை எதுதான் நெருங்கிக் காக்கும்?

7. ஊரெல்லாம் பழிதூற்றித் திரிபவனைக் காப்பதற்கு, ஊரில் எவர் ஒருவர் முன்வருவார்?

8. வஞ்சமே உருவாகக் கொண்டு எங்கெங்கும் திரிபவனை உயிரோடு இருக்கத் தானும் விட்டுவைப்பரோ?

9. பிறந்த வீட்டார்க்கே ஆகாத பயனற்ற பிறப்பினை நட்பாகக் கொண்டிருப்பார் எவரேனும் உண்டா?

10. தானே கெட்டுப் போகின்றவனைத், தக்கோராய் இருப்பார் எவர் முயன்றாலும் மேலோனாக உயர்த்தி விட மாட்டார்.

88. தற்கேடு – 2

1. தம்மறி வில்லாமல் தாம்கெட்டார் தம்கேட்டைச்
சாற்றுவார் மற்றையார் மேல்.

2. தம்மால் கெடுதி நிகழ்ந்ததென ஒப்பாதார்
என்றும் திருந்தல் இலர்.

3. தீக்குள் விழுவதே தீர்வெனக் கொண்டார்க்குத்
தீர்வேதும் இல்லை தெளிவு.

4. துன்பம் வருமுன்னே துள்ளித் துடிப்பாரை
இன்பத்தில் வைப்பார் எவர்?

5. துன்பமே இன்பமாய்க் கொண்டாரை எந்தவொரு
துன்பம்தான் துன்பம் செயும்?

6. வேம்பும் சுவைத்துண்ணும் வேட்கையர் கொள்வாரோ
தீம்பாம் இனிப்பென்னும் நோய்.

7. தற்கேடர் என்பார் தடிப்பாக வாழ்வாரின்
முற்கேடர் என்னல் முறை.

8. குற்றம் அறிவார் குணமறிவார் என்பதே
முற்றறிந்த பேர்தம் மொழி.

9. தம்முடலைத் தாம்கெடுப்பார் தம்முதலைத் தாமிழப்பார்
தம்முடலின் தக்கமுதல் இல்.

10. இழந்த பொருள்முதலை ஈட்டலாம் ஆனால்
இழந்த உடல்முதல் என்? 880

88. தன்னைத் தானே கெடுக்கும் கேடு

1. தமக்கு இருக்கவேண்டும் அறிவு இல்லாமல் கெட்டவர், தாம் கெட்டதற்குக் காரணம் மற்றவர்கள் என்று பறையறைவார்.

2. தம் அறியாச் செயலால் தமக்குக் கேடு உண்டாயது என்பதை ஒப்புக் கொள்ளாதவர் என்றும் திருந்த மாட்டார்.

3. கொழுந்து விட்டு எரியும் தீயினுள் விழுந்து சாவதே முடிவு என்று கொண்டவர்க்கு வேறு தீர்வு எதுவும் இல்லை.

4. துன்பம் வருவதற்கு முன்னரே வந்து விட்டதாகக் கொண்டு துடிப்பவரை இன்பத்தில் வைக்க எவராலும் இயலாது.

5. தீராத் துயரையும் தாங்கி இன்பம் போல் கொள்ளும் திறமும் தகவும் உடையவரை எத்துன்பமும் துன்பம் செய்யாது.

6. வேப்பங்காயையும் சுவையாகக் கருதி உண்ணும் ஆர்வமுடையவர் கெடுக்கும் இனிப்பு நோய்க்கு ஆட்படார்.

7. தனக்குக் கேடு தானே ஆக்குவார் என்பவர், செருக்காக வாழ்வார் கேடடைதற்கு முன்னரே கேடு அடைபவர் ஆவர்.

8. முழுதுற அறிந்தவர் என்பவர், ‘குற்றம் அறிய வல்லாரே குணமும் அறிய வல்லார்’ என்று தெளிந்து கூறியவராம்.

9. தம் உடலைத் தாமே கெடுப்பவர் தம் அரிய செல்வத்தை இழப்பவராம். உடலைப் பார்க்கிலும் உயர் செல்வம் எது?

10. இழந்த பொருள் முதலை ஒன்றுக்குப் பத்தாகத் தேடிக் கொள்ளலாம். ஆனால் உடலாம் முதலை இழந்தால் என்னாவர்?

89. தற்கொலை

1. வாழ்வு வெறுப்பால் உணர்வு வயப்பட்டோர்
பாழ்வழி தற்கொலை யாம்.

2. சாவாமல் தாங்கிவரு சாவுக்குச் சாவாக்கி
வாழ்வதே வாழ்வார் வழி.

3. பக்கம் சிறிதேனும் பாராமல் எண்ணாமல்
புக்க கொலையே அது.

4. நொடியளவும் எண்ணார் நொடிப்பில் முடிதல்
கொடியதில் மிக்க கொடிது.

5. இடையூற்றைத் தாங்கி எழுச்சியால் வீறித்
தடையுடைக்கும் தாளாண்மை கொள்.

6. தன்னில் துயரரும் தாம்வாழக் காண்பவன்
இன்னது செய்வானோ எண்.

7. உணர்ச்சி வயப்பட்டால் ஊக்கம் ஒழிவாம்
சுணங்கா திழுக்கும் சுழல்.

8. வென்றுநான் காட்டுவேன் என்னும் விழுமியத்தை
ஒன்றினார் ஒன்றார் கொலை.

9. காதலின் தோல்வி கடிதேகும் தொண்டுசெயும்
காதல ராகி விடின்.

10. மானக் குறையென மாய்வார்தாம் மாயாத
மானியாய் நிற்றல் மதி. 890

89. தன்னைத்தானே அழித்துக் கொள்வது

1. வாழ்வில் ஏற்பட்ட வெறுப்பினால் உணர்ச்சி வயப்பட்டவர் கேடான வழி தற்கொலை என்பதாம்.

2. தாம் சாவாது துணிவாக நின்று தமக்குவரும் சாவுக்குச் சாவுதந்து அதன்மேல் பெருகி வாழ்வதே வாழ்வார் வழி.

3. தற்கொலை செய்வது தம்பக்கத்தில் வாழ்பவர் துயருண்டும் துலக்கமாக வாழ்வதை அறியாது போவதால்தான்.

4. நொடிப் பொழுது அளவு எண்ணிப் பார்த்தாரேல் தற்கொலை செய்யார். நொடிப் பொழுது கூட எண்ணாத கொடுமை அது.

5. வரும் இடையூறுகளைத் தாங்கி வெற்றி நடையுடன் தடைகளை உடைக்கும் முயற்சிகளை மேற்கொள்க.

6. தம்மினும் துயரம் வறுமை முதலியவற்றை யுடையவரும் வென்று வாழக் காண்பவன் தற்கொலை புரியான்.

7. திடுமென உணர்ச்சி வயப்பட்டால் ஊக்கம் ஒழிந்து போம். அந்நிலையில் தற்கொலைச் சுழல் இழுத்துக் கொள்ளும்.

8. நான் வீழமாட்டேன்; வெல்வேன்; என்னும் உயர் எண்ணம் கொண்டவர் தற்கொலை புரியார்.

9. காதலில் தோற்றுவிட்டவர், தொண்டின்மேல் காதல் கொண்டு விட்டால் தற்கொலை ஒழிந்து போகும்.

10. மானக்கேடு எனக் கருதித் தற்கொலை செய்பவர், அம் மான வாழ்வு வாழ்ந்து, வெற்றியராய் விளங்க வேண்டும்.

90. தற்கொடை

1. எண்ணினார் தற்கொலையே தற்கொடையாம் ஈகமாம்
எண்ணார் கொலையே கொலை.

2. மாற்றாரின் கையின்கண் மாட்டாமல் மாண்புறுவார்
ஏற்ற கொடையே இது.

3. புதைத்த சவமாகப் போயொழிதல் இன்றி
விதைத்த விதையாம் அவர்.

4. தற்கொடையர் தன்னினம் காத்தற்கு முற்படுவார்
மூண்டு செயலாம் அது.

5. சாக்காட்டை வீடாகச் சான்றோடு மெய்ப்பிக்கும்
நோக்கோடு கொண்ட நெறி.

6. கூற்றத்தை வெல்லும் குறிக்கோளில் விஞ்சினார்
போற்றும் நெறியாய்ப் புகழ்.

7. கோழைகள் கையில் கொடுமையாய்ச் சிக்காமல்
வீழாமல் வீழ்வார் விழா!

8. வடக்கிருத்தல் உண்ணாமல் வாட்டி ஒடுக்கமுறல்
பண்டையோர் கொண்ட முறை.

9. தன்தலையைத் தானே அறுத்துக் கொடுத்தலும்
முந்தை வழக்கென முன்.

10. தற்கொடை வேறாகும் தற்கொலை வேறாகும்
நிற்கும் எதிராய் நினை. 900

90. தம் கடமை உணர்ந்து உயிரைத் தருபவர்

1. இதுசெய்தலே நன்று என்று எண்ணித் துணிந்து தம் உயிரைக் கொடையாகக் கொடுப்பவர் தற்கொடையர் ஆவார்.

2. பகைவரின் கையில் சிக்காமல் தாமே தம்மை இறப்புக்கு ஆட்படுத்திக் கொள்பவர் கொடையாகும் இது.

3. இறந்தபின் புதைக்கப்படும் பிணமாக இல்லாமல், பின்னை விளைவு வேண்டி விதைக்கப்படும் விதை அனையர் இவர்.

4. தம் இனத்தைப் பகை இனத்தில் இருந்து காத்துக் கொள்ள இனமான வீறு உடையவர் செய்யும் செயல் தற்கொடை.

5. எமக்குச் சாவுதான் வீடுபேற்றின்பம் என ஏற்றுக் கொண்டவர் செய்யும் செய்கை அத் தற்கொடை.

6. கூற்றத்தை எதிர்த்து வெற்றி கொள்ளும் குறிக்கோள் மிக்கவர் விரும்பிச் செய்யும் செயல் தற்கொடை.

7. நேரற்ற கோழைகளின் கையில் சிக்கிக் கொடுமைப் பட்டு அழியாமல் தாமே அழிய நேரும் வெற்றிவிழா அது.

8. வடக்கிருத்தலும் உண்ணா நோன்பு கொண்டு இறத்தலும் புதுமுறை அன்று; பண்டைத் தமிழர் முறையாகும்.

9. தன்தலையைத் தானே அறுத்துக் கொடுத்தலும் முந்தைய வீரர் முறையாக இருந்தது உண்டு.

10. தற்கொலை என்பது கோழையர் செயல்; தற்கொடை என்பது வீரர் செயல்; என வேறுபாடு கண்டு கொள்க.

பத்தாம் நூறு (அ) ஆயிரம்

91. குடியரசு

1. குடியர சாக்கக் கொடுத்தகொடை என்ன
குடியரசால் கண்டபயன் என்?

2. அயற்கொள்ளை போகி அடியாள் அரசால்
பகற்கொள்ளை எங்கேயும் பார்.

3. நெற்கொழித்த பொன்னி நிலைமாறிப் பொற்கொள்ளை
என்ன மணற்கொள்ளை யாம்.

4. அயல்நாட்டு மாசாலை எல்லாம் முயலாகத்
துள்ளிவரச் செய்த தரசு.

5. இலவசக் கேட்டால் இழந்த உழைப்பை
நிலவிவரச் செய்வதெவ் வாறு?

6. கல்வியில் கொள்ளை தொழில்பெறக் கொள்ளை
அலுவலகக் கொள்ளை அரசு.

7. நல்லோர் நடுக்கமுற அல்லோர் களித்தாடச்
சொல்லாமல் செய்யும் அரசு.

8. அயலாட்சி மேலென்றே ஆக்கத்தான் வந்த
மயலாட்சி இவ்வாட்சி யாம்.

9. கட்சி அரசியலும் சாதி அரசியலும்
ஒட்டி உறவாகும் ஒத்து.

10. வாக்குக்கு வாரி வழங்குவதை வாடிக்கை
ஆக்கியது மக்கள் அரசு. 910

91. மக்களே மக்களை ஆளும் ஆட்சி

1. விடுதலை பெற்றுக் குடியரசு ஆக்குவதற்கு நாம் கொடுத்த கொடை என்ன? குடியரசு ஆயபின் பெற்ற பயன் என்ன?

2. அயலார் கொள்ளை அடித்தது போயது. அடியாள்களைக் கொண்ட அரசால் கொள்ளையடிக்கும் நிலையை அறிக.

3. பொன் கொழித்த காவிரி மாந்த நேய மற்றோரால் மணற் கொள்ளையடிக்கும் ஆறாக மாறியது காண்க.

4. அயல் நாட்டில் தொடங்கத் தடை செய்யப்பட்ட மாசுமிக்க ஆலைகள் இங்கே பெருகி வரச் செய்தது குடியரசாம்.

5. அரிசி முதல் இலவயம் என்னும் அரசின் கேட்டால் போய உழைப்பாக்கத்தை மீளக் கொண்டு வருவ தெவ்வாறு?

6. கல்வியில் கொள்ளை; தொழில் பெறுவதில் கொள்ளை; அரசு அலுவல் பெறக் கொள்ளை; என ஆக்கியது அரசு.

7. நல்லவர்கள் அஞ்சி நடுங்கவும் அரட்டர்கள் மகிழ்ந்து ஆட்டம் போடவும் ஆக்கியது குடியரசே ஆகும்.

8. அயலாரின் கொள்ளை மிக்க ஆட்சி உயர்ந்த ஆட்சி என்று ஆக்குமாறு வந்த ஆட்சி குடியாட்சியாம்.

9. கட்சி அரசு; சாதி அரசு; என இரண்டு ஆனாலும் கேடு செய்தலில் ஒத்துப் போவது குடியரசு.

10. வாக்கு நோக்கிச் செயல்படுவதை அல்லாமல் சட்டம் அறம் என்பவை பற்றி ஆளாதது நம் குடியரசு.

92. ஒருமைப்பாடு

1. பொதுமை உளத்தில் பொலியும் ஒருமை
விளக்கே உயரொருமைப் பாடு.

2. தமைப்போல் பிறரைத்தாம் தாங்கி மதிக்கும்
நினைப்பால் வருமே அது.

3. நேயப் பெருக்கால் நினைசெயல் ஒன்றியதன்
வாய தொருமையுயர் பாடு.

4. ஒப்புரவு கொள்ளாதார் ஒப்புரவு பேசுதல்
துப்புர வில்லாத் துயர்.

5. உள்ளத்தில் இல்லா ஒருமைப்பா டென்றென்றும்
கள்ளத்தில் வைக்கும் கரவு.

6. தன்னலம் தோன்றாத தாய்மைப் பரிவோடு
முன்னுவ தொப்புர வாம்.

7. அவரவர் பேயாட்டம் போட்டே அவைக்கண்
எவர்க்கோ பொழிதலே மாற்று.

8. யான்சொல்வ தேசரி நீகேட்டல் உன்கடன்
தான்என் றொருமை வரா.

9. மொழியொப்பும் போற்றும் இனவொப்பும் காப்பார்
வழியொப் பொருமையாம் ஒப்பு.

10. ஒருமைப் படாமல் ஒலியெடுக்கும் சொல்லால்
ஒருமை சிதையும் ஒழிந்து. 920

92. உள்ளத்தால் ஒத்து வாழும் வாழ்வு

1. பொதுமையாம் ஒப்புரவு என்றும் உயர்வால் விளங்கும் ஒருமைப் பாடாம் ஒளியே உயர் ஒருமைப்பாடு ஆகும்.

2. தம்மை நினைப்பது போல் பிறரையும் தாமாக நினைத்து மதிப்பாகப் போற்றுதலால் வருவது ஒருமைப்பாடு ஆகும்.

3. அன்புப் பெருக்கினாலும் நினைப்பாலும் செயலாலும் ஒத்து வாழும் வாழ்வே ஒருமைப் பாட்டு வாழ்வாம்.

4. கடைப்பிடி இல்லாதவர் ஒருமைப்பாடு பற்றிப் பேசுவது தூய்மையைப் பேசிக் கடைப்பிடியாமையால் வரும் நோய்.

5. உள்ளத்தில் ஒப்புரவில்லாமல் உரைக்கும் ஒருமைப்பாட்டுச் சொல் எந்நாளும் வஞ்சமாக இருந்து கெடுக்கும் கேடாகும்.

6. தன்னலம் அற்ற தாய்மைத் தன்மையைக் கொண்டு அதன் படி நடப்பதால் தோன்றுவது ஒருமைப்பாடு ஆகும்.

7. தனித்தனியே தன்னலப் பேயாட்டம் ஆடுவதும் ஊரறிய ஒருமைப்பாடு பற்றிப் பேசுவதும் பெரிய ஏமாற்றுச் செயலாம்.

8. நான் சொன்னபடி கேட்டால் தான் கூட்டு. இல்லையேல் கூட்டில்லை என்பது ஒருமைப்பாடாகாது.

9. மொழிகளுக்கு ஒப்பான உரிமை; இனங்களுக்கு ஒப்பான உரிமை; என்பவர் வழியிலேயே ஒருமைப்பாடு உண்டாம்.

10. ஒருமைப்பட்ட செயலும் சிந்தையும் இல்லாமல் ஒருமைப்பாடு பற்றிப் பேசுதல் ஒருமைப்பாடு கெடுப்பதாம்.

93. நாட்டு நலம்

1. வீட்டுநலம் குன்றா விழுப்பநலம் ஆயினால்
நாட்டுநலம் ஆகும் நனி.

2. தனியுறுப்பு தன்னுடலக் கூட்டுநலம் ஆதல்
நனிவிளக்கும் நாட்டு நலம்.

3. உழவன் நிலங்காக்கும் ஓர்மை எனவே
நிகழ்வதாம் நாட்டு நலம்.

4. கடையர் தமையும் கடைக்கணிக்கும் ஆட்சி
அடையுமாம் நாட்டு நலம்.

5. உடலெங்கும் பாயும் உயர்குருதி ஒப்ப
இடமெல்லாம் ஏய்தல் நலம்.

6. நாட்டுக்கு நாடு நடுநிலைக் கேடானால்
நாட்டுக்கு வைக்கின்ற தீ.

7. தன்கட்சி மாற்றாரின் கட்சியென எண்ணுவார்
தன்னாட் டழிப்பில் தலை.

8. அறக்காவல் செய்யா தவர்பா டெனலோ
மறக்காமல் தன்தலைக்கு மண்.

9. நாடாளு மன்றம் நடக்கும் முறையதே
நாட்டுநலம் காட்டிவிடும் நன்கு.

10. ஒப்ப முடிவெடா ஓராட்சி ஒப்பிப்
பிரிந்தாக வைக்கும் பெரிது. 930

93. நாட்டின் ஒட்டுமொத்த நலம்

1. ஒவ்வொரு வீடும் குறையாச் சிறப்பமைந்த தாகிவிட்டால், அதன் பெருக்கமாம் நாட்டுநலமும் நன்றாக அமைந்து விடும்.

2. ஒவ்வோர் உறுப்பின் நலமும் ஒன்றிச் செவ்விதாக அமைவதே உடலின் நலமாகும். அவ்வாறே நாட்டு நலமுமாம்.

3. வறிய உழவன் தன் வாழ்வு மூலமாம் சிறிய நிலத்தில் பயிரிட்டுக் காப்பதுபோல் அமைவதே நாட்டு நலமாம்.

4. கீழில் கீழாக இருப்பவரையும் பேணி மேலாக்கும் கடமை மேற்கொண்டால் அந்நாடு முழுதுறு நலநாடாகும்.

5. உடலுக்குள் குருதி ஒவ்வோர் உறுப்புக்கும் செல்வதுபோல் ஒவ்வொரு வீட்டிலும் நாட்டுநலம் விளங்குதல் வேண்டும்.

6. பெருநாட்டுக்குட்பட்ட குறுநாடுகள் தமக்குள் நடுவு நிலை தவறிச் செயல்பட்டால் அது நாட்டுக்கே கொள்ளி வைப்பதாம்.

7. எக்கட்சியர் ஆளினும் தம் கட்சி மற்றைக் கட்சி என எண்ணித் தன்கட்சியை முன்வைத்து ஆண்டால் அதுவே நாட்டுக் கழிவு.

8. நேரிய நடுவண் ஆட்சி மாநில ஆட்சிகளின் பாடு எனக் கைவிட்டால் அது தன்தலையில் தானே மண் போடுவதாம்.

9. நாட்டின் ஒன்றியமாம் நாடாளு மன்ற நடப்பே நாட்டின் நலத்தையும் பொலத்தையும் தெளியக் காட்டி விடும்.

10. நடுவு நிலைக்கு ஒப்ப எந்த முடிவும் செய்யாத ஓராட்சி நடுவண் ஆட்சி என்றால் நாடுகள் பிரிந்தாகச் செய்வதே.

94. தன்னலம்

1. தன்னலம் கொள்ளை தரக்கேடு எனவானான்
உன்னான் உணரான் உயர்வு.

2. பகுத்தறிவு பேசினார் பண்பாடு போற்றி
மிகுத்தறிவு செய்தாரா மேல்?

3. சீர்திருத்தம் சொல்லிச் சிறப்பிருக்கை கொண்டார்கள்
பார் கெடுக்கும் கேடதனைப் பார்.

4. காட்சிப் பெயர்சொல்லிக் காட்டாட்சி செய்பவர்கள்
மாட்சி யறிந்தது மண்.

5. கொள்ளைமேல் கொள்ளை யடித்துக் குணவானாய்
வள்ளலாய் நிற்பார் வகை.

6. கொள்ளி முடிவான் எனும்வகைக்குச் சான்றாக
அள்ளி முடிவார்க் கரசு.

7. ஊடகம் எல்லாமும் கேடகம் ஆக்கவே
நாடகம் போடும் நயம்.

8. வளரும் இளையர் வகையற்றுப் போக
வளர்ப்பார் வருதுணையாய் வார்த்து.

9. கொள்ளையும் கூத்தாட்டும் கோடி இலவயமும்
கொள்ளைக்குக் கொண்ட மறைப்பு.

10. நாடே சுடுகாடாய் ஆயினும் தாமுயரும்
பாடே பதவியாம் பார். 940

94. தன்னலத்தின் கேடு

1. தன்னலம், பொருளைச்சுரண்டல், தகுதிக்கேடு என்று ஆனவன் எண்ணியும் பார்க்கவும் மாட்டான்; உயரவும் மாட்டான்.

2. பகுத்தறிவு என்று பேசியவர்; தாம் கூறிய பண்பாட்டைப் போற்றி மேலும் அந்நிலை வளரச் செய்தாரா?

3. சீர்திருத்தம் செய்வோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர், ஆட்சிக்கு வந்தபின் சீர்கேட்டைச் செய்வதை அறிக.

4. எதிர் காலத்தில் தம் ஆட்சியின் மாட்சியைக் காட்சியாகக் காட்டியவர் ஆட்சிக்கு வந்தபின் செய்சிறுமை நாடறிந்தது.

5. கொள்ளை கொள்ளையாக நாகரிகக் கொள்ளை யடித்துத் தாம் வள்ளல் என்று நிற்கின்றமையைக் காண்க.

6. "கொள்ளி முடிவான்" என்று கூறும் வசைமொழிக்குச் சான்றாகக் கொள்ளியை முடிபவர் கையில் ஆட்சியாயது.

7. அரசியல் கட்சிகளின் ஊடகங்கள் நாட்டைக் கேட்டுக்கு இடமாக்கவே நாடகம் போடும் வியப்புகளைக் காண்க.

8. எதிர்காலச் செல்வங்களாம் இளையவர் செயலற்றுப் போகும் வகையில் வளர்க்கப்படுதலும் நடையிடச் செய்தலும் அறிக.

9. கொள்ளையடித்ததை மறைக்கவே பிறர் கொள்ளை யடிக்க வெறியாட்டம் போட விட்டார்; இலவசமும் தந்தார்.

10. நாடே இடுகாடும் சுடுகாடும் ஆனாலும் தாம் மேல் மேல் உயர்வதற்கு உரிய பதவிகளைத் தேடி அடைவதைக் காண்க.

95. குடி

1. குடியைக் கொடுத்துக் கெடுக்கும் அரசே
குடியரசாய்ப் போயது கேடு.

2. குடியா இளைஞர் குடித்தார் குடியால்
முடித்தார் இளமை நலம்.

3. நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடாம் எனஎழுதிக்
காட்டரசும் தாரா குடி.

4. குடிப்பது கேடென்று சொல்லிக் குடிதரற்
கில்லையோ வெட்கும் இயல்.

5. குடிக்கப் பழக்கிக் குடும்பம் கெடுத்தற்கோ
கொண்டோம் குடியர சென்று.

6. அறிவை அழித்தும் உடலைக் கெடுத்தும்
செறிசெல்வம் செல்வ மதா?

7. கொள்ளை யடிப்புரிமை தந்தந்தக் கொள்ளையில்
பங்குபெறல் அன்றோ இது.

8. கொள்ளையன் வள்ளலாய் மாறுதல் தானேயாம்
தள்ளும் இலவசம் தான்.

9. வாய்மையும் தூய்மையும் இல்லாத ஆட்சியால்
பேய்மையே ஆளும் பெரிது.

10. வாழ்பவர் வாழவே வாய்ந்த அரசியலை
வாழ்த்தத்தான் வாராதே வாய்? 950

95. மது வகைக் கேடு

1. குடியாத மக்களுக்கும் குடியைக் கொடுத்துக் கெடுக்கும் அரசுக்குத்தானே 'குடியரசு' பெயர்வந்தது போலும்.

2. குடித்தறியாத இளையவரும் குடிக்கவும், அக்குடியால் முடியவும் இளமை நலம் வளம் கெடவும் செய்வது குடியாம்.

3. "மது வருந்தல் வீட்டுக்கும் கேடு; நாட்டுக்கும் கேடு" என்று எழுதிப் போட்டுக் குடிக்கச் செய்வது காட்டரசா? நாட்டரசா?

4. குடிப்பது கேடாக்கும் என்று சொல்லிக் கொண்டு குடியைக் கொடுக்க வெட்கமே இல்லாமல் போய்விட்டதோ?

5. குடிக்காதவரும் குடிக்கப் பழக்கவும் குடும்பத்தைப் பாழாக்கவுமோ குடியரசு என்பதை நாம் அடைந்தோம்?

6. அறிவைக் கெடுத்தலாலும், உடலைக் கெடுத்தலாலும் அரசு செல்வம் பெருகக் கொள்வது செல்வம் தானா?

7. கொள்ளையடிக்க உரிமை வழங்கி அதில் இவ்வளவு பங்கு தர வேண்டும் என்பதற்கும் இதற்கும் வேறுபாடு என்ன?

8. கொள்ளை யடிப்பவன் வள்ளலாக நாடகம் போடுவதுதானே அரசு வாக்குக் கொள்ளைக்காக வழங்கும் இலவசங்கள்.

9. உண்மையோ தூயதாம் தன்மையோ இல்லாத ஆட்சியால் பேய்மையே ஆட்சி நடத்துவதாக ஆயிற்று.

10. வாழ்பவர் அனைவரும் வாழ்வதற்காகவே அமைக்கப்பட்ட அரசை வாழ்த்துவதற்கு வாய் வாராமை ஏற்படுவது எதனால்?

96. வசை வாய் – 1

1. பழித்துப் பழகுவாய் பாழாய்ப் பழியாமல்
மூடிக் கிடவா தது.

2. மண்டையில் நண்டேறிக் கொண்டார் அமைதிநிலை
கொண்டிருத்த லுண்டோ குறி.

3. கேடு வரவேண்டிக் கேடு மொழிவானைக்
கேடு நினைதலும் கேடு

4. உள்ளம் சிறுத்தால் உறவும் பகையாகித்
துள்ளி வருமே துயர்.

5. வெறியன் தனக்கும் வெறியன் உறவாகச்
சூழ்தல் அறிந்ததே ஆம்.

6. இடிப்பார் இருந்தால் இடிப்பார்; இடிப்பாரை
ஒப்பான் ஒதுக்கும் உடன்.

7. தானும் திருந்தான் திருத்துவார் சொற்கேளான்
ஏனோ இவனின் பிறப்பு.

8. பெற்றதும் வீணாகும் கற்றதும் வீணாகும்
உற்றவெலாம் கேடாகும் கேள்.

9. கெடுப்பார் கெடுப்பினைக் கேட்பவர் தாமும்
கெடுப்பவர்க் கொப்பராம் கேள்.

10. கேட்பார் இலாக்கால் கெடுசொல் உரைத்திட
வேட்பரோ யாரும் விழைந்து. 960

96. வசை மொழியும் வாய்

1. எவரையும் எதற்கும் பழித்தே பழகி விட்ட வாயுடையவர், வாயை மூடிக் கொள்ள முடியாதவராகவே பாழாவர்.

2. மூளைப் பகுதியில் நண்டு ஊர்வது போல் பொறாமை போட்டி கொண்டிருப்பவர் அமைதி கொண்டிருக்க மாட்டார்!

3. தனக்குக் கேடாக்கிக் கொள்ள வேண்டும் என்றே கெடு சொல் சொல்பவனைப் பற்றி, கேடன் என நாம் நினைவதும் கேடு.

4. உள்ளம் விரியாமல் சிறிதாகி விட்டால் உறவாக ஒன்றியிருந்தாரும் பகைவராக வந்து துயரப்படச் செய்வர்.

5. அறிவில்லாத சீர்கேடனுக்கும் அறிவில்லாத சீர்கேடன் உற்ற நண்பனாக இருப்பது உலகியலில் காண்பதேயாம்.

6. இடித்துக் கூறுபவர் இருந்தால் இடித்துக் கூறுவார். வெறியன் இடிப்பாரை நண்பாக ஒப்பான்; ஒதுக்கிவிடுவான்.

7. தானாகத் திருந்தவும் மாட்டான்; திருத்துவார் சொல்லையும் கேட்கவும் மாட்டான். இவன் ஏன் பிறந்தானோ?

8. பழிவாழ்வனைப் பெற்றதும் வீணே! அவன் கற்ற கல்வியும் வீணே! உற்ற எல்லாமும் வீணுக்கே என்பதறிக.

9. கெட்ட இயல்பினராய்க் கெடுப்பவர் சொல்லைக் கேட்டு அமைந்து இருப்பவரும் கெடுப்பவர்க்கு ஒப்பானவரே!

10. கேடுரைப்பவன் சொல்லைக் கேட்க எவரும் இல்லையானால் எவரும் கெடு சொல் சொல்ல விரும்பமாட்டார்!

97. வசை வாய் - 2

1. செவியுள் செவியாய்ச் செறிந்து புகல்வார்
செவி,கட் செவியின் கடி.

2. தூற்றிப் பழகினோன் துண்ணென் றிடித்தாலும்
போற்றப் பழகான் புரிந்து.

3. பன்னீர் தெளிக்கப் பழகாத பேதைதான்
வெந்நீர் தெளிப்பான் வெடித்து.

4. சாந்தம் தெளிப்பானும் சாந்தின் மணம்பெறுவான்
ஏந்தும் இயற்கை இது.

5. மாலை தொடுக்கும் மலர்முகத்தைப் பார்ப்பவன்
பாலையாய் நிற்பனோ பார்.

6. தேனூறும் சொல்லிருக்கத் தேளூரும் சொல்லுரைக்க
ஏனூறும் இவ்விழி வாய்?

7. உள்ளினிக்க மாட்டாதார்க் குள்ளவெலாம் கைப்பன்றோ
அள்ளியுண் பானோ அமிழ்து?

8. வசையாய் வசையா திருந்தால் வயிறூதிப்
போமென்பார் மக்கள் புரிந்து.

9. பழிக்குப் பழிவாய் இலாமல் இலையாம்
கழிசடை என்பார் கணித்து.

10. வசையே வடுவாம்; வசைச்சொல்லை 'வை இய சொல்'
என்றார்நம் முந்தை யவர். 970

97. வசை மொழியும் வாய்

1. காதோடு காதாக நெருங்கிச் சொல்பவர் செவி, செவ்வியறிந்த செவியன்று. கட்ட செவி என்னும் பாம்பின் கடியாவதாம்.

2. பிறரைத் தூற்றிப் பழகிவிட்டவனை எத்தனை கடுமையாக இடித்துக் கூறினாலும் அதனைப் பொருட்டாகக் கொள்ளான்.

3. பிறர்க்குத் தண்ணிய பனிநீர் (பன்னீர்) தெளித்து மகிழப் பழகாதவனே, சினமிக்கு வெறியனாய் வெடிபோல் பேசுவான்.

4. சந்தனத்தைப் பிறர்க்குத் தெளிப்பவன் தானும் சந்தன மணத்தைப் பெறுவான், இயற்கையாம் நிலை இது.

5. மாலையைத் தொடுக்கின்றவர் மலர்ச்சி, மென்மை, கலைநயம் ஆயவற்றை ஆய்ந்து பார்ப்பவன், பாலைபோல் நில்லான்.

6. தேன் ஊற்றடித்து வரும் இனிய சொற்கள் இருக்கவும் தேட்கடி போலும் சொல்லைச் சொல்ல இவன்வாய் ஊறுவதேன்?

7. தன் உள்ளத்தில் இருக்கும் அமுதால் இனிமை பெறானுக்கு வெளியே உள்ளவை யெல்லாம் கசப்பாகத் தானே இருக்கும்?

8. யாரையாவது வையவில்லை என்றால் வயிறு ஊதிப்போகும் என மக்கள் வாழ்வியல் புரிந்து சொல்வதைக் கேட்க.

9. பழிப்பார்க்குப் பழிப்பார் இல்லாமல் போகமாட்டார். அவர்கள் உதிர்ந்த முடி அன்னவராம்.

10. வசைச் சொல் என்பது வடுச் சொல்லாம்; அதனால் ஆசிரியர் தொல்காப்பியர் 'வைஇய மொழி' என்று தெளிந்து கூறினார்.

98. தொலைக் காட்சி – 1

1. பக்கத்துத் தங்கிப் பழிவாங்கும் நோக்கினர்
கக்கத்தில் வைத்துள்ள கங்கு.

2. பெண்ணைப் படுத்தும் பெருங்கொடுமை காட்டவே
கண்டான்கொல் காட்சிக் கதை.

3. பெண்களே பெண்ணைப் படுத்தும் பெரும்பாடு
கண்கொண்டு காணாக் கயம்.

4. பெண்ணை இழிவுறுத்தும் பேய்மகன் யாரெனப்
பெண்வாய்கள் பேசாமை ஏன்?

5. இழிவுகளைக் கண்டும் இளிப்போடு பார்ப்பார்
இழிவென்று கொள்வாரோ எண்.

6. கூட்டுமா றோச்சிக் கொடுங்காட்சிக் கொள்ளையனை
வாட்டாளோ வாய்பெற்ற தாய்?

7. வன்முறை கொள்ளைகள் வாராப் படமெடுக்க
என்னையோ வந்த திடர்?

8. கொள்ளைப் பணமே கொடும்பாவி நோக்கமாய்
அள்ளப் படமெடுக்கும் பாம்பு.

9. தேடிப்போய்ப் பார்த்த திரைப்படங்கள் வீட்டுக்குள்
கூடிப்போய்ப் பார்த்தல் குறி.

10. பண்பும் உழைப்பும் படக்கென்று போகவே
தந்தார் இலவசமாய்த் தான். 980

98. தொலைக்காட்சி நிலைமை

1. நமக்கு நெருக்கமாக இருந்து பழிவாங்கக் காத்திருக்கும் எண்ணத்தினர் கழுக்கூட்டுள் வைத்துக் கொண்டுள்ள தீக்கங்கு!

2. பெண்களைச் சிறுமைப்படுத்தும் கொடுமையைக் காட்சியாகக் காட்டவே தொலைக் காட்சி கண்டாரோ?

3. பெண்களே பெண்களுக்குச் செய்யும் பெருந்தீமைகளைக் கண்கொண்டு காண்பதற்கும் அருவறுப்பாக உள்ளதே.

4. பெண்ணை இழிவுபடுத்தவே பிறந்தது போல் பிறந்த, பேய்பெற்ற மகனை எவன் என்று கண்டு பழியாமை ஏனோ?

5. இழிவாகப் பெண்ணைக் காட்டும் காட்சியையும் சிரிப்போடு பார்க்கின்றவர் இழிவுபடுத்துவதாகக் கொள்ள மாட்டாரோ.

6. பெண்ணைச் சிறுமைப்படுத்தும் காட்சி கண்டும் எந்தத் தாயாவது கூட்டுமாறு கொண்டு போகமாட் டாரோ?

7. வன்முறைக் காட்சியும் கொள்ளை கொலைகளும் வாராமல் படம் எடுப்பதற்கு என்ன இடையூறு வந்தது?

8. கொள்ளை கொள்ளையாய்ப் பணம் அள்ளவே படமெடுக்கும் பாவப்பிறவி பாம்புப் பிறப்புக்கு ஒப்புத் தானே!

9. என்றோ எங்கோ தேடிப் போய்ப் பார்த்த திரைப் படங்கள் வீட்டுக்குள் கூடிப்பார்க்கச் செய்த சீர்கேட்டை அறிக.

10. ஏதோ இருக்கும் பண்பையும் உழைப்பையும் ஒழிக்கவே இலவசத் தொலைக் காட்சிதந்தாரோ!

99. தொலைக்காட்சி – 2

1. பண்பாட்டுக் கேடும் பகுத்தறிவும் சொன்னாரே
பண்பாட்டில் மண்போட்டார் பார்.

2. உலகத்துக் குப்பையெலாம் உள்வீட்டில் கொட்டல்
தொலைக்காட்சி என்னத் தொலை.

3. உழைப்பை ஒழிக்க ஒருநோயைக் கண்டார்
அழைக்கும் தொலைக்காட்சி ஆம்.

4. கொள்ளை கொலையன்றிக் கொண்டாடும் கொள்கையெதும்
அள்ளி வராதே அது.

5. கடையர் கயவர் கரவர் எலாரும்
உடையதுதான் ஊடகமா உன்.

6. உள்ளம் சரியானால் எல்லாம் சரியாகும்
தெள்ளத் தெளிந்த திது.

7. காட்டாற்றுப் போக்கால் கழனிகெடும் கால்வாயாய்
நீட்டானால் தேட்டாகும் நேர்.

8. நாட்டில் தமிழேதும் இல்லையென நாட்டலே
காட்சிப் படத்தார் கலை.

9. தீவளர்த்தல் இல்லாத் திருமணம் செல்லுமென
வாயுரைத்தார் வண்ணம் இது.

10. யான்காண மேலாம் தமிழ்மணம் ஒன்றேனும்
தேன்வழியக் காட்டாத தேன்? 990

99. தொலைக்காட்சி நிலைமை

1. பண்பாட்டுக் கேடுகளையும் பகுத்தறிவுச் சீரையும் எவர் சொன்னாரோ அவரே அவற்றுக்கு மண்போட்டு மூடினரே!

2. உலகத்தில் நாற்றமெடுக்கும் குப்பைகளை யெல்லாம் கூட்டி உள்வீட்டில் கொட்டுவதே தொலைக்காட்சி என்று ஒழிக்க.

3. உழைப்பைப் பெரிதும் கெடுக்கவே ஒரு தொற்று நோயைக் கண்டுள்ளார். அதற்குப் பெயர் தொலைக் காட்சியாகும்.

4. கொள்ளையும் கொலையும் அல்லாமல் பாராட்டத் தக்க கொள்கைகளைத் தொலைக் காட்சி ஒரு நாளும் தராதோ?

5. கடைப்பட்டவர், இழிவினர், வஞ்சநெஞ்சர் ஆகிய எல்லாரும் கூடிக் கெடுப்பதுதான் ஊடகம் எனப்படுவதா?

6. உள்ளம் செம்மைப்பட்டால் சொல், செயல், எல்லாமும் சீராகும் என்பது தெளிவாகத் தெரிந்ததாம்.

7. காட்டாறு போகுமாறெல்லாம் போனால் விளைநிலம் கெட்டொழியும். அதனை வழியே திருப்பி விடின் விளைவுக்காம்.

8. தமிழ் நாட்டில் தமிழே இல்லை என்பதை நிலைநாட்டவே படக் காட்சி எடுப்பவர் கலையாகக் கொண்டுள்ளனரோ?

9. புகைபோடாத் திருமணமும் சட்டப்படி செல்லும் என்று வாயால் சொல்லியவர் செயல்வண்ணம் அதைச் செய்ததா?

10. தமிழ்முறையில் நடைபெறும் திருமணம் எதையேனும் எவரேனும் காட்சியாகக் காட்டக் கண்டதிலன் யான்.

100. தொலைக் காட்சி – 3

1. ஆக்கத் தொலைக்காட்சி ஆக்கும் அழிவென்றால்
ஆக்குவான் கேடாம் அது.

2. பண்பாட்டை ஆக்கும் பயன்பாட்டுக் காட்சிதான்
பண்பாட்டைச் சீரழித்தல் பார்.

3. கூவக் கொடுநாற்றம் கொட்டா அருவறுப்பை
ஆவியாய்க் கொள்ளல் அவம்.

4. கெட்டான் கெடுப்பான் கெடுகாலி கைப்பட்டால்
எட்டா தெதுவும் நலம்.

5. அறிவியல் ஆக்கம் அழிவியற் காதல்
அறிந்தழிக்கும் கேடன் வழி.

6. வன்முறையைத் தூண்டி வளர்க்கும் தொலைக்காட்சி
எம்முறையில் போகும் இனி?

7. கட்டவிழ்த்த பேயாகக் காட்சிதரும் சேண்காட்சி
விட்டொழிக்க வல்லார் எவர்?

8. கட்டுக் குலைப்பதே காட்சியென ஆயினார்
கட்டொழுங்கு காட்டல் கனவு.

9. ஊர்வாரிச் சேறுதான் உள்ளமுக்குப் போக்குமெனும்
பேரதுதான் காட்சியெனப் பேசு.

10. பண்பட்டான் பண்பாட்டுக் காப்பான்; பயன்படுத்தின்
பண்பாட்டுப் பேறு பல.

1000

தமிழாயிரம் நிறைந்தது.

வாழ்த்து

நன்றே தமிழ்வாழி! நன்றே நிலம்வாழி!
நன்றே இனம்வாழி நன்கு.

100. தொலைக் காட்சி நிலை

1. ஆக்கத்திற்கென ஆக்கப்பட்ட தொலைக்காட்சி ஆக்குவது அழிவென்றால் அதனைப் பயன்படுத்துவார் கேடு அஃதாம்.

2. பண்பாட்டை உண்டாக்க வல்ல அரிய தொலைக் காட்சிதான் பண்பாட்டுச் சீரழிவுக்கு மூலமாக உள்ளது.

3. தலைநகர்க் கூவச் சாக்கடையினும் நாற்றத்தைக் கொட்டும் தொலைக்காட்சியைப் போற்றுவார் அவப்பிறப்பர்.

4. கெட்டுப் போனவன், கெடுக்கவே திரிபவன் கையில் தொலைக்காட்சி அகப் பட்டால் எந்த நன்மையும் எய்தாது.

5. அறிவியல்கள் எல்லாமும் ஆக்கத்திற்கென ஆக்கப்பட்டனவே. அவற்றை அழிவியற்கு ஆக்குதல் அழிக்கும் கேடன் வழி.

6. வன்முறையைத் தூண்டி வளர்க்கும் தொலைக்காட்சி வருங்காலத்தில் எவ்வாறு தான் போமோ, அறியோம்!

7. கட்டுகளை அவிழ்த்து விட்ட பேய்களென ஆட்டம் போடும் தொலைக்காட்சியைத் தொலைக்க வழிகாண்பார் எவர்?

8. கட்டொழுங்கைக் கெடுப்பதே தொலைக் காட்சி என்று ஆகிப் போனவர் கட்டொழுங்கு காட்டுவார் எனல் கனவேயாம்.

9. ஊர்வாரிச் சேறே உளத்தழுக்குப் போக்குமெனும் கெடுப்புக்குப் பேர்தான் தொலைக்காட்சி என்று சொல்.

10. பண்பட்டவனோ, பண்பாட்டுக் காவலனோ அதனைப் பயன்படுத்தினால் உயர்ந்த பண்பாட்டுக் கருவி அஃதாம்.

வாழ்த்து

தமிழ்மொழி நன்றாக வாழ்வதாக! தமிழ்நாடும் நன்றாக வாழ்வதாக! தமிழ் இனமும் மிக நன்றாக வாழ்வதாக!

அதிகாரங்கள் – அகரவரிசை

	பக்கம்		பக்கம்
அகத்தியப்புரட்டு	45	கலைச் சொல்	103
அடிமைப்படல்	41	கலை வளம் - 1	105
அயலாற்கிடம் கொடேல்	97	கலை வளம் - 2	107
அழிசெயல்	13	கலை வளம் - 3	109
அன்பு	141	கலை வளம் - 4	111
ஆள்பவர் கேடு	69	கயமைத்தமிழர்	67
ஆள்வோர் துணையால் அழிப்பு	39	களப்பணி	35
இரங்குவ செய்யற்க	99	காக்கும் வகை	61
இன அழிப்பு	15	காதல் வாழ்வு	165
இனக்காப்பு	37	காப்பும் அழிப்பும்	57
இன்சொல்	143	குடி	189
இனத்தரின் இனக்கேடு	65	குடியரசு	181
உயிரிரக்கம்	23	குடும்பம்	171
உரை நிலை	49	கூட்டுறவு	157
உரைப் பெருமை	51	கூட்டுறவுக் குறை	159
உரையால் நலம்	53	கெடு நட்பு	153
உழைப்பை ஒழித்தல்	71	கொள்கை	135
எல்லாம் அழிவு	43	செவி	131
எழுச்சி கொள்	87	சொல் நிலை	29
எழுச்சி யுறல்	31	சொல்லுதவி	145
எழுத்து வரைவு	5	சொல் வகை	147
ஒருமைப்பாடு	183	சொல் வளம் - 1	113
ஓயா உழைப்பு	95	சொல் வளம் - 2	115
கணக்காயன்	23	சொல் வளம் - 3	117
கண்	129	சொல் வளம் - 4	119

	பக்கம்		பக்கம்
தமிழழிப்பு	7	நம் கேடு	83
தமிழனாய் நில்	19	நல்லோர் நலம்	155
தமிழ் எழுத்து	21	நாட்டு நலம்	185
தமிழ்த் தோற்றம்	3	நிலப்பறிப்பு	33
தமிழ்ப் பழமை	1	பகை யொழிக்க	73
தமிழ்ப் பிறப்புணர்வு	17	பின்னூற் பிழை	47
தமிழ் முகவரி	91	புரிதல்	149
தமிழ் வளர்த்தார்	55	மீட்டெடுக்கும் மீட்பர்	81
தமிழ் வாழ்வழி	85	முகம்	121
தனி நாடு தேடு	79	மூக்கு	127
தனியாட்சி	75	மூளை	133
தன்னம்பிக்கை	137	மெய்	123
தன்னலம்	187	மெய்யியல்	27
தாய்மை - 1	161	மொழிக் கலப்பு	93
தாய்மை - 2	163	மொழிக் காவல்	9
தாய் மொழிக் கல்வி	101	மொழிக் கேடர்	63
தற்கொடை	179	மொழி வளர்த்தல்	59
தற்கொலை	177	மேன்மை	139
தற் கேடு - 1	173	வசை வாய் - 1	191
தற் கேடு - 2	179	வசை வாய் - 2	193
தொலைக்காட்சி - 1	195	வளர்ச்சி	169
தொலைக்காட்சி - 2	197	வாய்	125
தொலைக்காட்சி - 3	199	வாழ்க்கைக்குத் துணை	167
தொல்காப்பியம்	11	விழிப்புறல் வேண்டும்	77
நட்பு	151	வெல்லும் வழி	89

பாடல் முதற்குறிப்பு – அகரவரிசை

	பக்கம்
அகர முதல	113
அகர முதலி	113
அங்கங்கு	43
அச்சத்தால்	147
அணுவளவு	105
அணைந்தான்	15
அணையாமல்	99
அதனை உருவாக்கி	45
அதற்கென்று	81
அதற்கென்றே	61
அதன்சான் றதனுள்	47
அதிர் வென்றால்	75
அதுதான்	25
அதுவுன் தனிப்பணி	35
அதைஅறிவான்	13
அதையும்	75
அதையே	5
அமைத்தார்	41
அமைந்த	63
அயலாட்சி	181
அயல்நாட்டு	181
அயல் வேள்வி	63
அயற் கொள்ளை	181
அரசினர்	159
அரணாக	7
அரணில்லை	33
அருச்சகப்	39
அருட்பாவில்	111
அருவியை	155
அவரவர்	183
அவராக	147
அவரும்	73
அவரே இழந்த	51
அவரேதாம்	9
அவற்றைப்	43
அவனிழந்த	13
அவனே	21
அவை ஒகர	21
அழித்தார்	37
அழுக்கு	131
அறக்காவல்	185
அறச்சீர்த்தி	65
அறிந்த	25
அறிந்தது	101
அறிந்தாயேல்	79
அறிந்தால் அரும் பெறல்	49
அறிந்தால் கணியத்தை	91
அறிந்தால்தான்	1
அறிந்தால் விழிப்பாய்	63
அறிந்தான்	5
அறிந்து	87
அறிந்தொன்றி	73
அறிந்தோ	27
அறியப்	75
அறியா தழித்த	95
அறிவான்	15

	பக்கம்
அறிவியல்	199
அறிவை	189
அன்பின்	141
அன்பின்றேல்	141
அன்புக்கும்	141
அன்று தடுக்க	67
அன்று வரை	95
அன்னவர்	9
ஆகாப் பொருளெல்லாம்	125
ஆக்கத் தொலை	199
ஆக்கப் பழக	167
ஆக்கம் அனைத்தும்	133
ஆக்கம் இனப்	79
ஆக்காதான்	69
ஆக்காது	29
ஆங்காலம்	91
ஆடி அரவணை	163
ஆட்சியும்	103
ஆணையோ	133
ஆண்டாண்டும்	71
ஆமதனால்	25
ஆமாம் எனும்	61
ஆமாம் திருவிடமோ	31
ஆமென்னார்	41
ஆய கலைகள்	105
ஆய மருத்துவர்	129
ஆய வெலாம்	77
ஆயிரம்	109
ஆயும் அறிவினர்	51
ஆய்தம்	21

	பக்கம்
ஆய்ந்தறிந்தால்	43
ஆய்ந்தால் தமிழுரை	69
ஆய்தால் தமிழினம்	79
ஆய்வின்	117
ஆரியரால்	7
ஆர்த்தவர்	77
ஆவி உருவத்தை	123
ஆழ் மனத்தை	113
ஆன்ற	131
ஆன்றோரும்	133
இங்கிருந்த	55
இங்கெழும்பு	95
இசைக்கும் இசை	131
இடரெல்லாம்	85
இடர் விளைத்த	77
இடிப்பார்	191
இடைத் தடுத்து	147
இடையூற்றை	177
இணைந்ததால்	83
இணைந்தார்	99
இணையா	15
இதனை	75
இது நாள்	3
இந்தியத் தோடும்	75
இயம்பின்	67
இயலும் இசையும்	13
இயல்பாக	101
இயல்பு கெடுப்பவன்	93
இயைந்த	53
இரட்டை	165

	பக்கம்
இரண்டன்	77
இரப்பன்	135
இருக்கும்	129
இருதலை	167
இரைந்த	83
இலவசக் கேட்டால்	181
இலாத கலை	83
இல்லா ஒருமை	31
இல்லாதோம்	33
இல்லாரே	71
இல்லை	75
இவனுள்ளார்	15
இவர்பாட்டன்	9
இழந்ததை	31
இழித்தனர்	83
இழிந்த உடையை	17
இழிந்த பொருள்	175
இழிவுகளை	195
இனிதுறும்	11
இன்றவன்	13
இன்றை நிலைமை	15
இன்சொற்	143
இன்பம்	169
இன்னாத	143
இன்னுயிரும்	99
ஈட்டுதே னீயை	135
ஈயும் சிலந்தியும்	115
உகரத்தோ	117
உச்சி கரவானால்	159
உடம்பார்	123

	பக்கம்
உடம்பை	123
உடலுக்கு	125
உடலெங்கும்	185
உடனே	57
உடனொன்றாய்	71
உடன் கூடி	17
உப்புகு மாசு	127
உண்ட பழக்கம்	161
உண்டென	89
உணர்ச்சிக் குயிரே	27
உணர்ச்சி மரத்தவர்	49
உணர்ச்சி வயப்பட்ட	147
உணர்ச்சி வயப்பட்டால்	177
உணர்ந்தால் உணர்வர்	91
உணர்ந்தால் மொழி	85
உணர்ந்தாயேல்	9
உயிரே உயிரின்	165
உயிரொன்று	161
உயிர்போய	123
உயிர்நிலை அன்பு	141
உயிர்நிலைப் பேறான	123
உயிர்ப்புக் கிடமென	127
உரம்போ டுழவன்	35
உருக்கொண்டு	139
உருத்தல்	129
உரைத்தால்	71
உரைப்பார்	89
உலகத்துக்கு	197
உலகத்தை	141
உலக வளத்தை	163

	பக்கம்		பக்கம்
உலகுக்கே	105	உன்னிய	55
உலைவானால்	95	ஊக்கின்	75
உவப்பார்	73	ஊடகம்	187
உழவன்	185	ஊட்டி	169
உழைக்க	95	ஊணகம்	167
உழைப்பால்	135	ஊருக்கு	135
உழைப்பாளர்	71	ஊரெல்லாம்	173
உழைப்பை	197	ஊர்ந்து	73
உழையாமல்	71	ஊர்வாரி	199
உளக் கூட்டே	157	ஊனுடம் பாலயம்	123
உளதிழக்க	67	எங்கோ	171
உள்ளகம்	157	எடுத்தெறிந்து	147
உள்ள திழத்தலை	113	எட்டாக்கனி	23
உள்ளத் தனைய	137	எண்ணாமல்	149
உள்ளத்தில்	183	எண்ணினார்	179
உள்ளம் இலாதானுக்கு	153	எண்ணினால் இன்னும்	17
உள்ளம் உடைமை	137	எண்ணினால் பின்னூலாம்	47
உள்ளம் சரி	197	எண்ணினால் வாக்கு	71
உள்ளம் சிறுத்தால்	191	எண்ணின் அயலாற்	97
உள்ளார்ந்த அன்பில்	141	எண்ணின் இடை	81
உள்ளார்ந்த நட்பை	151	எண்ணின் உலகத்	67
உள்ளிழுக்கும்	127	எண்ணின் மணக்	53
உள்ளினிக்க	193	எண்ணுவார்	9
உறங்கி	169	எண்ணோ டெழுத்தை	107
உறவான	25	எதுவும் இழப்போம்	17
உறுதுயர்	73	எதுவும் எழுத்துடன்	11
உறுபொருள்	29	எத்தால் இயல்	165
உற்றார்	59	எரிச்சல்	173
உனக்கறி வுண்டானால்	91	எரியைக்	155
உன்னால்	85	எல்லாமும்	105

	பக்கம்		பக்கம்
எல்லாம் இழப்பென்றால்	159	ஏற்பளித்த	41
எவரால்	65	ஏற்றம்	29
எவர் நாடும்	13	ஏற்றுண்ணல்	91
எவ்வள வுண்டாலும்	125	ஏற்றுவந்த	45
எழுதிய	67	ஏனழித்தார்	13
எழுத்தில்	27	ஏனென்று	89
எழுந்தால்	87	ஏனோதான்	65
எளிதாக	71	ஒதுக்கி	73
எளியராய்	143	ஒத்த	39
எள்ளா திடித்து	151	ஒப்ப	185
எற்றென் றிரங்குவ	99	ஒப்புரவு	183
எனக்கொன்று	135	ஒருங்கமைந்த	81
எனவென்ன	17	ஒருங்கழித்த	7
எனற்கு நீ	35	ஒருங்கென்னும்	67
என்றதால்	45	ஒருமைப் படாமல்	183
என்றந்த	59	ஒருவன்	167
என்ற படியே	25	ஒவ்வா	125
என்றவிவை	27	ஒழிக்கவே	97
என்றான்	23	ஒழித்தார்	43
என்றுமே	45	ஒற்றைக்கால்	165
என்றும் அடிமை	41	ஒன்றா	97
என்றும் ஒருமை	69	ஒன்றுநன்று	99
என்றென்றால்	67	ஒன்றேதான்	97
என்றென்றும்	83	ஓசை	115
என்னென் றறியா	105	ஓடி	165
என்னென் றறியாமல்	105	ஓதுவாய்	85
என்னே எழுந்த	21	ஓர்ந்த அறிவியல்	27
ஏகாரம்	117	ஓர்ந்த உலகம்	27
ஏழிசை	109	ஓர்ந்தால் தமிழர்	15
ஏழுநாய்	137	ஓர்ந்தால் தமிழும்	33

	பக்கம்		பக்கம்
ஓர்ந்து	17	கரவும்	119
கசடே	63	கராவே	119
கடமை	95	கருதினால் செஞ்	51
கடிதாக	61	கருதினால் நீ	93
கடித்ததை	147	கருமமே	35
கடையர் கயவர்	197	கர் நீண்டு	119
கடையர் தமையும்	185	கலப்புத்	93
கட்சி	181	கல்வியில்	181
கட்டம்	103	கல்லடியில்	143
கட்டமை	119	கல்லாக் குறை	131
கட்டவிழ்த்த	199	கல்லால்	145
கட்டான	157	கல்லென்னும்	115
கட்டுக் குலைப்ப	199	கவர்ச்சி	95
கணக்கை	23	களவுப்	165
கணித்தான்	31	களித்தார்த்து	93
கண்டதால்	17	கன்றீன்	159
கண்டார்	57	காக்கா	115
கண்டாலும்	31	காக்கும்	35
கண்டால்	35	காட்சி	187
கண்டிருந்தால்	37	காட்டாற்று	197
கண்ணருமை காணும்	129	காணரிய	55
கண்ணருமை பேணல்	129	காணவும்	5
கண்ணன்ன	151	காணாக்	67
கண்ணை	129	காதலின்	177
கண்ணேஎன்	129	காதைக்	131
கண்ணே மணியே	171	காப்பியர்	29
கண்மூடி	43	காப்புநாண்	53
கதிரியக்கம்	25	காரே	119
கதிர்ப்பிறப்பு	1	கார்திரிந்து	119
கரடு	119	காலடி	161

	பக்கம்		பக்கம்
காலமே	119	குற்றம் உரைப்பார்	151
காலம்	107	கூடாக் குணமே	141
காவடிச்	111	கூட்டாக	157
காவல்	63	கூட்டுக் குடும்பத்தில்	157
காழகம்	119	கூட்டுச் சுவை	157
காளியும்	119	கூட்டுத் தொழிலின்	159
காளைபோல்	169	கூட்டுமா	195
கிளர்ச்சியே	11	கூட்டுற வாலை	159
கீற்றோலை	5	கூட்டுறவின்	159
குடமாடு	111	கூட்டேதான்	157
குடிக்கப்	189	கூவக் கொடு	199
குடிதாங்க	169	கூறினார்	45
குடிப்பது	189	கூறுங்கால்	49
குடியர சாக்க	181	கூறுதல்	81
குடியா இளைஞர்	189	கூறும் மலை	1
குடியைக்	189	கூற்றத்தை	179
கும்மி குரவை	111	கெடுப்பார்	191
குரலே	115	கெட்டபின்	89
குரல்வளை	115	கெட்டான்	199
குர்க்குர்க்	115	கேடில்லா	135
குவிந்துள்ள	61	கேடு நாம்	85
குழந்தைப்	169	கேடு வர	191
குளிர்ந்தான்	21	கேடென்று	63
குறிக்கொண்டால்	99	கேட்ட செவி	101
குறிக்கொண்டு	57	கேட்பார்	191
குறிக்கோளால்	19	கேள்வி	131
குறித்துணர்ந்தால்	89	கைகால்	105
குறியே	3	கையாலே	137
குறைவற்ற	49	கையில்	163
குற்றம் அறிவார்	175	கொக்கென்னும்	115

	பக்கம்		பக்கம்
கொடுத்தமைந்த	35	சாவாமல்	177
கொடையிற்	57	சிக்கு முதலாக	117
கொண்ட இசை	43	சிதைத்தார்	85
கொண்டழித்த	33	சித்த மருத்துவம்	107
கொண்டனம்	55	சிலம்பின்	115
கொழுத்த	41	சிலருள் முன்	59
கொளத்தக்க	57	சிறந்த நிலை	35
கொள்வாயேல்	81	சிறப்பென்ன	89
கொள்ளரிய	49	சீராம்	59
கொள்ளி எடுத்தவன்	153	சீர்த்திருத்தம்	187
கொள்ளி முடிவான்	187	சீர்த்த அறிவு	133
கொள்ளி வாய்ப்	151	சீர்த்த மொழிகள்	1
கொள்ளை கொலை	197	சுடர் எழும்பும்	33
கொள்ளைப்	195	சுமைதாங்கி	167
கொள்ளைமேல்	187	சும்மா இருக்கும்	145
கொள்ளை யடிப்பு	189	சுற்றும்	153
கொள்ளையன்	189	செப்பின்	49
கொள்ளையும்	187	செயலுக் கெதிரிடை	73
கோட்டைப் பொறி	107	செய்தவை	97
கோயிலை	85	செய்தற்கு	59
கோழைகள்	179	செலவிடலில்	167
கோளழிக்கு	1	செவிக்குறை	131
கோளாகக்	19	செவிப்பறை	131
கோளா றெனும்	133	செவிட்டில்	131
சகர இகரம்	117	செவியுள்	193
சம்பளத்தில்	167	செவியுறுப்பு	131
சன்மார்க்கம்	111	செறித்தாலும்	77
சாக்காட்டை	179	செறிந்த	21
சாந்தும்	193	சேயால்	161
சார்ந்ததாம்	69	சேர்த்த வரியை	23

	பக்கம்		பக்கம்
சேர்ந்த தமிழன்	3	தம்குற்றம்	149
சேர்ந்தமைந்த	55	தம் நண்பர்	151
சொலத்தக்க	65	தம் நலம்	149
சொலப்படும்	47	தம்நோய்க்கு	161
சொல்லவே	47	தம்மறி வில்லாமல்	175
சொல்லா நிலை	145	தம்மால்	175
சொல்லால்	145	தம்மில்	167
சொல்லாளன்	145	தம்முகத்தை	149
சொல்லி	145	தம்முடலை	175
சொல்லுதவி	145	தம்முயிர்	163
சொற்பஞ்சம்	103	தம்மை	149
சொற்போரும்	111	தரவொருவர்	89
சோற்றில்	143	தவறினார்	37
சோற்றுக்கு	125	தவிராமல்	23
தகவாய் இயக்கும்	25	தவிர்த்தால்	91
தகவாய் எழுது	87	தற்கேடர்	175
தகவே	49	தற்கொடையர்	179
தக்கார் உணர்த்த	153	தற்கொடை வேறாகு	179
தக்கார் எனும்	113	தற்பெருமை	145
தடியெடா	43	தனித் தனிக்	15
தடுத்தாட்	151	தனியார் துணி	159
தண்டனைக்கு	153	தனியார் வணிகம்	159
தத்தித் தடுமாறி	163	தனியுறுப்பு	185
தந்திரமாய்	39	தனைநம்பி	137
தப்பாய்	149	தன் கட்சி	185
தமிழாட்சி	87	தன்கண்ணை	151
தமிழில்	83	தன் தலையைத்	179
தமிழென்ப	3	தன் பொறியை	137
தமிழென்ன	1	தன்மகட் கின்ன	171
தமைப்போல்	183	தன்முகம் பாரான்	121

	பக்கம்		பக்கம்
தன்முகம் பார்த்தல்	121	திக்கற் றவரை	139
தன்னம்பிக்கை	137	திடமாய்	81
தன்னலம் கொள்ளை	187	திடமான	75
தன்னலம் தோன்றாத	183	திடமிக்க	37
தன்னில்	177	திட்டும்	171
தன்னினம்	15	திருத்தமிழை	9
தன்னைத்தான்	173	திருந்தார்	147
தாமரை	157	திருந்தினார்	97
தாமறிய	13	திருப்புகழ்	111
தாமாக	61	திருவாளன்	91
தாமே அரசாளல்	77	திறமான	33
தாமே எழும்ப	87	திறவோன்	73
தாமே ஒலிக்கும்	21	தினந்தோறும்	97
தாமே தமிழுலகத்	57	தின்னாமல்	163
தாம் கொண்ட	11	தீக்குள்	175
தாம் தெய்வம்	139	தீர்த்தார்	39
தாம்வாழ	41	தீர்வும்	33
தாயாரை	171	தீவளர்த்தல்	197
தாயுளம்	141	துடைப்பத்தில்	147
தாய்ப்பால்	101	துணிவாளன்	137
தாய்மொழிப் பற்ற	105	துணிவுனக்கு	19
தாய்மொழி மூலம்	101	துயர் தாங்கு	67
தார்கொண்டு	37	துரும்பும்	9
தாழ்வும் உயர்வும்	77	துன்பமே	175
தானாடா	13	துன்பம்	175
தானும்	191	தூய துறவன்	141
தானென்னும்	173	தூய்திலா	129
தானே இசையொடும்	87	தூய்மை	147
தானே கெடு	173	தூற்றி	193
தானே தான்	135	தெய்வ உறை	139

	பக்கம்		பக்கம்
தெரிந்த பகை	97	தொலைந்தது	43
தெரிந்த சீர்	65	தொழிற்கல்வி	103
தெரிந்தவன்	5	நச்சினார்க்கு	47
தெரிந்தால்	79	நம்பிக்கை	137
தெருத்தோறும்	87	நயமான	59
தெளிந்தசிந் தாமணி	53	நயன்மிக்க	11
தெளிந்தால் தமிழ்ப்	1	நலத்தொல்	53
தெளிந்தால் மொழி	91	நலித்த	17
தெளிந்து	9	நல்ல	155
தெளிவாகச்	29	நல்லாரைச்	155
தெளிவாகப்	47	நல்லார்	155
தெற்கடிக்கும்	143	நல்லோரின்	155
தேடி அமைத்தல்	61	நல்லோர்	181
தேடி அலையாமல்	155	நன்குணரா	77
தேடிப்போய்ச்	173	நன்றால்	25
தேடிப்போய்ப்	195	நன்னெறிகள்	47
தேரிழுக்கச்	139	நாகாக்க	173
தேர்ந்த உயிரி	27	நாடறிந்த	59
தேர்ந்த தெளிவரும்	57	நாடாண்ட	37
தேர்ந்த நம்	65	நாடாளு	185
தேவாரம்	83	நாடியெலாம்	99
தேளே	145	நாடின்	47
தேனூறும்	193	நாடின்று	11
தேன்மொழி	93	நாடும்	11
தொடர்ந்த	23	நாடெல்லாம்	1
தொடர்ந்ததால்	69	நாடே	187
தொட்டாற்	169	நாட்குறிப்பு	113
தொண்டு	135	நாட்டில்	197
தொலைக்கவே	19	நாட்டுக்கு	185

	பக்கம்		பக்கம்
நாட்டுக்கும்	189	நீக்கா தயற்	29
நாணம்	89	நீ செய்யும்	171
நாமேதாம்	105	நீட்டி	113
நாவாயால்	103	நீயென்றால்	89
நாவால்	3	நீயென்ன	3
நாளென	113	நீர்பாட	109
நாளை	125	நூலழிந்த	9
நாற்றே	27	நூலில்லை	103
நானிலப்	107	நூலை	23
நிலமெல்லாம்	33	நூறுவகை	159
நிலைத்தவை	7	நூற்றெட்டு	109
நிலைபெற்ற	45	நூற்றொரு	107
நிலைப்போம்	97	நெடிலுக் கிரண்டு	23
நிலையாம்	95	நெட்டோட்டம்	153
நில்லா	99	நெறிகாக்கும்	55
நிறைகோல்	113	நெறிப்படி	93
நிறைமறைத்து	151	நெறிவகுத்தல்	59
நிற்பாய்	19	நெற்கொழித்த	181
நினைத்த	3	நேயப் பெருக்கால்	183
நினைத்தால் தமிழர்	15	நேரில்	3
நினைத்தால் தமிழனாய்	69	நேருக்கு	151
நினைப்பாயேல்	99	நேரோடும்	153
நினைப்பாய்	93	நேர்பகையே	153
நினைப்போம்	81	நொடியளவும்	177
நின்றழித்த	15	நோயாக்கு	127
நின்றார் அயன்	57	நோயால்	125
நின்றார் பகை	37	நோவால்	75
நின்று	73	பகர அகரம்	117
நீ என்னும்	117	பகர இகரம்	117

	பக்கம்		பக்கம்
பகர உகரம்	117	பர்ரோ டகரம்	117
பகுத்தறிவு	187	பல சொல்ல	51
பகுத்தார்	41	பல துளி	157
பகையழிக்க	73	பலர்காத்தும்	7
பகையின்றி	81	பலர்மெச்சு	55
பக்கத்து	195	பலுக்கும்	21
பக்கம்	177	பல்லுக்கு	143
படம்வரைந்தார்	53	பழுஞ்சேறாய்	165
படிக்கட்டின்	41	பழிக்குப் பழி	193
படிக்கும்	51	பழிசெய்வார்	63
படித்தவர்	9	பழித்து	191
படித்தல்	101	பள்ளி	101
படித்தும்	7	பறித்தவெலாம்	37
படிப்பழித்தார்	41	பறித்தாலும்	39
பட்ட துயரெல்லாம்	161	பற்றிய புற்று	155
பட்ட மரத்தில்	173	பற்றியம்	125
பட்டம்	103	பன்னீர்	193
பட்டறிவு	101	பார்க்கும் அகர	11
பட்டுணி	161	பார்க்கும் மருத்துவம்	47
பட்டுறை	51	பாரெல்லாம்	13
பண்டைக்	103	பார்த்தார்க்கு	51
பண்பட்டான்	199	பார்த்தால் கிரந்த	67
பண்பாட்டு	197	பார்த்தால் தமிழின	65
பண்பாட்டை	199	பார்த்தால் தான்	85
பண்பும்	195	பார்த்தால் வடவரும்	79
பண்வகுத்து	109	பார்ப்பாய்	19
பதித்தார்	43	பார்வை	149
பரிசென்று	37	பாலாடை	107
பருவத்தின்	165	பாலை	139

	பக்கம்		பக்கம்
பிரியேன்	165	புன்கோ	153
பிள்ளை கருவுள்	161	பூணி	109
பிள்ளையால்	163	பெண்களே	195
பிள்ளை வளமே	163	பெண்ணின்	171
பிறப்பவள்	1	பெண்ணென்றால்	171
பிறர்வயப்	37	பெண்ணின் இழி	195
புகல் வட்டி	71	பெண்ணைப் படுத்தும்	195
புகவேண்டும்	35	பெண்ணைப் படுத்துவாள்	171
புகழ்க்காக	61	பெய்யும்	39
புகழ்தான்	61	பெரிதாக	91
புகழ்ந்தவை.... செய	71	பெரிது	5
புகழ்ந்தவை.... செயல்	61	பெரிய தொல்	53
புகன்றார்	53	பெரிய மொழி	93
புகுந்த பகையை	33	பெருங்குறை	69
புகுந்தார்	45	பெற வேண்டும்	79
புகைதூசி	129	பெற்றதும்	191
புண் படுத்தல்	143	பெற்றபின்	39
புதைக்கவே	19	பெற்ற பெரும்	55
புதைக்குள்	31	பெற்றவ ரேனும்	75
புதைத்த	179	பெற்றவெலாம்	161
புரிந்தால் தமிழ்	49	பெற்றோரை	163
புரிந்தால் பகைவர்	81	பேசினால் குற்றம்	51
புரிய நினையார்	149	பேசினால் போதும்	19
புரியாமல் ஓதி	101	பேச்சிழந்த	7
புரியாமல் செம்மறி	97	பேரா.... பெரிது	145
புரியார்	149	பேரா.... பெரியாராய்	155
புழுவாய்	169	பேரிகை	109
புறம்பழியா	121	பேர்தானும்	13

	பக்கம்		பக்கம்
பேறாகப்	29	மதிப்பாய்	17
பேறெல்லாம்	31	மதியோடு	1
பேற்றுக் குரியது	59	மருமகளை	171
பொங்கல்	157	மலராக	121
பொசுக்கும்	19	மலையை	155
பொதுமை	183	மழலை	163
பொய்யுரைத்தல்	149	மன்னனே	89
பொலிவாய	91	மாலை	193
பொழில்தான்	3	மாவென்னும்	115
பொறியில்லார்	135	மாழை	107
பொற்புக் குறை	5	மாற்றாரின்	179
பொற்போ	93	மானக் குறை	177
போக்கடித்தார்	69	மிகமுற்று	33
போய வழிக்குப்	49	மிக்க கணக்காயன்	23
போய்த்தட்டில்	83	மக்க கலை	7
போர்ப்பறை	109	மிக்குயர்ந்த	25
போல்பார்ப்பார்	45	மீட்டெடுக்கும்	81
போற்றினால் ஊறெல்	35	முகத்தியல் என்ன	121
போற்றினால் முற்றாய்	29	முகத்தியல் காட்டல்	121
போனால்	19	முகத்தின்	121
மண விருந்தை	167	முகமாறி	121
மணவிலக்கு	165	முகமென்ன	121
மண்டையில்	191	முகம்பார்த்து	121
மதத்தால்	39	முடித்தான்	77
மதிகெட்டு	63	முடித்தும்	53
மதித்த தொல்	45	முடியும்	7
மதித்த வரும்	43	முரண்டர்	63
மதித்தால் தான்	51	முழுதிலா	79
மதித்தால் மறைமலை	57	முளையதை	127

	பக்கம்
முறைகேடாய்	7
முறையை	31
முற்பகல்	113
முனைப்பால்	43
முன்னாண்ட	87
முன்னிலையாம்	141
முன்னிற்கும்	31
முன்னின்	79
முன்னேதாம்	69
மூக்கினை	127
மூக்கு நலம்	127
மூக்குள்	127
மூச்சுப் புகல்	127
மூளைத் தலைமை	133
மூளைப் பகுதி	133
மூளைப் பதிவு	133
மூளை நலமே	133
மூளை முடிச்சு	133
மூன்றதி காரம்	11
மூன்றும்	59
மூன்று வகை	21
மூன்றென்ற	17
மெய்யதை	29
மெய்யியல்	27
மெய்யேநீ	123
மெய்யே.... மெய்	123
மெய்யே.... மேன்	123
மெய்யை	123
மேலறிவும்	101

	பக்கம்
மேலிருந்து	139
மேலில்லா	49
மேலோர்	41
மொழியொப்பும்	183
யாகாவா	125
யாரால்	65
யாரோதாம்	65
யார்க்கும்	55
யான்காண	197
யான் சொல்வ	183
வகுத்த	23
வகைகெட்ட	77
வகையாய் எழுத்தை	27
வகையாய்ப் படைத்த	143
வசையாய்	193
வசையே	193
வஞ்ச வடிவாய்	173
வஞ்சனுக்கு	153
வடக்கிருத்தல்	179
வண்ணக் கலை	105
வண்ணம் வரி	111
வண்ணம் வனப்பு	129
வந்தவுயர்	57
வந்தார்	143
வந்தால்	85
வயிற்றில்	167
வரலரிய	55
வரவைத்த	53
வரிகொண்டார்	83

	பக்கம்		பக்கம்
வரியெழுத்தில்	83	விடி நாள்	31
வருகே டனைத்து	63	விடுத்தால்	95
வரும்பின்னை	47	விட்டொளிரும்	95
வலக்கால்	109	விதைத்தால்	93
வரைதந்த	39	வித்து	3
வழிநோக்கி	61	வியந்தான்	25
வழியறிவான்	11	விரிந்து	5
வழிவந்த	79	விரைந்து	87
வளரிப்	107	வில்லடி	111
வளரும்	187	விளம்பினால்	65
வளர்ந்தநாள்	169	வீட்டுக்கும்	173
வளர்ந்த நிலையில்	5	வீட்டுநலம்	185
வன்முறை	195	வீண்படுதல்	29
வன்முறையை	199	வீழ்வாரை	139
வாக்குக்கு	181	வீறுற்ற	39
வாடும்	139	வீறெய்தி	51
வாயடக்கம் வாய்த்தார்	161	வீறெய்து	21
வாயடக்கம் வாயாதார்	125	வெல்லும் சொல்	147
வாய்த்த பிறப்பில்	99	வெளித்தோற்றி	109
வாய்த்த மலையே	5	வெளிமாசும்	127
வாய்த்த வழி	69	வெள்ளத்து	139
வாய்பிளந்து	137	வெள்ளம்	169
வாய்புடைத்	85	வெறியன்	191
வாய்மையும்	189	வெறியாடு	111
வாரிச் சுருட்ட	135	வென்றுநான்	177
வாழ்பவர்	189	வேம்பும்	175
வாழ்வு தமிழுக்	87	வைக்கத்	79
வாழ்வு வெறுப்பால்	177	வையகம்	103
வானோங்கு	107	வையத்தின்	103

★ கதிர்ப்பிறப்புக் காட்டும் கலைத்தமிழைக் கண்போல்
மதிக்கும் மதியே மதி.

★ நயன்மிக்க காப்பியனின் நற்காப்பாம் நூலே
பயன்செய்யும் பல்படை பார்.

★ யாகாவா ராயினும் நாகாக்க என்றதுதான்
சொல்லோ டுறுசுவைச் சுட்டு.

★ நீ என்னும் முன்னிலை நீங்கல் பொருளாதல்
நீக்கு முதலாய் நினை.

★ தேரிழுக்கச் செல்வாரில் தீயணைக்கச் செல்வாரே
நேருயர்ந்த மேலோர் நினை.

–தமிழாயிரம்